விலை : 20.00 website : www.valampurii.lk Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள் : பதினாறு+பதினாறு
வலம்புரி
Valampurii
E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk
SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள்,
ஹோல்கள் (Hall)
விசே. விலைக்கழிவு
வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி.
யாழ்ப்பாணம்.
021 222 5392
(C-6923)
சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2047 மார்கழி 17 ஞாயிற்றுக்கிழமை (01.01.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 013

2015 நாடாளுமன்ற தேர்தல் பரப்புரையில் இரா.சம்பந்தன் மக்கள் முன் பேசியவை

## 2016ஆம் ஆண்டு இறுதிக்குள் தீர்வைப் பெறும் த.தே.கூ தனக்கான அரசியல் பயணத்தை நீட்டிக் கொள்ளாது!

"சுயாட்சியை வடக்கு கிழக்கில் ஏற்படுத்த தமிழ் மக்களே பலமான ஆணை கொடுங்கள்"

- வடக்கு-கிழக்கு இணைப்பு
- சமஷ்டி
- சுயநிர்ணய உரிமை

2016ஆம் ஆண்டுக்குள் தீர்வு என்ற

# சம்பந்தரின் வாக்குறுதி காற்றில் பறந்தது



முயற்சி தொடர்வதாக மீள வாக்குறுதி!

(யாழ்ப்பாணம்) ----------

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான இரா.சம்பந்தன் 2016ஆம் ஆண்டு இறுதிக்குள் தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கு தீர்வு எட்டப்படும் என்ற வாக்குறுதி பொய்த்து போயுள்ளது. இதனால் தமிழ்த் தலைவர்களின் வாக்குறுதிகள் மீது தொடர்ந்தும் நம்பிக்கை வைக்க முடியாத ஒரு சூழல் ஏற்பட்டு வருகின்றது. வவுனியாவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருடைய உருவப்பொம்மை எரிக்கப்பட்ட சம்பவம் இதனை உறுதி செய்துள்ளது.

14 ஆம் பக்கம் பார்க்க....

## விடைபெற்றார் பான் கீ மூன்

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் சபையின் 8 ஆவது பொதுச் செயலாளர் பான் கீ மூன் தனது பதவியிலிருந்து உத்தியோக பூர்வமாக நேற்றுடன் ஓய்வு பெறுகின்றார்.

2007ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் 8ஆவது பொதுச் செயலாளராக பதவியேற்ற பான் கீ மூனின் பதவிகாலம் நேற்றுடன் நிறைவடைந்திருந்தது.

இந்த நிலையில். ஐக்கிய நாடுகள் சபையின் 9ஆவது பொதுச் செயலாளராக போர்த்துக்கல் நாட்டின் முன்னாள் பிரதமர் அன்டானியோ

15 ஆம் பக்கம் பார்க்க....

## அரசியலமைப்பு உருவாக்கத்திற்கு எதிராக அரசுக்குள்ளேயே சதி

மகிந்த கங்கணம் கட்ட அதுவே காரணம்-விக்கிரமபாகு



(கொழும்பு)

புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கு நல்லாட்சி அரசாங்கம் முயற்சித்து வருகின்ற நிலையில் அதனை தவிடுபொடியாக்குவதற்கு அரசாங்கத்திற்குள்ளேயே சில பிரிவினர் முயற்சி செய்துவருவதாக நவ சமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

இந்தக் குழப்பகரமான சூழ்நிலையை சந்தர்ப்பமாக பயன்படுத்திக் கொண்டு அதிகாரத்தை காணப்பத்து ஆட்சியைக் கைப்பற்றிக்கொள்ளும் முயற்சியில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கங்கணம் கட்டிக்கொண்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

இனவாதத்தை தோற்கடிப் போம் ஜனநாயகத்தை வலுப்படுத்து வோம் என்ற தொனிப்பொருளில் நவ சம


15 ஆம் பக்கம் பார்க்க....

## கேரள கஞ்சாவுடன் நபரொருவர் கைது

(கரணவாய்)

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு கடத்திச் செல்லப்பட்ட 1.470 கிலோக்கிராம் கேரள கஞ்சாவுடன் மறைக்காட்டு பகுதியில் சேர்ந்த இளைஞர் ஒருவரை காங்கேசன்துறை பிராந்திய பொலிஸ் அதிகாரியினர் கைது செய்துள்ளனர்.

15 ஆம் பக்கம் பார்க்க...




## மகிந்தவுக்காக உழைத்தோம்; அவர் காலைவாரி விட்டார்!

புலம்புகிறது பொது பல சேனா

(கொழும்பு )

கடந்த 2015ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்காக தாங்கள் பரப்புரைகளில் ஈடுபட்டதாக தெரிவித்த பொது பல சேனா அமைப்பு தற்போது தம்மீது வீண் பழி சுமத்துவதாகவும் கவலை தெரிவித்துள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் தன்னைத் தோற்கடிப்பதற்கு ஜதேகவுடனும், சம்பிக்க ரணவக்கவுடனும் இணைந்து பொது பலசேனா பணியாற்றியதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியிருந்தார். வெளிநாட்டுச் செய்தியாளர் சங்கத்தைச் சேர்ந்த ஊடகவியலா

15 ஆம் பக்கம் பார்க்க....

## சர்வதேச பங்களிப்புக்கான காலம் நெருங்கியுள்ளது!

அரசியல் தீர்வு தொடர்பில் மாவை கருத்து



(கிளிநொச்சி)

"தமிழ் மக்களை அரசியல் தீர்வு முயற்சிக்கு வலியுறுத்திய இந்தியா உள்ளிட்ட சர்வதேசம் தங்களுடைய பங்களிப்பை செய்ய வேண்டிய காலம் நெருங்கியுள்ளதாக தமிழ் தேசிய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி கிளையில் நேற்று இடம்பெற்ற வருட இறுதி ஒன்று

15 ஆம் பக்கம் பார்க்க....

அதிகரித்த மின்கட்டணத்துடன்
நெருக்கடியில் உள்ளீர்களா?
உங்களுக்கு நாம் உதவுகின்றோம்.
சூரிய மின்சாரம்
25 வருட உத்தரவாதம்
திருப்திகரமான சேவை மற்றும் ஆலோசனைக்கு அழையுங்கள்
JLANKA TECHNOLOGIES
(சி-6934)
JLANKA Technologies (Pvt) Limited
Head office- 011 2 786 786
259, Temple Road, Nallur, Jaffna.
www.jlanka.com 021 221 3660

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## உடற்பருமன் கொண்டோருக்கும் உடல் எடை குறைவானோருக்கும் ஓர் அற்புதமான செய்தி

ஆண், பெண் இருபாலாருக்கும் உகந்தது. 2 வாரங்களில் நல்ல அழகான மேனி யுடன் திகழ ஆயுள்வேத கோர்பல் ஔடதம், பால்மா, குளிசை,

**உடல் பருமன் கொண்டோருக்கு**

**விலை 3500/=, 5500/=, 9000/=**

உடல் எடை குறைத்தல், ஊளைச்சதை, மார்பு, கை, கால், வயிறு குறைத்தல் வயிற்றுக்கோளாறு, நாட்பட்ட அஜீரணம், மலச்சிக்கல் அனைத்துக்குமான ஆயுள்வேத மருந்து விற்பனைக்கு உண்டு.

**ஆச்சரியம் வயிறு, மார்பு 10 நாள்களில் குறைக்கும் கிறீம் எங்களிடம் உண்டு.**

**உடல் எடை குறைவானோருக்கு**

**விலை 3500/=, 5500/=, (24000/=, 3 மாதத்திற்குரியது.)**

உடல் எடை கூட்டுதல், ஒட்டிய கன்னங்கள் குண்டுக் கன்னங்களாக மாற்ற பல கீனம், கணச்சூடு, எதைச்சாப்பிட்டாலும் உடம்பு தேறுகிறதேயில்லை என்கிற வர்கள், மார்பு கூட்டுதல் அனைத்துக்குமான ஆயுள்வேத மருந்து விற்பனைக்கு உண்டு. மேலும் கறுப்பு, கண்கருவளையம், உதட்டு கறுப்பு, பருக்கள், வடுக்கள், காயங்கள், கருந்திட்டுக்கள், கரும்புள்ளிகள் நீக்கும் கிறீம் விற்பனைக்கு உண்டு. தேவையற்ற ரோமம், முகம், உடம்பு பகுதியில் உள்ள காய்கள் அகற்றும் கிறீம் விற்பனைக்கு உண்டு. **(விலை 3500/=, 5500/=)** (6718)

தொடர்புகளுக்கு : 077 210 6155 221, நாவலர் றோட் (பிறவுண்றோட் சந்தி அருள் கொமினிகேஷன் அருகில்) யாழ்.



## கோழி விற்பனை நிலையம்

உள்ளூர் உற்பத்தி செய்யப்பட்ட புறோயிலர் (கல்பேட்) சுகாதார முறைப்படி சுத்தம் செய்யப்பட்டு தினமும் காலை 6 மணி தொடக்கம் மாலை 7 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்**
**19,முருகேசர் லேன்,நல்லூர்**

(C-6925)



## BEACON

வெலிங்டன் சந்தி, யாழ் நகர்

A/L 2019

கலை, வர்த்தக, கணித விஞ்ஞான தொழில்நுட்ப

பிரிவு

**ஆரம்பம்:-07.01.2017**
**காலை 9 மணி**

(C-6931)



## பிரத்தியேக சாரதிப் பயிற்சி

தங்கள் வசதிக்கேற்ப ஒதுக்கப்படும் நேரங்களில், தங்கள் இல்லங்களிற்கோ வேலைத் தளங்களிற்கோ நாம் விஜயம் செய்து. தங்களிற்குரிய சாரதிப் பயிற்சியினை வீதிச் சட்ட ஒழுங்குகளிற்கு அமைய மிகச் சிறப்பான முறையில் அனுபவம் வாய்ந்த பயிற்றுனரால் பயிற்றிவிக்கப்படும்.

**தொடர்பு :- 0773842043** (7337)



## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

**பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்**



### பிரெஞ்சு மொழி

பிரான்ஸ் FOREIGN MINISTRY & French EMBASSY யின் கீழ்

யாழில் 40 வருடங்களாக AF இன் பயணம்...

இயங்குகின்ற ஒரே சர்வதேச நிறுவனம் AF, உலகம் முழுவதும் 1000 கிளைகள். இலங்கையில் சர்வதேச பிரெஞ் Certificate ஐ AF மட்டுமே வழங்குகின்றது.

**பிரெஞ்சு மொழிபெயர்ப்புக்கள் : யாழில் வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் இல்லை.**

**இலவசம் :** PHOTOCOPIES, படித்ததற்கான LETTER, VISA FORM நிரப்புதல் CD, BOOKS பாவனை ...



**பிரான்ஸ், கனடா, சுவிற்சர்லாந்து ...**

செல்வோர் : யாழ், வன்னி, பிற மாவட்டங்களைச் சேர்ந்த நூற்றுக் கணக்கானோர் AF இல் படிக்கிறார்கள்.

**தை மாத வகுப்புக்களுக்கு உடன் பதியவும்....**

**021 222 8093** 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (7307)

கச்சேரி பஸ்நிலையம்→புகையிரதகடவை→AF (வெள்ளை மாடிக்கட்டடம்)



## யாழ் புத்தகசாலை புதிய முகவரியில்

ஆஸ்பத்திரி பின் வீதி ஞானம்ஸ் ஹோட்டலுக்கு அருகில் இயங்கிய யாழ் புத்தகசாலை 09.12.2016 முதல் கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணத்தில் புதிதாக திறந்து வைக்கப்பட்டுள்ளது. இத் திறப்பு விழாவை முன்னிட்டு விசேட விலைக்கழிவில் பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**புத்தகங்களுக்கு: 10% - 20%; காகிதாதிகள், எழுதுபொருட்கள், அப்பியாசக் கொப்பிகள்: 10% - 40%**

SALE

தொடர்புகளுக்கு :

**யாழ்.புத்தகசாலை**
**இல.22A, கன்னாதிட்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
(சண்முகம் உணவகத்திலிருந்து 7வது கடை)
**021 221 7874, 021 492 7568**

(சி-6932)

*கிளை :* **யாழ்.புத்தகசாலை**
**கனகபுரம் வீதி, கிளிநொச்சி.**
(கனகபுரம் விளையாட்டரங்கு சந்தி)
**021 492 7625**



வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

021 567 1532


## மணிவிழா வாழ்த்து

### வேலாயுதபிள்ளை ஞானகாந்தன்



39 ஆண்டுகள் ஆசிரியராய், நல்ல அதிபராய் கல்விப்பணி புரிந்த வே.ஞானகாந்தன் பல்லாண்டு வாழி... வாழி...

**வாழ்த்துவோர்:**

**ஞானதிருக்கேதீஸ்வரன் குடும்பத்தினர்.**
(K.T.C *கோண்டாவில்*)

(7345)

## நன்றி நவிலல்



செல்வன்

### ருக்மினிகாந்தன் சாரங்கன்

30.12.2016 நடைபெற்ற செல்வன் ருக்மினிகாந்தன் சாரங்கன் அவர்களின் மிருதுங்க அரங்கேற்ற நிகழ்விற்கு எமது அழைப்பை ஏற்று வருகைதந்து சிறப்பித்த பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர்கள், மூத்த கலைஞர்கள், உறவினர்கள்,அன்பர்க்ள், நண்பர்கள் மற்றும் ஆசியுரைகள், வாழ்த்துரைகள் வழங்கிய பெரியோர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

திரு.திருமதி வ.ருக்மிணிகாந்தன்
குடும்பத்தினர்

(7346)


## 32வது அகவையில் தடம் பதிக்கும்



*யாழ்.* **கலாலயா**

*பயிற்சியகம்*

**விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.**
**(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)**

**மகளிருக்கான பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**



- *கேக் ஐசிங், உணவு தயாரித்தல்,*
- *Hair Dressing & Styling* (*கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்*)
- *முக அழகுக் கலை* (Facials)
- Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகுபடுத்துதல்)
- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,

**மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

- பிளவ்ஸ், சாறி பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள். **(கிழமை நாட்களில் மட்டும்)**

(கு-7053)

**சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம்: 15.01.2017 (ஞாயிறு)**
**கிழமைநாள் பிரிவுகள்: 16.01.2017 (திங்கள்)**
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.
-இயக்குநர்-


## மரண அறிவித்தல்



(கு-7055)

### அமரர் செல்லையா தியாகராஜா
(வருமானவரி கணக்காய்வாளர்)

நாவலர்மடம் கரணவாய் மத்தியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா தியாகராசா அவர்கள் நேற்று (31.12.2016) சனிக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற செல்லையா - பொன்னம்மா தம்பதிகளின் புதல்வனும், காலஞ்சென்ற சின்னத்துரை - சின்னம்மா தம்பதிகளின் மருமகனும், ஜெயராணி அவர்களின் அன்புக் கணவரும், றோகினி(பிரதேச செயலகம் -கரவெட்டி) அவர்களின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சுப்ரமணியம், நடராஜா, கிருஸ்ண மூர்த்தி (ஆசை அண்ணா) மற்றும் தாமோதரம்பிள்ளை இலட்சுமிதேவி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.01.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர் - தொ.பே: 0212262113

# தமிழ் மக்களுக்கு நீதியோடு கூடிய நிரந்தரத் தீர்வைத் தரும் ஆண்டாகட்டும்



2017 ஆவது புதிய ஆண்டு மலருகின்ற வேளையில் உங்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகிறோம். இப்புதிய ஆண்டு இறையருள் நிறைந்ததாக உங்கள் உள்ளத்து எண்ணங்களை நிறைவு செய்யும் ஆண்டாக இறையாசீர் வேண்டி வாழ்த்துகிறோம்.

கடந்த ஆண்டு முழுவதும் இறைவன் பொழிந்த அனைத்து வரங்களுககும் இறைவனுக்கு நன்றி கூறிக் கொண்டு இவ்வாண்டிலும் இறைவன் தம் அருள் வரங்களைத் தமிழ் மக்கள் அனைவர் மேலும் ஏராளமாகப் பொழிய வேண்டுவோம்.


இலங்கை மண்ணில் தமிழ் மக்கள் நீதியோடு கூடிய ஒரு சுதந்திர வாழ்வை வாழ்வதற்காக சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து அதன் உச்சக்கட்டமாக 30 ஆண்டு காலப்போரை அனுபவித்து இப்போ சற்று அமைதிப் பெருமூச்சு விடுகிறார்கள். கடந்தகால கொடியப் போர் அனுபவங்களும் இப்போது அனுபவிக்கின்ற நிம்மதிப் பெருமூச்சும் பயன்தர வேண்டுமானால் யாப்பில் உறுதிப்படுத்தப்பட்ட ஒரு நிரந்தரத் தீர்வு எட்டப்பட வேண்டும். அதற்காக உழைப்பதும் செபிப்பதும் இக்காலத்தில் நம் ஒவ்வொருவரின் விசேட கடமையாகும். என்றுமில்லாதவாறு இலங்கை மண்ணில் நல்லெண்ண அரசு ஒன்று தோன்றி இன, மத அரசியல் நல்லிணக்கம் உருவாகியிருக்கின்ற இவ்வேளை நீதியோடு கூடிய ஒரு நிரந்தரத் தீர்வினை யாப்பின் வழி அமைத்துக் கொள்ள மிகச் சிறந்த நேரமாகும்.

இந்த நேரத்தை சிறந்த விதமாக இராஜதந்திர ரீதியாகப் பயன்படுத்தி வெற்றியடைய வேண்டியது எமது பணியாகும். இதற்குப் பங்களிப்புச் செய்யக்கூடிய அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

தமிழ் அரசியல் தலைவர்களும் புத்திஜீவிகளும் இதற்காக அரும்பாடுபட்டு உழைக்கவேண்டும். குறிப்பாக அரசியல் தலைவர்கள் தமது சொந்த விருப்பு வெறுப்புக்களைத் துறந்து அரசியல் மற்றும் கட்சி எண்ணங்களை கடந்து ஒட்டு மொத்தமாக இணைந்து அரும்பாடுபட்டு உழைக்க வேண்டுமென தமிழ் மக் கள் பெயரால் வேண்டுகிறோம. புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் அனைவரும் கடந்த காலங்களில் செயற்பட்டதைப்போல் செயற்பட்டு வெளிநாடுகளின் அழுத்தத்தை இவ்விடயத்திலும் இலங்கை அரசிற்கு கொடுக்க அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டுமென அன்பு வேண்டுகோள் விடுக்கிறோம்.மலர்ந்துள்ள 2017 ஆவது புதிய ஆண்டு தமிழ் மக்கள் அனைவருக்கும் இறையாசீர் நிறைந்த மகிழ்வான ஆண்டாக நீதியோடு கூடிய நிரந்தரத் தீர்வைப் பெற்றுத் தரும் ஆண்டாகட்டும். இறையாசீர் என்றும் உங்களோடு இருப்பதாக.

மேதகு கலாநிதி
**ஜஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம்**
ஆண்டகை, யாழ்.ஆயர்

# எதிர்க்கட்சித் தலைவரின் புத்தாண்டு வாழ்த்துக்கள்



2017 ஆம் ஆண்டானது இந்நாட்டின் வரலாற்றில் மிக முக்கிய ஆண்டாக அமையுமென நம்புகிறேன். முன்வைக்கப்படவுள்ள புதிய அரசியலமைப்பின் ஊடாக, எமது தேசியப் பிரச்சினைக்கு நிலையானதும் நீண்ட காலம் நிலைத்திருக்கக் கூடியதுமான தீர்வொன்றை 2017 ஆம்ஆண்டிலே அடைய வேண்டுமென எதிர்பார்க்கிறேன். எமது மக்களிடையே பல விடயங்களில் பன்முகத்தன்மை காணப்படுகின்ற போதிலும்கூட, எதிர்கால சந்ததியினருக்காக அமைதியான சௌபாக்கியமிக்க தேசமொன்றைக் கட்டியெழுப்புவதற்கு அவ்வாறான பன்முகத்தன்மைகளை தடையாக அமைத்துக் கொள்ள வேண்டாமென இந்நாட்டு மக்கள் அனைவரிடமும் நான் வேண்டுகோள் விடுக்கின்றேன். அமைதியும் செழிப்பும் பொருந்திய தேசமொன்றினைக் கட்டியெழுப்புவதற்காக இந்நாட்டின அனைத்து அரசியல் கட்சிகள், சமயத் தலைவர்கள், சிவில் அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரிடமும் ஒன்றிணைந்து கைகோர்க்குமாறு நான் அழைப்பு விடுக்கின்றேன்.கிடைத்துள்ள இப்பொன்னான வாய்ப்பினை கை நழுவவிடாது பயன்படுத்திக்கொள்வதற்கு நாம் இவ்வாண்டிலே திடசங்கற்பம் பூணுதல் வேண்டும்.உங்கள் அனைவருக்கும் பிறந்துள்ள புத்தாண்டானது மகிழ்ச்சியானதாகவும் சௌபாக்கியமானதாகவும் அமைய வாழ்த்துகிறேன்!

**இரா. சம்பந்தன்**
இலங்கைப் பாராளுமன்றத்தின்
எதிர்க்கட்சித் தலைவரும்
தமிழத் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும்

# தமிழர்தம் அபிலாஷைகள் நிறைவேறிட வழிதரும் வருடமாய் மலரட்டும்



தமிழ் உலகிற்கு ஆங்கிலப்புத்தாண்டு நல்வாழ்த்துக்களை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன். யுத்தம் நிறைவடைந்த போதிலும் மக்களுக்கு இன்னும் முழுமையான அமைதியும் சந்தோசமும் சுதந்திரமும் கிடைத்திருக்கின்றது எனக் கூறமுடியாது.

இனங்களுக்கிடையில், மதங்களுக்கிடையில், முரண்பாடுகளும் வேற்றுமைகளும் வளர்ந்த வண்ணம் தான் இருப்பதைக் காணமுடிகின்றது. அதுமட்டுமல்லாது போதைப்பொருள் பாவனை முதலான பலசவால்களையும் எதிர்கொள்ள வேண்டிய நிலையில் மககள் காணப்படுகின்றார்கள். கடந்த கால துன்பங்கள் எல்லாம் விலகி மலரும் ஆங்கிலப் புத்தாண்டு சவால்களையும் தடைகளையும் தகர்த்தெறிந்து ஒவ்வொரு மக்களதும் நல்லெண்ணங்களையும் அபிலாஷைகளையும் பூர்த்தி செய்வதாக மலரட்டும். மதபோதனைகளாலும் பெரியோர் நல்வார்த்தைகளாலும் நற்செயல்களாலும் நல்லவைகள் பெருகவும் வேண்டாதவைகள் அற்றுப்போகவும் இறையருள் கைகூட வேணடும். 2017இல் எம்மக்கள் சாதனைகளையும் வெற்றிகளையும் சந்தோசத்தினையும் அமைதியையும் அன்பையும் நிறைவாக பெற்று நல்லவண்ணம் வாழ வாழ்த்தி வீணாகான குருபீட குருமார்கள் சார்பில் ஆசீர்வதிக்கின்றேன்.

சந்நிதாச்சாரியார்
**சிவஸ்ரீ.சபா.வாசுதேவக்குருக்கள**
குருமார் சந்நிதானம்
வீணாகான குருபீடம்.

# நல்லிணக்கம் பற்றிய எதிர்பார்ப்புடன் 2017 ஆம் ஆண்டு மலர்ந்திருக்கிறது

## ஜனாதிபதி வாழ்த்து



சுபீட்சம் சகவாழ்வு மற்றும் நல்லிணக்கம் பற்றிய புதிய எதிர்பார்ப்புகளுடன் 2017ஆம் ஆண்டு மலர்ந்திருக்கிறது. பேண்தகு யுகத்தின் ஊடாக வறுமையை நம நாட்டிலிருந்து அகற்றும் உணர்வுபூர்வமான உறுதிபபாட்டுடன் 22 மில்லியன் இலங்கையர்களும் ஒன்றிணைந்து இருக்கின்றனர்.

நிச்சயம் இச்சவாலை நாம் வெற்றிகொள்ள வேண்டும். அதனை சாதிப்பது எமக்கு கடினமான இலக்கு அல்ல, சவால்களைக் கண்டு சளைக்காத தன்னம்பிக்கையும் மனவலிமையும் மிக்க மனிதர்களாலேயே மானிட வளர்ச்சியின் பரிணாமம் சாத்தியமாகியிருக்கின்றது.

பொது நன்மையைக் கருதி காலத்தை உகந்த வகையில் முகாமைத்துவம் செய்து சிறந்த முறையில் நிறைவேற்றுவதன் மூலமே எம்மால் உயர்ந்த இலக்கை அடைய முடியும். எதிர்காலத்தில் நாம் எதிர்கொள்ள நேரிடும் இயற்கையின் எதிர்மறையான நிலைமைகளை தீர்க்கதரிசனத்துடன் புரிந்துகொள்ளுதல் வேண்டும். இயற்கை சூழலை நாம் வெகுவாக நேசிக்க வேண்டும் என்பதையே காலநிலை எமக்கு உணர்த்துகின்றது.

அதேவேளை அநேகமான முடிவுகளை மேற்கொள்வதற்கான ஆற்றல் மிகுந்த பலசாலி இயற்கையே என்பதை நாம் ஒருபோதும் மறந்திடலாகாது.


கைத்தொழில் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் உலகம் எந்த அளவு வெற்றிகளைப் பெற்றுக்கொண்ட போதிலும், அபிவிருத்தி குறித்த எதிர்பார்ப்புகளை வெற்றிகொள்வதில் இயற்கையின் ஆசீர்வாதம் மிக மிக முக்கியமான நிபந்தனையாக அமைகிறது.

உலக அரசியல்,சமூக மற்றும் பொருளாதாரத் துறைகளில் பல சிக்கல்கள் மேல் எழுந்துவரும் பின்புலத்திலேயே நாம் புத்தாண்டிற்குள் பிரவேசிக்கின்றோம். வறுமையை அகற்ற வேண்டும் என்ற பெரும் பொறுப்பை முன்னிலைப்படுத்தி எம் முன் இருக்கும் சவால்களை வெற்றிகொண்டு வளமான இலங்கையை நோக்கிச் செல்லும் இந்த பயணத்தை வெற்றிகொள்வோம் என்ற உறுதிப்பாட்டுடன் பிறக்கும் இப்புத்தாண்டில் ஒரு மனதுடனும் மிகுந்த அர்ப்பணிபபுடனும் செயற்படுவோமாக.

உங்கள் அனைவருக்கும் சுபீட்சமான புத்தாண்டு வாழ்த்துக்கள்.

**மைத்திரிபால சிறிசேன,**
ஜனாதிபதி

# செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி



இறையருளை வேண்டிய வண்ணம்புதிய ஆண்டை வரவேற்போம். எங்கும் அமைதியும் ஆறுதலும் அனைவருக்கம் கிடைக்க பிரார்த்திப்போம். இறைவன் எமக்குத் தந்த இனிய வாழ்விற்கு நன்றிகூறுவோம். அரிய பிறப்பாகிய மனிதப் பிறப்பின் மகத்துவத்தை உணர்ந்து பெருமை கொள்வோம். மண்ணில் நல்ல வண்ணம் நாமும வாழ்ந்து பிறரையம் வாழ வைக்க எண்ணுவோம். ஒவ்வொரு நிமிடத்தையம் வாழ்நாளில் தவப்பொழுதாக கருதுவோம். போன நாள் திரும்பி வராது என்ற உண்மையை உணர்வோம். அவப்பொழுதாக காலத்தை கழிக்காமல் பயன்மிக்க காரியங்களை நிறைவேற்ற இந்நாளில் திட்டமிடுவோம். பிரியாவிடை பெறும் ஆண்டில் அறிந்தும் அறியாமலும் விட்ட தவறுகளை நினைந்து படைத்தவனிடம் மன்னிப்புக் கேட்போம். புதிய தவறுகளை உற்பத்தி செய்யாது வாழ வேண்டுவோம். எம்மோடு கோபித்தவர்களை அன்பால் எமக் குரியவர்களாக்குவோம். எம் மண்ணில் அவலமின்றி அனைவரும் வாழ வேண்டுவோம். ஒனறுபட்டால் உண்டு வாழ்வு ஏன்ற உண்மையை நாமும் உணர்ந்து பிறரையும் உணர வைப்போம். சிரித்து, சிந்தித்து, ரசித்து வாழ வேண்டிய வாழ்நாளை உணர்வோம். எம் எதிர்கால சந்ததிக்கு நல்ல வழிகளை தேடுவோம். எம் மண்ணை பசுமை மிக்க சோலையாக மாற்ற திட்டமிடுவோம். பாடுபட்டு உழைப்பவர்களுக்கே இபபாரிடம் சொந்தம் என்ற கவிஞனின் கருத்தை உணர்ந்து உழைப்போம். இரக்க முள்ள இனிய மனிதர்களாக பிறர்இடர்களைய என்றும் ஆயத்தமாவோம். அனைவருக்கும் புதிய ஆண்டு சிறக்க துர்க்கா தேவியை வேண்டி எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலாநிதி **ஆறு.திருமுருகன்**
தலைவர், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

# அனைவருக்கும் சமத்துவமான ஆண்டாக மலரட்டும்

## சந்திரகுமார் வாழ்த்து



ஆற்றலினாலும் அர்ப்பணிப்பு நிறைந்த உழைப்பினாலும் மாற்றங்களை உண்டாக்கும் உறுதியோடு புதிய ஆண்டினை வரவேற்போம். புத்தாண்டு என்பது மகிழ்ச்சியை நம் முற்றங்களிலும் நம்முடைய மனதிலும் உண்டாக்குவதாகும். அந்த மகிழ்ச்சியையே நாம் கொண்டாடுகிறோம். ஆனால் அந்த மகிழ்ச்சியானது ஒருநாளுடன் முடிந்து விடாமல், ஆண்டு முழுவதும் நீடித்திருக்க வேண்டும். வாழ்க்கை முழுவதும் நீடித்து நிலைக்க வேண்டும். அதுவே சிறப்பானது. புத்தாண்டை நாம் வரவேற்பதன் அர்த்தம் அப்படியானதாகவே அமைய வேண்டும்.

வெறுமனே சம்பிரதாயமான ஒருநாள் மகிழ்ச்சியாகவோ, ஒருநாள் கொண்டாட்டமாகவோ அமைந்து விடாமல், ஆண்டு முழுவதும் நம் வாழ்க்கை முழுவதும் நாம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமானால், நாம் அனைவரும் ஒன்று சேர்ந்துழைக்க வேண்டும்.

நம்முடைய கனவுகளையும் நம் முன்னே உள்ள சவால்களையும் நாம் வென்றெடுக்கும்போதே வாழ்க்கை இனிமையாகும். தாயக விடுதலை என்பதும் சமூக விடுதலை என்பதும் எமது கனவாகும். அந்தக் கனவை நிறைவேற்றுவதற்கு நம்முன்னே ஆயிரமாயிரம் சவால்கள் உள்ளன.

அந்தச் சவால்களை வெற்றி கொள்வதற்காக நாம் இரத்தம் சிந்தியிருக்கிறோம். கடுமையாக உழைப்பைச் செலுத்தியிருக்கிறோம். எனினும் எங்களால் அந்த இலக்கை இன்னும் எட்டமுடியாதுள்ளது. ஆகவே நம் சிந்தனையிலும் செயற்பாடுகளிலும் மாற்றங்களை உண்டாக்க வேண்டியுள்ளது. அந்த மாற்றங்களே உண்மையான மாற்றங்களையும் வெற்றியையும் தரும்.

புதிய ஆண்டு என்பது மாற்றங்களுக்கான ஆண்டாக, அந்த மாற்றத்தின் வெற்றிக்கான ஆண்டாக அமையட்டும். உண்மையான் அரசியல் மாற்றங்களையும் சமத்துவ, சமூக வாழ்வையும் உருவாக்கும் ஆண்டாக மலர வைப்பதற்கு சமத்துவ சமூக நீதிக்கான மக்கள் அமைப்பு உழைக்கும் என்ற மகிழ்சியான செய்தியை இந்த நன்னாளில் தந்து வாழ்த்துகிறது. இனிய புத்தாண்டு நல்வாழ்த்துகள்.

**மு. சந்திரகுமார்**
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்,
அமைப்பாளர்,
சமத்துவ, சமூக நீதிக்கான மக்கள் அமைப்பு.

# பங்களாதேசத்தை இலகுவாக வீழ்த்தி வெள்ளையடிப்பு செய்தது நியூசிலாந்து

பங்களாதேசத்துக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியிலும் வெற்றி பெற்றதையடுத்து. ஒருநாள் தொடரை 3 - 0 என நியூசிலாந்து அணி கைப்பற்றியுள்ளது.

நியூசிலாந்து - பங்களாதேசம் அணிகள் மோதும் 3 ஆவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி நெல்சன் நகரில் நேற்று நடந்தது. முதலில் பட்டிங் செய்து பங்களாதேசம் 50 ஓவரில் 9 விக்கெட் இழபபுக்கு 236 ஓட்டங்கள் எடுத்தது. தமீம் இக்பால் 59 ஓட்டங்களும் இம்ரூல் கையூஸ், நுரூல் அசன் தலா 44 ஓட்டங்களும் எடுத்தனர்.

237 ஓட்ட இலக்குடன் விளையாடிய நியூசிலாந்து அணியில் தொடக்க வீரர் டாம் லதம் 4 ஓட்டங்களில் அவுட் ஆனார். குப்தில் 6 ஓட்டங்கள் எடுத்த நிலையில் காயம் காரணமாக போட்டியில் இருந்து ஓய்வு பெற்றார். அதன் பின்னர் வில்லியம்சன் - நில்புரூம் ஜோடி சிறப்பாக விளையாடியது. இருவரும் அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றனர்.

அபாரமாக விளையாடிய புரூம் 97 பந்துகளை சந்தித்து 12 பவுண்டரி, ஒரு சிக்சருடன் 97 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தார்.

அவரைத் தொடர்ந்து வில்லியம்சனுடன் நீஷம் இணைந்தார். இந்த ஜோடி 42 ஆவது ஓவரில் வெற்றியை எட்டியது. நீஷம் அந்த ஓவரின் இரண்டாவது பந்தில் பவுண்டரி அடித்து வெற்றியை உறுதி செய்தார்.

நியூசிலாந்து அணி 41.2 ஓவரில் 239 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. வில்லியம்சன் 95 ஓட்டங்களுடனும் நீஷம் 28 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். வில்லியம்சன் ஆட்டநாயகனாக தேர்வு செயயப்பட்டார். இந்த வெற்றயின் மூலம் 3 போட்டிகள் கொண்ட தொடரை நியூசிலாந்து அணி 3-0 எனகைப் பற்றி பங்களாதேசத்துக்கு வெள்ளையடிப்பு செய்தது. (க)



# யாழில் விசேட சதுரங்க போட்டிகள்

யாழ். சதுரங்க முற்றத்தினால் நடத்தப்பட்டுவரும் Jaffna junior chess championship சதுரங்கப் போட்டிகள் கடந்த 26 ஆம் திகதி ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

இப்போட்டிகள் 8 வயது, 10 வயது, 12வயது, 14வயது, 16வயது, 18 வயது என ஆறு வயதுப் பிரிவுகளில் ஆண், பெண் என 12 பிரிவுகளாக நடைபெற்று வருகின்றன.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெற்றஇப்போட்டியில் 26 ஆம் திகதி தொடக்கம் 28ஆம் திகதி வரை ஒவ்வொரு வயதுப்பிரிவுகளுக்கும் தனித்தனியாக chess Quiz & Simultaneous என்பன நடைபெற்றன. இதில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளதுடன் பங்குபற்றிய அனைவருக்கும் பங்குபற்றுநருக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

கடந்த 29 ஆம், 30 ஆம் திகதிகள் நியம வேக (Standard) சதுரங்கப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் 150 இற்கும் மேற்பட்ட வீர, வீராங்கனைகள் கலந்து கொண்டு வருகின்றனர்.

இன்று முதலாம் திகதி காலை மின்னல்வேக (Blitz) சதுரங்கப் போட்டிகளும் நடைபெறவுள்ளன. இப்போட்டிகளில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர் களுக்கு வெற்றிக்கிண்ணங்களும் வெற்றிச் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளதுடன் பங்கு பற்றிய அனைவருக்கும் பங்குபற்றுநருக்கான சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. அத்துடன் மூன்றுவகைப் போட்டிகளிலும் அதிகூடிய புள்ளிகளைப் பெறுபவருக்கு (அனைத்துப் பிரிவுகளிலும்) இந்த ஆண்டிற்கான சிறந்த வீரர் என்ற விசேட வெற்றிக்கிண்ணமும் வழங்கப்படவுள்ளது.

பரிசில் வழங்கல் நிகழ்வு இன்று முதலாம் திகதி பி.ப. 3.30-5.30 வரை நடைபெறவுள்ளது என யாழ்.சதுரங்க முற்றத்தினர் அறிவித்துள்ளனர். (க-312)




CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

அழையுங்கள் - 077 29 31 062

CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)

(C-6937)

வாடகைக்கு வீடு தேவை

மருத்துவ பீட மாணவன், உத்தியோகத்தர் குடும்பத்திற்கு பல்கலைக் கழக சுற்றாடலில் (K.K.S வீதி, இராமநாதன வதி, பிறவுண றோட், ஆத்திசூடி வளாக வீதியில் வீடு தேவை.

தொடர்புகளுக்கு
0784899953, 0779906362

(7347)

O/L பரீட்சையின் பின்னர் கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவில்

நம்பிக்கையின் 14வது புது வருடத்தில்

BRITISH COLLEGE of Education

BRITISH COUNCIL
IELTS
Students Registration Centre

Diploma in Spoken English

முழுநேரப் பாடநெறியானது திங்கள் தொடக்கம் வெள்ளிவரை தினமும் 4 மணித்தியாலங்கள் நடைபெறுவதுடன் பகுதிநேரப் பாடநெறிகள் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறுகின்றது.

COMPUTER COURSES WITH 50% DISCOUNT

இம்முறை O' level பரீட்சை எழுதியவர்களுக்கு விசேட time table

DIP. IN COMPUTER STUDIES
- Introduction to Computer
- MS-Word, MS-Excel,
- MS-Access, MS-Power Point
- VB, Internet & E-mail

GRAPHIC DESIGNING
- Adobe Pagemaker
- Adobe Photoshop
- Corel Draw
- Adobe Illustrator

INFORMATION TECHNOLOGY
- Office Application
- Designing Application
- System Engineering
- Software Development
- Final Project

COMPUTERIZED ACCOUNTING
- AccPack, M.Y.O.B.
- Quickbook, Tally
Full time : 1 Month
Part time: 3 Months

Hot Line
0777-596148

Spouse விசாவில் UK செல்லவுள்ளவர்களுக்கு

IELTS Life Skills A1

BRITISH COLLEGE

23, Kachcheri nallur Rd, Jaffna. Tel : 021-4927113

103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041

Pettah Rd, Mannar. Tel : 023-4924124

Main Street, Mullaithivu Tel : 021-4927497

13, 1st Capel Rd, Colombo-06. Tel : 011-2362775

565, Peradeniya Rd, Kandy. Tel : 081-4949590

(C-7054)

## காளான் வளர்ப்பு பயிற்சி

காளான் வளர்ப்பு பற்றிய சகல விதமான பயிற்சி மற்றும் தேவையான பொருட்கள் வழங்கப்படும். தேவைக்கேற்ப தங்கள் இல்லங்களில் வந்து செய்து தரப்படும். (சி-6940)

தொடர்பு:- 071 747 1847, 072 675 0045, 076 309 7609



## சித்த ஆயுர்வேத வைத்தியம்

சித்தர்கள் முறைப்படி கைநாடிப் பரீட்சையில் உங்களைப் பீடித்துள்ள நோய்கள் பற்றிக் கூறப்படும். அதில் நீங்கள் திருப்தியுற்றால் காய கல்ப மூலிகைகள் மூலம் முறையான சிகிச்சையளிக்கப்படும். மாதர் நோய்கள், குழந்தையின்மை , ஆண், பெண் பாலியல் பலவீனம் போன்றவற்றிற்கு அதி சக்தி வாய்ந்த இராஜவஜீகரண லேகியம், மூளைக்கு இரத்த ஓட்டம் பெறவும் ஞாபகசக்தி உண்டாகவும் அழகிய நீண்ட தலைமுடி பெறவும் கண்பார்வை ஒளி பெறவும் நேத்திர சிந்தாமணித் தைலம் பெற்று பயன் அடையுங்கள். நீண்டகால நோய்களுக்கு ஆறுதல் கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு
Dr. த.கிருஷ்ணபகவான்
கிருஷ்ணா சித்த ஆயுர்வேத வைத்தியசாலை,
இல-11, 3 ஆம் குறுக்குத்தெரு, கண்டி றோட்,
வவுனியா. 077 972 3369

(7331)



வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532



## வேலைவாய்ப்பு

உயர்ந்த சம்பளத்தை எதிர்பார்க்கும் உங்களுக்கு இலங்கையில் பலபிரதேசங்களில் அமைந்துள்ள ஜாம், பிஸ்கட், சொக்லேட், பால்மா ,க்ளவுஸ், பெயின்ட், டயர் ,சிம் கெயார் ஆகிய தொழிற்சாலைகளில் (லேபல், பொதியிடல், உற்பத்தி போன்றவற்றிற்கு) வயது 18-45 ஆண் /பெண் சேர்த்துக் கொள்ளப்படும். குழு வாகவும் நண்பர்களாகவும் கலந்து கொள்ளலாம். சம்பளம் தொழில் அடிப்படை யில் 32,000, 42,000 வரை. உணவு, தங்குமிடம் பேசித் தீர்மானிக்கலாம். (கண்டி, கம்பொலை, மாத்தளை , நுவரெலியா, ஹற்றன், புத்தளம், கேகாலை, குருணாகல, மட்டக்களப்பு அவிசாவளை, மருதானை ,பொரெல்ல, கதுருவெல, ஹொரண, தெஹிவல ஆகிய அனைத்து பிரதேசத்தில் இருந்தும் ஆட்கள் சேர்த்துக் கொள்ளப்படும். வரும் நாளிலேயே உடனடி வேலைவாய்ப்பு.

தொடர்புகளுக்கு 077 843 0179 (சி-6937)
No.435 2/18, Fountun Plasa, Borella Road, Maradana.


# ஈழத்தமிழரின் விழிநீர் துடைக்க இடியென முழங்கிய எங்கள் வீரன்



***அமரர் தியாகராஜா மகேஸ்வரன் ஒரு வரலாற்று அடையாளம்***

அமரர் தியாகராஜா மகேஸ்வரன் அவர்கள் மறைந்து ஒன்பது வருடங்கள் கடந்துவிட்டபோதும் அவரது நினைவுகள் இன்றுவரை சக்திமிக்க பேரலைகளாக தமிழ் மக்களது உயிர்ப்புக்கு உத்தரவாதம் வேண்டி நிற்கின்றது. ஏனெனில் அவர் வாழ்ந்ததும் மறைந்ததும் மக்களினது உரிமைகளினை உறுதிப்படுத்துவதற்கேயாகும். இந்த வகையில் அமரர் மகேஸ்வரன் தமிழ் மக்களது உரிமைக் குரலாகவும் சமூக ஆன்மீகப் பெறுமானங்களின் காவலனாகவும் தனித்துவம் மிக்க மாமனிதராக இனங்காணப்படுகின்றார். அமரர் தான் வாழும் காலத்தில் சமூக சேவையாளராக, பாராளுமன்ற உறுப்பினராக உலகளாவிய வாணிபராக பல்வேறு பாத்திரங்களை தனதாக்கிக்கொண்டு தமிழர்களுடைய ஒட்டுமொத்த மேம்பாட்டிற்காகவும் பாடுபட்டவராவார். தமிழர்களுடைய தேசியத்தின் இருப்பை முன் நிறுத்தி அல்லும் பகலும் ஓங்கிக் குரல் கொடுத்ததன் காரணமாகவே கயவர்களால் காவு கொள்ளப்பட்டு தனது இன்னுயிரை இந்த மக்களுக்காகவும் மண்ணுக்காகவும் தற்கொடையாக்கிக் கொண்டார்.

***"சாதலின் இன்னாதது இல்லை இனிது அது உம்***
***ஈதல் இயையாக் கடை"***

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க தன்னுயிரையே மக்களுக்காக ஈந்தல் செய்யுமளவான கொடைத் திறம் மிக்கவராக வாழ்ந்து மறைந்தவரே அமரர் மகேஸ்வரன். அன்றைய ஐக்கிய தேசியக் கட்சி அரசிலே அமைச்சராகப் பணியாற்றிய அமரர் தனது சுகபோகங்களை கொழும்பு நகரை மையப்படுத்திய வாழ்க்கை முறையையும் உதறித் தள்ளிவிட்டு தனது மண்ணையும் மக்களையும் நோக்கி நகர்ந்து எங்கெல்லாம் என்னென்ன தேவைப்பாடுகள் தலைதூக்கியிருந்தனவோ அவற்றையெல்லாம் தீர்த்து வைக்க அரும்பாடுபட்ட தலைவராக அடையாளப்படுகிறார்.

***"தெரிதலும் சேர்த்து செயலும் ஒரு தலையாச்***
***சொல்லலும் வல்லது அமைச்சு"***

என்று ஒரு அமைச்சுக்கு இருக்க வேண்டிய இலக்கணத்தை குறள் வழியில் சொல்லப்பட்டதற்கிணங்க மக்களுடைய பிரச்சினைகளைத் தெரிந்து மக்களுடன் இணைந்து அம் மக்களின் தேசிய நலன்களுக்காக ஓங்கிக் குரல் கொடுத்தவராக அமரர் திகழ்ந்தார். இந்து கலாசார அமைச்சராகப் பணியாற்றி வந்த அமரர் மகேஸ்வரன் அவர்கள் சைவ சமயத்தவர்களின் ஆன்மீக நெறி சார்ந்த வாழ்க்கை முறையின் மேம்பாட்டின் பொருட்டு அரும்பணியாற்றிய உத்தமராவார். கோவில்களின் புனரமைப்புக்காகவும் அறநெறிசார் கல்வி முறைக்காகவும் அறிவு சார் ஆன்மீக மேம்பாடுகளுக்காகவும் தர்மகாரிய செயல்களுக்காகவும் உச்ச அளவான நிதி ஒத்துக்கீடுகள் மூலம் சமய மறுமலர்ச்சியை உருவாக்கிய ஒரு உத்தமராவார். அவருடைய அறப்பணி சார்ந்த பன்முகப்படுத்தப்பட்ட திட்டங்களின் பெறுமானம் இன்றுவரை வலுவுடையனவாக அமையப் பெற்றிருக்கின்றன. சைவசமய மேம்பாட்டுக்கான பலவித திட்டங்களை நடைமுறைப்படுத்தி வந்த சமகாலத்தில் தமிழ்மொழியின் பரந்துபட்ட மேம்பாட்டுக்காகவும் இவர் ஆற்றிய பணிகள் பற்பலவாகும். தமிழக பேராசிரியர்கள், ஆன்மீக அறிஞர்கள், துறைசார் கலைஞர்களை இந்த மண்ணுக்கு வரவழைத்து எமது சமய சமூக பண்பாட்டு மேம்பாடுகளுக்காக தனது இறுதி மூச்சு உள்ளவரை செயற்பட்டு வந்தார். அமரர் மகேஸ்வரன் அவர்கள் வெறுமனே பெயரளவிலான ஒரு அமைச்சராகவோ பாராளுமன்ற உறுப்பினராகவோ செயற்பட்டவரல்ல. சமூகத்தின் அடிமட்டப் பிரச்சினைகளை தான் வாழ்ந்துபெற்ற அனுபவங்களூடாக இனங்கண்டு கொண்டவர். அதுபோன்று ஆன்மீக வாழ்வைப் பொறுத்தவரை அசைவிலா பக்தியுணர்வினால் இசைவாக்கம் பெற்ற ஓர் ஆன்மீகவாதி. இத்துணை பெறுமானம் மிக்க ஒருவரை இந்தச் சமூகம் ஒரு குறித்த காலகட்டத்திலாவது கண்டுகொண்டதும் அனுபவித்ததும் இறைவன் கொடுத்த வரப்பிரசாதமாகும்.

ஏனெனில் அமரர் மகேஸ்வரனைப் போன்ற ஒரு சமூக ஆன்மீகச் சிந்தனையாளர் இதுவரை தோன்றியதில்லை. அதுபோன்று சமூகத்தின் அடிமட்டப் பிரச்சினைகளை இனங்கண்டு சேவையாற்றிய ஒரு மாமனிதரும் இவரே. ஏக காலத்தில் மக்களதும் மண்ணினதும் விடுதலைக்காகவும் ஓங்கிக் குரல்கொடுத்த ஓர் அரசியல் போராளியும் இவரே.

காலத்தில் அழியாத காவியத் தலைவரான அமரரை இவ்வையகம் உள்ளளவும் மக்கள் மறந்துவிட மாட்டார்கள். ஏனெனில் அமரர் அவர்கள் ஒரு காலத்தின் பதிவு. ஆன்மீக மார்க்கத்தின் அடையாளம். சமூக சேவகன். எமது இனத்தின் விடுதலைக்காக வழிகாட்டிய ஏழைகளின் தோழன்.

இத்துணை மகத்துவமான வாழ்க்கைப் பாதையைக் கைக்கொண்டு வாழ்ந்து மறைந்துவிட்ட ஒரு பெரும் தலைவனை மக்கள் தமது இதயக் கோவிலிலே இருத்தி வைத்துப் பூசிப்பர்.

கயவர்களின் கண்மூடித்தனமான தாக்குதலினால் இந்த மாமனிதரின் அளப்பெருமுயிர் காவுகொள்ளப்பட்ட போதிலும் அவர் இறையடியிலேயே வீழ்ந்தார். முத்திக்கு முதலான மார்கழிச் சோதியிலேயே கலந்தார். ஆதலினால் தான் இன்றளவும் பேசப்படும் போற்றப்படும் ஒரு மாமனிதராக மகேஸ்வரன் அமைந்துவிட்டார். இன்றளவு மட்டுமல்லாது அவர் இவ்வையகம் உள்ளவரை போற்றுதற்குரிய ஒரு மாமனிதரே.

(சி-6939)

## அமரர்
## தியாகராஜா மகேஸ்வரன்
## 9 ஆவது ஆண்டு நினைவுகள்
## 01.01.2017

**வட்டுக்கோட்டை தொகுதி வாழ் மக்கள்**

# இராசி பலன்

01.01.2017
(மார்கழி 17, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு
திருதியை பிற்பகல் 3.16 மணிவரை
திருவோணம் பிற்பகல் 3.59 மணிவரை
சுபநேரம் 9.29-10.59 மணிவரை
இராகுகாலம் 4.59-6.29 மணிவரை
புதுவருட வாழ்த்துக்கள்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| செவ் சுக் கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் புனர்பூசம், பூசம் இரவு 3.46 மணிக்கு கும்-சந் | | |
| சந் | | | ராகு |
| சூரி | சனி புத | | குரு |

**மேடம்:** புதிய முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கலாம்.

**இடபம்:** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்பத்தில் நிலவி வந்த குழப்பங்கள் அகலும், திடீர்ப் பயணங்கள் ஏற்படலாம்.

**மிதுனம்:** சேமிப்பு செலவாகாதிருக்க விழிப்புணர்வு அவசியம், எந்தக் காரியத்திலும் நிதானமாகச் செய்வது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கடகம்:** நீண்ட நாளைய நெருங்கிய நண்பர் ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, கௌரவமான நாள்.

**சிம்மம்:** பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், தொழில் போட்டிகள் மாறும், தேக நலனில் முன்னேற்றம் ஏற்படலாம், சுவாரஸ்யமான நாள்.

**கன்னி:** மன நிறைவு கூடும் நாள், தாமதமான காரியமொன்று இன்று நடைபெறும் வாய்ப்புண்டு, வியாபாரத்தை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**துலாம்:** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, சுபகாரியச் செலவுகள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்:** வழிபாடுகளில் நம்பிக்கை வைப்பீர்கள், பொதுவாழ்வில் புகழ்கூடும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

**தனுசு:** நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

**மகரம்:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்கள் தகுதியை உயர்த்தும், போசன சுகமுண்டு.

**கும்பம்:** சாப்பிடக்கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்வீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள்.

**மீனம்:** நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, உறவினர்களின் வருகையால் மகிழ்ச்சியடைவீர்கள், போசன சுகமுண்டு.

BLOOMING BUDS The Wisdom of Children

# BLOOMING BUDS INTERNATIONAL E CAMPUS
# TEACHER TRAINING SCHOOL

PV 94034

## ஆங்கில மொழி மூலமான ஆசிரிய பயிற்சியாளர்கள் 50 பேர் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளார்கள்

**தரம் 1 தொடக்கம் தரம் 11 வரை ஆங்கில மொழி மூலமாக கற்பிப்பதற்கு 300 ஆசிரியர்களை இணைத்துக்கொள்வதற்கான ll கட்ட வேலைத்திட்டம்**

| ஆசிரியர் பயிற்சி பாடநெறி | பயிற்சி பெறுவதற்கான தகைமைகள் |
|---|---|
| • சர்வதேச பாடசாலைகளிலோ.தேசிய பாடசாலைகளிலோ முன்பள்ளி ஆசிரியராக பயிற்சி பெறுவதற்கான தகைமைகள் (பெண்கள்)<br>• முக்கிய பயிற்சி ஆசிரியர்கள் (பெண்கள்)<br>• ஆங்கிலம் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பம் சம்பந்தமாக பயிற்சி பெறும் ஆசிரிய பயிலுனர்கள் (ஆண்.பெண்) பின்வரும் தகைமைகளை கொண்டிருக்க வேண்டும்.<br>• கணிதம்.விஞ்ஞான பாடநெறி (ஆண்.பெண்) | • சர்வதேச ரீதியிலோ அல்லது தேசிய மட்டத்திலோ க.பொ.த உயர் தரப் பரீட்சையில் 3 பாடங்கள் சித்தி பெற்றிருக்க வேண்டும்.<br>• 2017 ஜனவரி 1ம் திகதி அன்று 18 வயதிற்கும் 35 வயதிற்கும் உட்பட்டவராக இருக்க வேண்டும்<br>• சாதாரணதர பரீட்சையில் தகவல் தொழில் நுட்பத்தை பாடமாக கொண்டிருப் பதுடன் அதில் டிப்ளோமா பாடநெறியையும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.<br>• க.பொ.த உயர்தர விஞ்ஞான கணித பிரிவில் பரீட்சைக்கு தோற்றியிருந்தால் போதுமானது |

தற்போது எங்கள் நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற ஆசிரியர் பயிற்சி நெறிக்கு மேலதிகமாக இளைஞர்களின் சக்தியை மேம்படுத்தும் முகமாக எங்களுடைய 45 கிளைகளில் பல்வேறு பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அதன் காரணமாக புதிதாக 300 ஆசிரியர்களை இணைத்துக்கொள்ளவுள்ளோம்.

### தகைமைகள்

- 18 வயதிற்கும் - 35 வயதிற்கும் உட்பட்ட க.பொ.த.சா/தர பரீட்சையில் 4 பாடங்கள் சித்தி பெற்றவர்கள் தொடக்கம் உயர்தரப்பரீட்யைில் சித்தியடைந்தவர்கள் அனைவருக்கும் நாங்கள் மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்வது யாதெனில்.
- ஒரு நாள் பயிற்சிப்பட்டறை மூலமாக தெரிவுசெய்து சேர்த்துக்கொள்ளப்படும் பயிலுநர்கள் அனைவரும் புத்தளத்திலோ அல்லது யாழ்ப்பாணத்திலோ அமைந்துள்ள கிளை நிறுவனங்களில் உங்களுக்கு வசதியான ஒன்றை தெரிவு செய்து உங்கள் பயிற்சி நெறியை மேற்கொள்ளலாம். அந்த நிறுவனங்களில் 1 2 மாத பாட நெறியை பூர்த்தி செய்ய வேண்டும்.
- ஆங்கில மொழியில் பலவீனமானவர்களுக்கு முழுமையான ஆங்கில அறிவினை பெற்றுக்கொள்வதற்காக 60 நாட்கள் பாடநெறியை இலவசமாக நடாத்தவுள்ளோம் ஆசிரியர் பயிற்சி பாடநெறி ஆரம்பமாவதற்கு முன்பாக இலவசமாக கற்பிக்கப்படும்.

## கற்கைநெறிக்கான கட்டணங்களுக்கு வங்கிக்கடன் ஏற்பாடு செய்து தரப்படும். (நிபந்தனைக்கு உட்பட்டது)

பயிற்சி நெறி வாரத்தில் 6 நாட்களும் 12 மாதங்களுக்கு நடைபெறும் (காலை 8.00 மணிதொடக்கம் மாலை 6.30 வரை நடைபெறும்.)

- உங்களுடைய விண்ணப்பபடிவங்களை 9 x 4 அளவுள்ள சுயமுகவரி எழுதப்பட்ட தபாலுறையில் 45 ரூபா பெறுமதியான முத்திரையை ஒட்டி அனுப்ப வேண்டும். மேலதிகமாக 45 ரூபா முத்திரை இடப்பட்ட சுயமுகவரி எழுதப்பட்ட தபால் உறை ஒன்றை உள்ளே வைத்து அனுப்பவும். மேற்குறிப்பிடப்பட்ட தபால் உறை உள்ளே வைத்து அனுப்பாவிடில் பதில் அனுப்பப்படமாட்டாது.
- தரம் 1 தொடக்கம் 11 வரை ஆங்கில மொழி மூலமான ஆசிரிய பயிற்சி பாட நெறியை மேற்கொள்ள விரும்புகின்றவர்கள் புத்தளத்தில் அல்லது யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது கிளை நிறுவனங்களில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம்.

1 வருடகால பயிற்சியின் பின்னர் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் சகல வேதனங்ளும் அடங்கிய விதத்தில் ரூபா 34,500 சம்பளத்தில் அமர்த்தப்படுவார்கள். பாடநெறியை பூர்த்தி செய்தவர்கள் ரூபா 50000 தொடக்கம் ரூபா 100000 வரை தனிப்பட்ட முறையில் சுயமாக சம்பாதிக்கக்கூடிய வாய்ப்புக்கள் உண்டு.

ஒரே பாடநெறியில் 5 டிப்ளோமா சான்றிதழ்கள்.

1. திறன் அபிவிருத்தி பாடநெறி
2. ஆங்கில டிப்ளோமா
3. சிங்களம் கதைப்பதற்கும் எழுதுவதற்குமான பாடநெறி.
4. கணணி பாடநெறி
5. சிறுவர் உளவியல் சம்பந்தமான பாடநெறி.

பாடநெறிக்கட்டணம் மாதாந்தம் ரூபா 14900 மட்டுமே



**Head Office**
Bloomingbuds International E Campus
Teacher Training College
No.40, Kandy Road, Dalugama,Kaleniya
Contact No:- 0112912641 / 0754933349
www.blumingbudsecampus.com
facebook.com/bloomingbudsinternationalecampus
Hotline 0715669641.

Jaffna Office.Thavadi Road, Suthumalai South.
Manipay- 021 225 6641, 071 566 9641

BLOOMING BUDS The Wisdom of Children

# தொழில் வழிகாட்டல் பயிற்சி நெறி
# CAREER INTERNSHIP PROGRAMME

PV 94034

7 Diplomas one Course only

IT + Spoken English + Spoken Sinhala , Hotel Management , Self and skill Development, Vocational Training Welding Program, House / industrial wiring

சிங்கள கல்வி மற்றும் கணினி கற்கை நெறியை இணைக்கப்பட்டுள்ளது சிங்கள டிப்ளோமா (பேசும் ஆங்கிலம் அடங்கியது) ஆங்கில டிப்ளோமா கணினி டிப்ளோமா என்பன இலவசமாக கற்பிக்கப்படும்

பாடநெறி முடிவில் 07 தகுதிக்கான சான்றிதழ் வழங்கப்படும்

கற்கை நெறிகள் கெலனியில் மட்டும் நடைபெறும்

Duration 85 Days full time

## சர்வதேச தரம் வாய்ந்த சுய முன்னேற்றத்துக்கான வழிகாட்டல்

- க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் பயிற்சிநெறி க.பொ.த (சா/த) பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான Tinker தொழில் வாய்ப்பு பாடநெறி
- அரச தனியார் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் NVQதர சான்றிதழ் போன்றவற்றை கருத்தில் கொண்டு வாழ்க்கைக்கான தொழில்வழிகாட்டல் பயிற்சி நெறியின் செயன்முறையூடாக பின்வரும் டிப்ளோமா கற்கைநெறிகளுக்கு ஆர்வமுடைய மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது

இளைஞர்களுக்கான ஹோட்டல் முகாமைத்துவம் Marine Steward

முதல் பதிவை மேற்கொள்ளும் 10 மாணவர் களுக்கு பாடநெறி கட்டணத்தில் 10% கழிவு வழங்கப்படும்

கற்கை நெறி ஆரம்பம்16/1/2017


## Note

- அனைத்து பாடநெறிகளும் முழுமையாக தமிழ்மொழி விளக்கத்துடன் கற்பிக்கப்படும்
- விண்ணப்பம் மற்றும் மேலதிக தகவலைப்பெற உங்கள் பெயர், முகவரி E-mail முகவரி தொலைபேசி இலக்கம், என்பவற்றை குறிப்பிட்டு 0774690044 இற்கு SMS செய்யவும். 07.01.2017 இற்கு முன் விண்ணப்பங்களை Blooming Buds E Campus ,No .40, Kandy Road, Dalugama. Kaleniya என்ற முகவரிக்கு அனுப்பவும்

உணவு,தங்குமிடம் வசதி எல்லாம் செய்து தரப்படும்

பாடநெறி முடிவில் அங்கீகாரம் பெற்ற 07 பெறுமதி மிக சான்றிதழ் வழங்கப்படும்

Blooming Buds E Campus Vocational School



**Head office - Blooming Buds International E Campus**
Teacher Training College
No .40, Kandy Road, Dalugama. Kaleniya
Contact No :- 0112912641 /0754933349- www.bloomingbudsecampus .com
facebook /bloomingbudsinternationalecampus
web /www.bloomingbudsecampus,
Hotline 0715669641

SIVANARUL PRODUCTS
சிவனருள் உற்பத்திகள்
Healthy Food, Healthy Life

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்,
நலன்விரும்பிகள், தன்னார்வத்தொண்டர்கள்,
தொண்டு அமைப்புக்கள் மற்றும்
எமது பரிணாம வளர்ச்சிப் பாதையில்
எம்முடன் சோர்வின்றி சேர்ந்து பயணிக்கும்
எங்கள் அனைத்து உறவுகளிற்கும்

# சிவனருள் குடும்பத்தினரின்

# இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.....

பல்வேறு வகையான அனர்த்தங்களின் போது பாதிப்புக்களை எதிர்நோக்கிய மகளீர்களுக்கு நிரந்தர தொழில்வாய்ப்புடன் கூடிய வாழ்வாதாரத்தை வழங்குவதற்கென உருவாக்கப்பட்டு சர்வதேச தரநிர்ணயங்களுக்கமைவாக உற்பத்தி செய்யப்படும் எமது தொழிற்சாலையிலிருந்து சுகாதாரமானதும், தரமானதுமான உணவுசார் உற்பத்திகளை ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ள இன்றே விஜயம் செய்யுங்கள்....





சிவனருள் உற்பத்திகள் கம்பனி
ட7, உருத்திரபுரம் வீதி,
கிளிநொச்சி
தொலைபேசி: 0212283323/0772771436
மின்னஞ்சல்: sivanarulppl@gmail.com
இணையம்: www.arulproducts.com

சிவனருள் உற்பத்திகள் கம்பனி
திம்பிலி வீதி, புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு
தொலைபேசி: 0213208474/0765550975
மின்னஞ்சல்: sivanarulptk@gmail.com

GMP Certified · SLS · ISO 22000 · HACCP



## MIBM Management Courses

English Medium with Tamil Explanation wherever Necessary

### Diploma in Leadership & Management

Are You Interested in Becoming a Future Leader ???
Come and Join With us!!!

* Goal Setting & Action Planning
* Effective Communication
* The Spirit of Leadership
* Team Work / Decision Making
* Motivation / Public Speaking
* Modern Management Practice
* Planning / Organizing / Leading / Controlling ...



Investment : Rs. 19,000/-
Duration : 3 to 4 Months
Sundays 11.30 am - 1.30 pm
Commencement 08th January

### Diploma in HR Management

People (human resources) are viewed by experts as the most important asset of any organization. Managing an organization's people is often the most challenging and complex task......

Come and join with us to become a Professional HR Manager.




Investment : Rs. 17,500/-
Duration : 3 to 4 Months
Sundays 2.30 pm - 4.30 pm
Commencement 08th January

**METROPOLITAN INSTITUTE OF BUSINESS MANAGEMENT**
Venue : Jaffna College Undergraduate Department,
464, Hospital Road, Jaffna.
Hotline: +94 77 661 5152 | E: info@mibm.lk
www.mibm.lk

MIBM

*வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய புதுவருட நல் வாழ்த்துக்கள்....*

தற்பொழுது அண்ணாவின் அனைத்து உற்பத்திப் பொருட்களும்
நாடுபூராக பெற்றுக் கொள்ளும் வசதி செய்யப்பட்டுள்ளது
என வாடிக்கையாளர்களுக்கு மகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்

# ஜீவாகாரம்




குழந்தைகள் முதல்
முதியோர்வரை பாவிக்க
உகந்த சத்துணவு

# Anna Coffee




*Superbly Blended & Roasted to a Strict Formula....*

எமது புதிய தயாரிப்புக்கள்....




அண்ணா தொழிலகம் - இணுவில்.
TEL: 021 - 2241565,
021 7200800, 0112 - 436063

# மக்கள் மனதில் இடம்பிடித்த மகேஸ்வரன்



2000 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரை அரசியலில் இருந்தாலும் சகல அரசியல் தலைவர்களுக்கும் ஒரு எடுத்துக்காட்டாக மறைந்த முன்னாள் அமைச்சர் தியாகராசா மகேஸ்வரன் திகழ்ந்தார். அன்றைய காலமானது யுத்தக் கெடுபிடிகள் கூடிய காலமாக இருந்தது.

அந்த நிலையில் வடக்கு, கிழக்கிலும் கொழும்பு உட்பட நாட்டின் சகல பகுதிகளிலும் தமிழ் மக்கள் துன்ப துயரங்களையும் படையினரதும் பொலிஸாரினதும் கெடுபிடிகளையுமே சந்தித்து வந்தனர். தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளுக்கு எதிராக மகேஸ்வரன் குரல் கொடுத்ததுடன் போராட்டங்களையும் நடத்தினார். தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்தமையினால்தான் மகேஸ்வரனது உயிர் பறிக்கப்பட்டது. அதுவும் புனித ஸ்தலத்தில் வைத்து ஈவு இரக்கமின்றி அவரை கயவர்கள் சுட்டுக் கொன்றனர். யாழ்ப்பாணம் காரைநகரில் 1966 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் திகதி தியாகராஜா தம்பதியருக்கு மகனாகப் பிறந்த மகேஸ்வரன் சென். ஜோன்ஸ் கல்லூரியில் கல்வி பயின்றார். க.பொ.த. உயர்தரம் வரை கல்வி பயின்ற இவர் குடும்ப நிலை காரணமாக மேற்படிப்பினை படிக்காது வர்த்தகத் துறைக்குள் புகுந்தார். வர்த்தகத் துறையில் படிப்படியாக முன்னேறிய அவர் விஜயகலாவை 1998 ஆம் ஆண்டு கரம்பிடித்தார்.

இவருக்கு இரு பெண் பிள்ளைகளும் ஒரு ஆண் மகனும் உள்ளனர். 1999 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா குமாரதுங்கவும் ரணில் விக்கிரமசிங்கவும் போட்டியிட்டிருந்தனர். அன்று ஐ.தே.க. வேட்பாளராக களமிறங்கிய ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக மகேஸ்வரன் வேலை செய்தார். யாழ்.குடாநாட்டில் ரணிலுக்கு கணிசமான வாக்குகள் பெறப்பட்டன. அன்று முதல் ஐ.தே.கவுடன் தன்னை இணைத்துக் கொண்ட மகேஸ்வரன் 2000 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

பெரும்பான்மையின தேசியக் கட்சியான ஐ.தே.க. 56 ஆண்டுகளுக்குப் பின் யாழ்.மாவட்டத்தில் ஒரு உறுப்பினரைப் பெற்றிருந்தது. மகேஸ்வரன் அன்று முதல் முதலாக ஐ.தே.கவில் போட்டியிட்ட போது அவர் எங்கே வெல்லப் போகிறார் என ஏனைய கட்சிகளின் தலைவர்கள் எள்ளி நகையாடினர். ஆனாலும் தனது வெற்றி உறுதியென்ற நிலைப்பாட்டில் மகேஸ்வரன் இருந்தார். கடும் பிரசாரத்தில் ஈடுபட்டார். 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெற்று அவர் வெற்றி பெற்றார்.

தேர்தலில் வெற்றி பெற்று பாராளுமன்றம் சென்ற அவர் தமிழ் மக்களின் மறுக்கப்பட்ட உரிமைகளுக்காக குரல் கொடுத்தார். அன்று விடுதலைப் புலிகள் பலமாக இருந்த காலகட்டம். வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பெரும் பகுதி அவர்களின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. வன்னிப் பகுதி மீது அன்றைய அரசாங்கம் பொருளாதாரத் தடை விதித்திருந்தது. எரிபொருட்கள் முதல் அத்தியாவசியப் பொருட்களை கொண்டு செல்வதற்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்தது. இந்தப் பொருளாதாரத் தடைக்கு எதிராக பாராளுமன்றத்திற்குத் தெரிவாகி சில வாரங்களிலேயே மாட்டு வண்டிலில் மகேஸ்வரன் பாராளுமன்றத்திற்கு சென்று தனது எதிர்ப்பினைக் காட்டினார். இந்தப் போராட்டத்தில் எதிர்க்கட்சி எம்.பியாக இருந்து மறைந்த ஜயலத் ஜயவர்த்தன உட்பட பலரும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

எதையும் செய்து முடிப்பேன் என்ற மனத்திடம் அவரிடம் இருந்தது. இதனாலேயே அவர் முன்னேறினார். 2001 ஆம் ஆண்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு மீண்டும் தேர்தல் நடத்தப்பட்டது. இந்தத் தேர்தலிலும் யாழ்.மாவட்டத்தில் போட்டியிட்டு மகேஸ்வரன் இரண்டாவது தடவையாகவும் பாராளுமன்றத்திற்குத் தெரிவானார். அப்போது ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியைக் கைப்பற்றியதுடன் ரணில் பிரதமரானார். அரசாங்கத்தில் இந்து கலாசார அமைச்சு மகேஸ்வரனுக்கு வழங்கப்பட்டது. 2001 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டு வரை 3 வருடங்கள் அவர் இந்து கலாசார அமைச்சராகப் பணியாற்றினார். அமைச்சராக இருந்தபோது அவர் தமிழ் மக்களுக்கும் இந்து மதத்திற்கும் செய்த சேவைகள் ஏராளம். இதேபோல் அவர் பிற மதீ ஸ்தலங்களுக்கும் உதவி புரிந்தார். யாழ்ப்பாணத்தில் வீடமைப்புத் திட்டங்கள், மின்சாரத் திட்டங்களை ஏற்படுத்தினார். பல கிராமங்களுக்கு மின் இணைப்புகளை வழங்கினார். தென்மராட்சிப் பகுதியில் ஏ- 9 வீதிக் கரைகளில் இவர் ஆரம்பித்து வைத்த மின்சார விநியோக திட்டத்திற்கான நினைவுப் படிக்கற்கள் இருந்தன.

அமைச்சராக பதவி வகித்த காலத்தில் 2 ஆவது உலக இந்து மாநாட்டினை கொழும்பில் நடத்தி அவர் சாதனை படைத்தார்.

இதேபோல் அமைச்சராக இருந்த காலத்தில் இந்துக் கோயில்களின் வளர்ச்சிக்காக அவர் அரும் பணியாற்றினார். யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்தின் தேரானது 1983 ஆம் ஆண்டு எரிக்கப்பட்டிருந்தது. இந்த ஆலயத்திற்கு புதிய தேரை அவர் அமைத்துக் கொடுத்தார். இவ்வாறு பல ஆலயங்களுக்கான புனருத்தாரணப் பணிகளை அவர் மேற்கொண்டார்.

**முன்னாள் அமைச்சர் தியாகராசா மகேஸ்வரனின் ஒன்பதாவது ஆண்டு நினைவு தினம் இன்றாகும். இதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.**

2004 ஆம் ஆண்டு பாராளுமன்றம் மீண்டும் இடைநடுவில் கலைக்கப்பட்டபோது யாழ்ப்பாணத்தில் ஐ.தே.கவின் சார்பில் இவர் போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பென கட்சிகள் ஒன்றுபட்டமையால் அந்த ஒற்றுமைக்கு குறுக்கே நிற்காது மகேஸ்வரன் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட முன்வந்தார்.

சுமார் 55 ஆயிரம் வாக்குகள் பெற்று ஐ.தே.க. பட்டியலில் 4 ஆவது இடத்தை அவர் பெற்று வெற்றிவாகை சூடினார். 2004 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரையில் எதிர்க்கட்சி எம்.பியாக திகழ்ந்து தமிழ் மக்களின் துன்ப துயரங்களில் பங்கு கொண்டார். தமிழ் மக்கள் வகைதொகையின்றி கைதுசெய் யப் பட்ட போதும் கடத்தப்பட்ட போதும் காணாமற்போன போதும் துணிந்து நின்று பாராளுமன்றத்து க்குள்ளும் வெளியிலும் குரல் கொடுத்தார்.

கொழும்பில் லொட்ஜ்களில் தங்கியிருந்த தமிழர்கள் பேருந்துகளில் ஏற்றப்பட்டு வவுனியாவுக்கு அனுப்பப்பட்ட போது துடிதுடித்த மகேஸ்வரன் பாராளுமன்றத்தில் தனது சட்டையைக் கழற்றி எறிந்து போராட்டம் நடத்தினார். இதேபோல் தமிழ் மக்களின் துன்பங்களை வெளிக்காட்டும் வகையில் பாராளுமன்றத்தில் செங்கோலை எடுத்துக் கொண்டோடி போராட்டங்கள் நடத்தினார். இத்தகைய போராட்டங்கள் தமிழ் மக்களின் அவலங்களை சர்வதேசத்திற்கு எடுத்தியம்பின. தமிழ் மக்கள் கைது செய்யப்பட்டு பூஸா முகாம் உட்பட சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது அங்கு சென்று தமது பிள்ளைகள் உறவினர்களை பார்வையிடுவதற்காக விசேட பேருந்து சேவைகளை ஏற்பாடு செய்திருந்தார்.

தமிழ் இளைஞர், யுவதிகள் வகைதொகையின்றி கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்ததைக் கண்டித்து கொழும்பு காலிமுகத்திடலிருந்து அலரிமாளிகை வரை மக்களை ஒன்று திரட்டி பேரணி நடத்தினார். இதனால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கோபத்திற்கும் அவர் உள்ளாகியிருந்தார்.

2007 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் இடம்பெற்ற வரவு-செலவுத் திட்ட உரையின் போது அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்து நாள்தோறும் உரையாற்றினார். பாதுகாப்பு அமைச்சுக்கான குழுநிலை விவாதத்தில் தமிழ் மக்களின கைதுகள், கடத்தல்கள், காணாமல் போகும் சம்பவங்களுக்கு எதிராக கடுமையாக சாடினார். இவரது இந்த உரைகள் தமிழ் மக்களின் துயரங்களை வெளிக்காட்டின.

**ரவி வாணன், யாழ்ப்பாணம்.**

## 01.2017 01 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 630 - முகமது நபி தனது படைகளுடன் மெக்கா நோக்கிப் பயணமானார்.
- 1833 - ஐக்கிய இராச்சியம் போக்லாந்து தீவுகளின் மீது உரிமை கொண்டாடியது.
- 1858 - இலங்கையில் முதலாவது தந்திச் சேவை கொழும்புக்கும் காலிக்கும் இடையில் ஆரம்பமானது.
- 1866 - யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக காவற்துறை (Police Force) அமைக்கப்பட்டது.
- 1872 - இலங்கையில் ரூபாய், மற்றும் சதம் ஆகிய நாணயங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.
- 1872 - முதலாவது இந்திய அஞ்சல் (தபால்) சேனீ மலைச் (Mount Cenis) சுரங்கம் ஊடாக சென்றது.
- 1883 - இலங்கையின் தமிழர் தாயகம் வடக்கு, கிழக்கு என இரண்டு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது.
- 1896 - இலங்கையில் முன்னர் ரொபேர்ட்சன் கம்பனியின் பொறுப்பில் இருந்த தொலைபேசி சாதனத்தை இலங்கை அரசு கையேற்றது.
- 1912 - சீனக் குடியரசு அமைக்கப்பட்டது.
- 1927 - மெக்சிக்கோவில் கத்தோலிக்க மதத் தடையை எதிர்த்து மதத் தீவிரவாதிகள் அரசுடன் போர் தொடுத்தனர்.
- 1958 - இலங்கையில் வாகன இலக்கத்தகடுகளில் சிங்கள மொழியில் ஸ்ரீ எழுத்து கட்டாயமாக்கப்பட்டது.
- 1958 - ஐரோப்பிய சமுகம் அமைக்கப்பட்டது.
- 1995 - உலக வணிக அமைப்பு உருவாக்கம்.
- 1999 - யூரோ நாணயம் அறிமுகம்.
- 2008 - கொழும்பில் ஐதேக நாடாளுமன்ற உறுப்பினர் ஐஐஇலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் தியாகராஜா மகேஸ்வரன் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

### பிறப்புகள்

- 1894 - சத்தியேந்திர நாத் போசு, இந்தியக் கணிதவியலர் . (இ. 1974)
- 1902 - பஸ்டர் நூபன், தென்னாப்பிரிக்கத் துடுப்பாளர். (இ. 1977)
- 1914 - நூர் இனாயத் கான், பிரித்தானிய உளவாளி . (இ. 1944)
- 1919 - ஜே. டி. சாலிஞ்சர், அமெரிக்க எழுத்தாளர் . (இ. 2010)
- 1925 - வி. எஸ். ராகவன், தமிழ்த் திரைப்பட, நாடக நடிகர் . (இ. 2015)
- 1942 - அலசான் வட்டாரா, ஐவோரிய அரசியல்வாதி.
- 1943 - செம்பியன் செல்வன், ஈழத்து எழுத்தாளர்.
- 1944 - உமர் அல்-பஷீர், சூடானிய அரசுத்தலைவர்.
- 1951 - நானா படேகர், இந்திய நடிகர்.
- 1952 - சேக் அமத் பின் கலீபா அல் தானி, கத்தார் மன்னர்.
- 1952 - ஷாஜி என். கருண், இந்தியத் திரைப்பட இயக்குநர்.
- 1966 - மில்லர், முதல் கரும்புலி .(இ. 1987)
- 1975 - சோனாலி பண்டர், இந்திய நடிகை.
- 1978 - பரமஹம்ஸ நித்யானந்தர், இந்திய ஆன்மிகவாதி.
- 1978 - வித்யா பாலன், இந்திய நடிகை.
- 1984 - அலோக் கபாலி, வங்காளதேச துடுப்பாளர்.
- 1986 - சுங்மின், தென்கொரிய நடிகர்.

### இறப்புகள்

- 1894 - ஜன்ரிக் ஏர்ட்சு, செருமானிய இயற்பியலாளர் . (பி. 1857)
- 1901 - சி. வை. தாமோதரம்பிள்ளை தமிழ்ப் பதிப்புத்துறையின் முன்னோடி .(பி. 1832)
- 1955 - சாந்தி சுவரூப் பட்நாகர், இந்திய அறிவியலாளர். (பி. 1894)
- 1992 - கிரேசு ஹாப்பர், அமெரிக்க நிரலாளர். (பி. 1906)
- 2008 - தியாகராஜா மகேஸ்வரன், இலங்கைத் தமிழ் அரசியல்வாதி .(பி. 1960)

### சிறப்பு நாள்

- புத்தாண்டு நாள் (கிரெகொரியின் நாட்காட்டி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 50 | 40 | 30 | 60 | 30 |
| உருளைக்கிழங்கு | 120 | 90 | 110 | 100 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 200 | 180 | 180 | 120 | 200 | 200 |
| தக்காளி | 200 | 110 | 180 | 180 | 200 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 50 | 70 | 60 | 60 |
| கோவா | 30 | 20 | 30 | 30 | 40 | 30 |
| கரட் | 120 | 90 | 80-140 | 90 | 160 | 100 |
| பூசணி | 60 | 35 | 50 | 50 | 60 | 50 |
| புடோல் | 80 | 50 | 80 | 60 | 80 | 70 |
| வாழைக்காய் | 40 | 40 | 50 | 50 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 | 80 | 80 | 100 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 300 | 240 | 240 | 280 | 240 | 300 |
| வெண்டிக்காய் | 100 | 70 | 120 | 80 | 120 | 80 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 | 50 | 60 | 80 | 50 |
| பயற்றங்காய் | 150 | 150 | 160 | 120 | 160 | 180 |
| லீக்ஸ் | 100 | 80 | 100 | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 60 | 50 | 60 | 60 | 100 | 80 |
| கறிமிளகாய் | 200 | 180 | 200 | 180 | 280 | 140 |
| முருங்கைக்காய் | 400 | 300 | 800 | 450 | 400 | – |
| போஞ்சி | 120 | 110 | 120 | 100 | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | 20 | 20 | 30 | 25 | 40 | 30 |
| கீரை - 1பிடி | 30 | 30 | 30 | 25 | 40 | 30 |
| தேசிக்காய் | 300 | 250 | 350 | 300 | 400 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 45 | 20-40 | 50 | 35 | 40-60 | 40 |
| இராசவள்ளி | 280 | 250 | 250 | 250 | 300 | 350 |
| வெங்காயப்பூ | 250 | 200 | 240 | 240 | 280 | 180 |
| முள்ளங்கி | 60 | 40 | 60 | 60 | 80 | 70 |
| பொன்னாங்காணி | 40 | 15 | 30 | 30 | 40 | 30 |
| வல்லாரை | 10 | 15 | 20 | 20 | 20 | 25 |
| ஈரப்பலா | 60 | 50 | 60 | 60 | 100 | 60 |

வட மாகாணத்தில் முதல் தர சாரதி பயிற்சிப் பாடசாலை



# கிருபா லேணர்ஸ்

(அரச அங்கீகாரம் பெற்ற A தர சாரதி பயிற்சிப் பாடசாலை)

**மும்மொழிகளிலும் வாகன பயிற்சி அளிக்கப்படும்**

தலைமைக் காரியாலயம்
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353, 021 492 3200, 0777 22 52 92

A9 வீதி, கிளிநொச்சி.
(கச்சேரி முன்பாக)
021 228 5505 / 071 454 6955

216, A9 வீதி, வவுனியா.
(வசந்தி திரையரங்கு முன்பாக)
024 222 7777 / 0777 100 444

94, பிரதான வீதி, மன்னார்.
023 225 1656 / 077 847 2732



227/6 கே.கே.எஸ். வீதி.
சுன்னாகம்.
(மதவடி அண்மையில்)
021 224 2022
071 454 6956

கண்டி வீதி, சாவகச்சேரி.
(நீதிமன்றம் அண்மையில்)
021 227 0700
021 492 3202

முதலாம் கட்டைச்சந்தி.
பருத்தித்துறை.
021 492 3201
071 454 6958

பிரதான வீதி, நெல்லியடி
(பொலிஸ் நிலையம் முன்பாக)
021 300 6550
077 474 7417

36, கச்சேரி நல்லூர் வீதி.
(கச்சேரி அருகாமை)
யாழ்ப்பாணம்.
076 722 5292
071 777 5454

ஓம்பிளாசா, பருத்தித்துறை வீதி.
ஆவரங்கால்.
021 222 6688
071 777 6969

புளியடிச்சந்தி.
முல்லை வீதி, விசுவமடு.
021 320 1515
071 454 6955

நாச்சிக்குடா சந்தி.
மன்னார் வீதி, முழங்காவில்.
021 300 6544
071 454 6955

வாடியடி சந்தி, பூநகரி.
021 320 1818
071 454 6955

- வாகன பயிற்சிகள் சகல கிளைகளிலிலும் வழங்கப்படும்.
- குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவாக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.
- எழுத்துப்பரீட்சையில் சித்தியடைய விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள் நடைபெறும்.
- அனுபவம் வாய்ந்த வாகன பயிற்றுனர்களால் வாகன பயிற்சிகள் வழங்கப்படும்.
- தாங்கள் விரும்பிய நேரங்களில் வாகனப் பயிற்சி வழங்கப்படும்.
- தவணை முறைக் கட்டணங்கள்.
- வான், கார், முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள், லான்ட்மாஸ்ரர், ரக்டர், பஸ் என்பவற்றுக்கு பயிற்சியுடன் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.
- ரெயலில் சித்தியடையத்தவறின் தொடர்பயிற்சி இலவசமாக வழங்கப்படும்.
- எழுத வாசிக்க கஸ்ரமானவர்களுக்கும் மற்றும் சிறந்த சாரதிகளை உருவாக்குவதற்கும் நவீன முறை வீதிச் சட்டம் பற்றிய வீடியோ வகுப்புக்கள் நடைபெறும்.









**NORTH LANKA IIT**

இலங்கையின் தலைசிறந்த
தனியார் உயர்கல்வி நிறுவனம்

UGC அங்கீகாரம் பெற்று பல ஆண்டு காலம் தொடர்ந்து வெற்றிகரமாக பல உயர்கல்வி கற்கைநெறிப் பட்டதாரிகளை உருவாக்கிக்கொண்டிருக்கும் பெருமைக்குரிய கல்வி நிறுவனம்

**B.Sc. in Physical Education & Sports**
Entry Qualification: 2 Years Diploma in Physical Education
Duration: 1 Year

**Post Graduate Diploma in Education Management [PGDEM]**
Entry Qualification: Any Degree
Duration: 1 Year
(அதிபர்களுக்கும் உபஅதிபர்களுக்கும் பதவி உயர்வுக்கு உகந்த கற்கைநெறி)

மேலும் பல கற்கைநெறிப் பாடத்திட்டங்களின்
முழு விவரங்களை பெற
கீழ்கண்ட முகவரியை தொடர்பு கொள்ளவும்..

தங்கள் கல்வித்தகுதியை மேலும் உயர்த்துவதன் மூலம் பதவி உயர்வும், சம்பள உயர்வும் கிட்டும்...

Happy New Year 2017

இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

புத்தாண்டில் புதுமைகள் தொடரட்டும்
மாற்றங்கள் மலரட்டும்
இன்னிசை முழங்கட்டும்
எல்லோர் வாழ்விலும் மகிழ்ச்சி நிலைக்கட்டும்.

**North Lanka IIT,**
**Top Floor, People's Bank Building, Stanley Road, Jaffna.**
**Phone: 0767504535 / 0214927088.**

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் புதுவருட வாழ்த்துக்கள்.

SILVER SHIELD SOCKS

கடந்த 30 வருடங்களாக யாழ்.மக்களின் நன்மதிப்பைப் பெற்ற ஒரே ஒரு தயாரிப்பு

SILVER SHIELD SOCKS காலுறைகள்

☆ தரமானவை, நீடித்த பாவனை ,மலிவு விலை
☆ பாடசாலை மாணவர்களுக்கும் அலுவலக உத்தியோகத்தர்களுக்கும் மாபெரும் விலைக்கழிவு.
☆ மொத்தமாக கொள்வனவு செய்யும் பாடசாலைகளுக்கு மேலும் விசேட கழிவு வழங்கப்படும். விரையுங்கள்.

ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 222 5392

# சந்தை வியாபாரிகள் வெளியேறினர்

நெல்லியடி சந்தை வியாபாரிகளுக்கும் கரவெட்டி பிரதேச சபையினருக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலில் பிரதேச சபையினரின் கோரிக்கையினை ஏற்க மறுத்து கலந்துரையாடலில் இருந்து சந்தை வியாபாரிகள் வெளியேறினர்.

நெல்லியடி சந்தையில் 2017 ஆம் ஆண்டில் இருந்து வியாபாரிகளுக்கான நில வாடகை பன்மடங்காக அதிகரிக்கப்படவுள்ளமையால் அதனைக் கண்டித்து இன்றுமுதல் பகிஷ்கரிப்பில் ஈடுபடுவதற்கு வியாபாரிகள் தீர்மானித்திருந்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நெல்லியடி வர்த்தக சங்கத்தின் ஊடாக சந்தை வியாபாரிகளை பிரதேச சபைக்கு அழைத்த சபைச் செயலாளர் அ.வினோராஜ் மாகாண சபை உறுப்பினர்கள் வி.சிவயோகன்,எஸ்.அகிலதாஸ் முன்னிலையில் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். அப்போது 10 வீத வரி அதிகரிப்பினை 5 வீதமாக குறைப்பதாக செயலாளர் கூறிய நிலையில் அதனை ஏற்க மறுத்து கலந்துரையாடலில் இருந்து வியாபாரிகள் வெளியேறினர்.

இன்று சந்தையில் குழப்பம் ஏற்பட்டால் நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதேச சபை செயலாளர் கூறினார். ஆனால் வரி அதிகரித்து அறவிட்டால் தாம் பகிஷ்கரிப்பில் ஈடுபடப் போவதாக சந்தை வியாபாரிகள் திட்டவட்டமாக தெரிவித்தனர். (இ-60)

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
ஆங்கில அறிவுள்ள கணக்காளர் (பெண்) ஒருவர் தேவை.
லைடன் புடவை நிலையம்
410, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2381

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய புதுவருட வாழ்த்துக்கள்!

அரச அங்கீகாரம் பெற்ற "A" தர சாரதிப் பயிற்சிப் பாடசாலை

நியூ நெல்சன் சாரதி பயிற்சிப் பாடசாலை

- சாரதி பயிற்சிகள் எமது அலுவலகத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும்.
- சகல வாகனங்களுக்கும் அனுபவம் மிக்க முறைகளால் சிறந்த முறையில் பயிற்றுவித்து மிக விரைவாக சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொடுக்கப்படும்.
- எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வகுப்புகள்.
- அதிகூடிய பயிற்சி நேரங்கள். அதிகூடிய பயிற்சிக் காலங்கள். தவணைமுறைக் கட்டணங்கள்.
- வீதி ஒழுங்கு நூல் இலவசமாக வழங்கப்படும்.
- நவீன வாகனங்களில் வாகனப் பயிற்சிகள்.

New Nelson Driving School



கிளைகள்

இல.97 A, பருத்தித்துறை வீதி, நெல்லியடி. 021 226 1393, 077 111 3382

இல.89, கண்டி வீதி சுண்டுக்குளி யாழ்ப்பாணம். 021 222 4527 077 358 1916

சீரணிச் சந்தி, சண்டிலிப்பாய். 021 225 6955 077 794 2312/ 071 735 8440

இராமலிங்கம் வீதி, சாவகச்சேரி. 077 374 7179 021 227 1313

பிரதான வீதி, வல்வெட்டித்துறை, 077 557 3711 021 492 3733

தேவை
லான்சர் 90 ஜப்பான் மோட்டார் சைக்கிள் தேவை.
தொடர்புகளுக்கு:-077 618 3885

விற்பனைக்கு
C-50 லான்சர் நீல நிற Honda மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:- 077 172 8141

வேலைவாய்ப்பு
யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா போன்ற பிரதேசங்களில் உள்ள எமது நிறுவனங்களுக்கு எழுதுவினைஞர்கள் தேவை. (A/L பங்கு பற்றிய ) 15000 சம்பளம். உணவு, தங்குமிடம் இலவசம். முற்பயிற்சி கேகாலையில் 7 நாட்கள் பயிற்சி அளிக்கப்படும். (சிங்களம் பேசக் கூடியவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு 077 600 0507
No 137/2/1, Colombo Road, Kegalla

சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை கோண்டாவில்
புதிய மாணவர் அனுமதி-2017
➢ விசேட தேவையுடைய மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.
➢ வடமராட்சி, தென்மராட்சி மாணவர்களுக்கான போக்குவரத்து வசதியுண்டு.
➢ இலவசக் கல்வி, உணவு வழங்கப்படும்.
விண்ணப்பங்களை நேரில் சமர்ப்பிக்கவும். (7323)
அதிபர்
சிவபூமி பாடசாலை, கோண்டாவில்.
021 222 7938

யாழ் REGISTER NOW!
Java Programming Classess with practicals
weekdays 9-11am 7-9 pm
weekends 9-12am 8-9.30 pm
0777861677

காணி விற்பனை
A9 வீதி நுணாவில் சந்திக்கு அருகே மட்டுவில் வீதியில் (200 M) துர்க்கை அம்மன் ஆலய வீதி ஆரம்பத்தில் 10 பரப்பு காணி பிரித்தும் கொடுக்கப்படும்.
0778730129

Yarl Beauty & Language's Skills College
YBLSC
மகளிருக்கான துரித 3 மற்றும் 4 மாதகால டிப்ளோமா கற்கை நெறிகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.
அழகுக்கலை
கேக் ஐசிங்
தையல்
சனி, ஞாயிறு பிரிவுகள் 08.01.2017 அன்று 10.00 மணிக்கு
கிழமை நாள் பிரிவுகள் 10.01.2017 அன்று 10.00 மணிக்கு
சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட NVQ பாடத்திட்டம் பின்பற்றப்படுவதுடன் மிகச்சிறந்த செய்முறை விளக்கத்துடன் இடம் பெற்று பயிற்சி முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அலுவலக நேரத்தில் வருகைதரவும்.
இல.17, 3ம் ஒழுங்கை, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(ராசி கலெக்சனுக்கு அருகில் உள்ள ஒழுங்கை )

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய புதுவருட வாழ்த்துக்கள்
எரிக்கணேஷ் மூக்குக் கண்ணாடியகம்
நவீன ரக மூக்குக் கண்ணாடிகளை மிகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள தேர்ந்த ஒரே ஸ்தாபனம்
564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P. 021 222 2486



கிளைகள்:-
பழைய பொலிஸ் நிலையம் முன்பாக, இல. 80, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.
இல. 91, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில்.

### வெற்றிலைக்கேணி காட்டில்

# கசிப்பு உற்பத்தி நிலையம் சுற்றிவளைப்பு கசிப்புக் கோடா, கசிப்பு கைப்பற்று

## சந்தேகத்தின் பேரில் இருவர் கைது



(மல்லாவி)

கிளிநொச்சிமாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட பளை பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள வெற்றிலைக் கேணி அரச, காட்டுப் பகுதிக்குள் சட்டவிரோதமாக இயங்கிய கசிப்பு உற்பத்தி நிலையம் சுற்றி வளைக்கப்பட்டு 3 இலட்சத்து 29 ஆயிரத்து 215 மில்லி லீற்றர் கசிப்புக்கோடாவும் 24 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்திய உபகரணங்களுடன் சந்தேகத்தின் பேரில் சம்பவ இடத்தில் வைத்து இரண்டு நபர்கள் கைது செய்யப்பட்டதுடன் கசிப்பு உற்பத்தி நிலையமும் நிர்மூலமாக்கப்பட்டுள்ளதாக பளை பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அதிகாலை 2 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

பளை பொலிஸ் நிலையத்திற்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.எஸ். டபிள்யூ. ரஞ்சன பண்டார தலைமையில் பொலிஸ் சார்ஜன் நவரட்ணா (36874) மற்றும் பொலிஸ் கொஸ்தாபல்களான சுனில் (33605), குணதிலக (33325), பிரசாந் (83237) ஆகியோராடங்கிய பொலிஸ் அணியினரின் திடீர் முற்றுகையின் போதே கசிப்பு உற்பத்தி நிலையம் கைப்பற்றப்பட்டு நிர்மூலமாக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் கைப்பற்றப்பட்டுள்ள தடயப்பொருடகள் பளை பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன் கைதான சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடைபெற்று முடிந்த நிலையில் அவர்கள் பொலிஸபிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மீண்டும் எதிர்வரும் 4 ஆம் திகதி புதன்கிழமை காலை கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்களுடன் சந்தேக நபர்களை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் நடைபெற்று வருவதாக பளை பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)




# பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மன்னார் மாவட்டத்தில் முன்னெடுப்பு

(மல்லாவி)

நல்லாட்சி அரசின் மூலம் மன்னார் மாவட்டத்தில் தற்போது பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட அபிவிருத்தி தொடர்பாக மன்னார மாவட்டச் செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நல்லாட்சி அரசின் மூலம் மிகவும் குறுகிய காலப் பகுதியில் மன்னார் மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப் பட்டுள்ளன.



குறிப்பாக மன்னாரில் மட்டும் சுமார் நான்காயிரம் பில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதில் மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஊடாக 2600 பில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எதிர்காலத்திலும் மன்னார் மாவட்டத்தின் அபிவிருத்திக்கு மன்னார் மாவட்ட ஊடகவியலாளர்களின் பங்களிப்பு மிகவும் கட்டாயமாக தேவை. எனவே அனைவரும் இணைந்து மன்னார் மாவட்டத்தின் அபிவிருத்திக்காக உழைப்போம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில்,

மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் நந்தினி ஸ்ரான்லி டிமேல், மன்னார் மாவட்டச் செயலகத்தின் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சிறிபாஸ்கரன், பிரதேச செயலாளர்கள், மாவட்டச் செயலக அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-15)

# மாற்றுத்திறனாளிகளுக்கான சாரதி அனுமதிப்பத்திரத்திற்கு விபரங்கள் கோரல்

கிளிநொச்சியில் மாற்றுத்திறனாளிகளுக்கான சாரதி அனுமதி பத்திரத்திற்கான விபரங்கள் கோரப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தல் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு சாரதி அனுமதி பத்திரம் பெற்றுக்கொடுப்பது தொடர்பாக உரிய அமைச்சு மற்றும் திணைக்களங்களுக்கு விபரங்கள் அனுப்ப வேண்டியிருப்பதனால் வாகனங்களை பாவிக்கும் மாற்றுத்திறனாளிகள் தங்களுடைய விபரங்களை கிளிநொச்சி மாவட்ட மாற்றுவலுவுள்ளோர். சங்கத்திடம் வழங்குமாறு குறித்த சங்கம் அறிவித்துள்ளது.

சாரதி அனுமதி பத்திரம் தேவையான மாற்றுத்திறனாளிகள் முதலில் தங்களுடைய விபரங்களை கிளிநொச்சி உதயநகர் முத்துமாரி அம்மன் வீதியில் அமைந்துள்ள மாற்றுத்திறனாளிகள் சங்கத்தில் எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்னதாக வழங்குமாறும் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது. (2-312)

# கரும்புச் செய்கையை மேற்கொள்ள முல்லைத்தீவு மாவட்டத்தில் திட்டம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரும்பு செய்கையை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாக கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் 5 ஆயிரம் ஹெக்டேயர் நிலப்பரப்பில் கரும்பு செய்கை மேற்கொள்ள முதலீட்டாளர்கள் பலர் விருப்பம் கொண்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த செயற்றிட்டத்தில், உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளதாகவும் கரும்புச் செய்கையின் பின்னரான அறுவடைக்காக நிலையான விலையை நிர்ணயிப்பதற்கும் தமது அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் வடக்கு மாகாணத்தில் 4 தொழிற்சாலைகளை புதிததாக ஆரம்பிப்பதற்கு தமது அமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.


மேலும், ஆனையிறவு உப்பளம், பரந்தன் இரசாயன தொழிற்சாலை, காங்கேசன் துறை சீமெந்து தொழிற்சாலை என்பவற்றை மீள ஆரம்பிப்பது தொடர்பிலும் ஆரம்ப கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் றிசாத் பதியுதீன் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# ஆயுர்வேத வைத்திய நிலையத்தின் சேவையை மீளவும் ஆரம்பிக்குக

கரைச்சி பிரதேச சபையினால் 2012 ஆம் ஆண்டில், கண்டாவளை சுண்டிக்குளம் சந்தியிலுள்ள ஆயுர்வேத வைத்திய நிலையம் வாரத்தில் மூன்று நாட்கள் மேற்கொண்ட சேவையை நிறுத்திக் கொண்டதால் இப் பிரதேச மக்கள் வைத்திய சேவையைப் பெற முடியாமல் அவதியுறுவதாகவும் இதனால் நீண்ட தூரம் பிரயாணம் செய்து தருமபுரம் வைத்திய சாலைக்கு செல்ல வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளதாக கண்டாவளை பிரதேச சனசமூக நிலையங்களின் சமாசம் சுட்டிக்காட்டியுள்ளது.

இவ் விடயம் சம்பந்தமாக சமாசத் தலைவர் சி.பெருமாள் கரைச்சி பிரதேச சபைச் செயலாளர், கண்டாவளை பிரதேச செயலர் ஆகியோர் உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் 2017 ஆம் ஆண்டு ஜனவரி முதல் இவ் வைத்திய சேவை நிலையத்தை மீளவும் ஆரம்பித்து இப்பகுதி மக்களின் மருத்துவ சேவைக்கு உதவுமாறு அப் பகுதி மக்களின் சார்பாக கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-84)

# அடையாளக் குறிக்கல் விஷமிகளால் உடைப்பு



வவுனியா மாவட்டத்தையும் மன்னார் மாவட்டத்தையும் எல்லைப்படுத்தும் அடையாளக்குறிக்கல் திட்டமிட்டு விஷமிகளால் சில தினங்களுக்கு முன்னர் உடைக்கப்பட்டுள்ளது.

வவுனியா - பிரமணாளங்குளம் மடு பிரதான வீதியில் பிரமணாளங்குளத்தில் இருந்து 9.5 கிலோ மீற்றர் தூரத்தில் வவுனியா மாவட்டத்தின் பெரியதம்பனை அமைந்துள்ளது. அதனையடுத்து மன்னார் மாவட்டம் பெரியபண்டிவிருச்சான் அமைந்துள்ளது. இவ்விரு பகுதிகளுக்குரிய மாவட்டங்களை வேறுபடுத்திக் காட்டும் அடையாளக்குறிக்கல்லே திட்டமிட்டு விஷமிகளால் உடைக கப்பட்டுள்ளது. (2-250)

# சிவபூமி பாடசாலை அனுமதி தொடர்பானது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மன வளர்ச்சி குறைந்த மாணவர்களின் கல்விக்காக சகல நவீன வசதிகளுடன் சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட சிவபூமி பாடசாலையில் புதிய மாணவர்கள் அனுமதிக் கப்படுவர்.

பலரது வேண்டுகோளுக்கமைய அப் பாடசாலை கடந்த ஏப்ரல் மாதம் திறக்கப்பட்டு இயங்கி வருவது குறிப்பிடத் தக்கது. (2)

# சட்டத்திற்கு முரணான வகையில் காடுகள் கண்மூடித்தனமாக வெட்டப்பட்டு அழிப்பு

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் குற்றச்சாட்டு

(பனிக்கன்குளம்)

காடுகளை பாதுகாக்க வேண்டிய வனவள பாதுகாப்புத் திணைக்களம் முல்லைதீவில் பாரியளவில் காடுகளை அழிப்போரை பாதுகாக்கும் பணியை செய்து வருகின்றது என வடக்கு மாகாணசபை உறுபபினர் து.ரவிகரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் அத்தியாவசிய தேவைக்காக ஒரு தடி வெட்ட முடியாத அளவுக்கு வனவள பாதுகாப்பு திணைக்கள பணியாளர்கள் தடை போடுகின்றனர்.

ஆனால் மாவட்டத்தில் 5 இற்கும் மேற்பட்ட இடங்களில சட்டத்திற்கு மாறாக மரங்கள் வெட்டப்பட்டு வனவளம் அழிக்கப்படுவதை பார்த்துக் கொண்டிருக்கின்றது.

மரங்களை அழிப்போருக்கு பாதுகாப்பும் வழங்கப்படுகிறது எனவும் ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாவட்டத்தில் காடுகள அழிக்கப்படும் இடங்கள் மற்றும் அழிக்கப்பட்டுக் கொண்டிருப்பதாக ஆதாரங்களை திரட்டி வருகிறோம்.

இது குறித்த விரிவான அறிக்கை ஒன்றை 2017 ஆம் ஆண்டு தை மாத முற்பகுதியில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோருககு பொதுமக்களின் கையொப்பங்களுடன் நேரிலும் தபால் மூலமாகவும் அனுப்பி வைப்பதற்கு தீர்மானித்துள்ளோம் எனவும் அவர் தெரிவித்தார்.

தற்போதும் உடையார் கட்டு, சிறாட்டிகுளம், பனங்காமம்பற்று உள்ளிட்ட மாவட்டங்களில் 5 பிரதான இடங்களில் பெருமளவு காடுகள் கண்மூடித்தனமாக வெட்டி அழிக்கப்பட்டு வருகின்றன எனவும் ரவிகரன் மேலும் தெரிவித்தார். (2-281)

அன்புதான் உலகம்; அன்புதான் இன்பம்; அன்புதான் உலக மகா சக்தி.

~ அசோகச்சக்கர வர்த்தி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# மனிதத்தை மனிதம் மதிக்கும் ஆண்டாக 2017 மலரட்டும்

2017ஆம் ஆண்டு இன்று முகிழ்ந்து வருகிறது. புதிய ஆண்டில் எல்லா வளமும் எல்லா நலமும் எல்லோருக்கும் கிடைக்க இறைவனின் பேரருளை வேண்டி நிற்கின்றோம்.

இந்த உலகப்பிரபஞ்சம் முழுமையையும் படைத்து காத்து அருளும் இறைவனின் பேரருள் இன்றி அணுவும் அசையாதென்ற உண்மைகளுக்கு மத்தியில் இறைநம்பிக்கையை நம் இளம் சந்ததியிடம் ஏற்படுத்துவதே மனிதம் வாழ்வதற்கான ஒரே வழியாகும்.

ஆன்மிகம் என்பது மனிதனை தெய்வமாக்குவது. ஆன்மிகம் இல்லாத வாழ்வு ஒளியில்லாத வீடு போன்றது. எனவே ஆன்மிகப் பேரொளி நம் இதயங்களில் என்றும் ஒளிர வேண்டும்.

ஆன்மிகம் என்பதை பலரும் பலவாறாக பொருள் படுத்துகின்றனர்.

சைவ சித்தாந்தம் கூறும் தத்துவமே ஆன்மிகம் என்பர் ஒரு சாரார். துவைதம், அத்வைதம் என்ற தத்துவப் பாகங்களே ஆன்மிகம் என்பது இன்னொரு சாராரின் வாதம்.

இவையாவுமல்ல; பற்றற்ற பரமநிலைதான் ஆன்மிகம் என்று தங்கள் வாதத்தை வலியுறுத்துவோரும் உள்ளனர்.

ஆனால் இவையல்ல ஆன்மிகம்.

ஆன்மிகம் என்பது அன்பை அடித்தளமாகவும் இரக்கத்தைப் பக்கபலமாகவும் மனித நேயத்தை உட்பலமாகவும் கொண்டது. அனைத்து ஜீவராசிகள் மீதும் அன்பு காட்டும் அற்புதமே ஆன்மிகம் எனலாம்.

ஆன்மிகம் என்பதில் சமய வேறுபாடில்லை. மொழி, இன வேறுபாடு இல்லை. கடவுள் வேறுபாடில்லை. மனித சமூக வேறுபாடில்லை. எல்லாம் ஒன்று. எல்லாம் இறைமயம். எல்லாம் அன்புமயம் என்பது தான் ஆன்மிகம்.

ஆக, ஆன்மிக சிந்தனை; ஆன்மிக ஊற்று, ஆன்மிக பலம் இவை இருக்கும் போது எவரும் அஞ்சுதல் தேவையற்றது. எனினும் எங்கள் மண்ணில் ஆன்மிகப் பஞ்சம் உள்ளது என்பதை ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

இலங்கை மண்ணுக்கு வருகை தந்த சுவாமி விவேகானந்தர் கூறியது; ஆன்மிக தானம் செய்யப்பட வேண்டும் என்பதுதான்.

பொதுவில் தானம் என்றால் அது அன்னதானமாக, இரத்ததானமாக, கண்தானமாக, கோதானமாக, பூதானமாக நாம் அறிந்திருக்கின்றோமேயன்றி, ஆன்மிக தானம் பற்றி இம்மியும் நாம் அறிந்திருக்கவில்லை. ஆனால் ஆன்மிக தானம் தான் மிகவும் முக்கியமானது. ஆன்மிக தானம் செய்யப்பட்டு எங்கும் அன்புமயம் ஏற்பட்டு விட்டால், அது தெய்வீகமான சூழலை ஏற்படுத்தித் தரும்.

பாரத பூமியில் நூறு கோடியைத் தாண்டிய மக்கள் தொகை. பல இனம், பல மொழி என்றிருந்தும் – இனம், மதம், மொழி என்று வேறுபாடுகளைக் களைந்து பாரத பூமி, பாரத தேசம், நாம் இந்தியர்கள் என்று ஒரேகுரலில் ஒலிக்கச் செய்யும் மகா சக்தி இந்தியாவில் உள்ளது எனில் அதற்கு காரணம் ஆன்மிகம் என்பது மறுக்க முடியாத உண்மை.

நூறு கோடி மக்களைக் கொண்ட ஞானபூமியாம் இந்தியாவை போன்று நம் மண்ணிலும் ஆன்மிகம் தழைக்க வேண்டும். ஆன்மிகபலம் ஏற்படுமாக இருந்தால் நிச்சயம் நாட்டில் அமைதி, சாந்தி, சமாதானம் ஏற்படும்.

எனவே மலரும் 2017ஆம் ஆண்டு இலங்கை மண்ணில் ஆன்மிகப் பலம் பெருக, அன்பு மயம் சிறக்க இறையருளை வேண்டி புத்தாண்டை வரவேற்போம்.

# உவகையும் உற்சாகமும் பொங்கட்டும்!



இன்று 2016 ஆம் ஆண்டு விடைபெற்று 2017 ஆம் ஆண்டு உதயமாகியுள்ளது.

மனிதர்களைப் பொறுத்தவரை ஆன்மீகம் தான் ஆணிவேர். ஆணிவேர் பலமாக இருந்தால்தான் மற்றவர்களுக்கும் அது பலமாக இருக்கும். ஆற்றில் ஓடும் தண்ணீர் வேண்டுமென்றால் கவனமாக ஆற்றில் இறங்கிக் குடிக்கவேண்டும். மரத்தில் உள்ள மாங்காய் வேண்டுமென்றால் மரத்தில் ஏறிப் பறிக்கவேண்டும். அது போல் மன அமைதி வேண்டுமென்றால் ஆன்மீகத்தில் ஈடுபட வேண்டும். அதில் ஒரு ஈடுபாடு வர வேண்டும். தினமும் ஒரு பத்து நிமிடமாவது தியானத்திற்கு ஒதுக்கவேண்டும். பொழுது போக்குகளை நாடிச் செல்லும் மனதைக் கட்டுப்பாட்டில் வைக்க வேண்டும்.

உணவைப் பொறுத்தவரை எப்படி மனக்கட்டுப்பாடு தேவையோ அதுபோல வாழ்க்கையை பொறுத்தவரை நமக்கு மனக்கட்டுப்பாடு தேவை. மனக்கட்டுப்பாட்டிற்கு தியானம் தேவை.

இந்த ஆண்டைப் பொறுத்தவரை எல்லோரும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். எந்த விடயமாக இருந்தாலும் ஒரு 5 நிமிடம் பொறுமையாக இருந்து முடிவெடுக்கவேண்டும். இயற்கையை வணங்க வேண்டும். இயற்கையைத் தெய்வமாகவணங்கும்பொழுது இயற்கை இதயமாக மாறி மனிதனை வாழ வைக்கும்.

சர்வே ஜனகா சுகினோ
பவந்து
இன்பமே சூழ்க
எல்லோரும் வாழ்க.

தமிழ்முகில் சிவஸ்ரீ. சோமாஸ்கந்த தண்டபாணிகதேசிகர், ஜே.பி, இந்து மத குரு பீடாதிபதி.

# புத்தாண்டிலே தீர்வு வித்தாகுமா?



உள்ளப்பதைப்போடு ஜனவரி 10 ஆம் திகதிக்காய்க் காத்திருக்கிறார்கள் இலங்கை மக்கள். இலங்கை மக்களென, தமிழர். சிங்களவர், முஸ்லிம்கள் அனைவரையும் சேர்த்துத்தான் சொல்லுகிறேன்.

நல்லாட்சி அரசாங்கம், பாராளுமன்றத்தை அரசமைப்புச் சபையாக மாற்றி, பல்லாண்டுகால இனப்பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் முகமாக, பிரதமரை உள்ளடக்கிய இருபத்தொருபேர்கொண்ட வழிகாட்டல் சபையை அமைத்தது.

பன்னிரண்டு தலைப்புக்களில் தீர்வுத் திட்டத்தினை ஆராய்வதாய் முடிவு செய்து, அதில் ஆறு விடயங்களை ஆராய்வதற்கென, சர்வகட்சி பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட உபகுழுக்கள் ஆறு அமைக்கப்பட்டன.

அவ் உபகுழுக்களில் பாராளுமன்ற உறுப்பினர்கள் தவிர்ந்த ஒருசிலரும் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

அந்த ஆறு குழுக்களும் முன்மொழிந்துள்ள விடயங்கள் எதிர்வரும் ஜனவரி 10 ஆம் திகதியளவில், அரசியலமைப்புச் சபையாக மாறவுள்ள பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளன.

உறுப்பினர்களின் கருத்துப் பரிமாற்றங்களின் பின்னர் சிலகாலம் கழித்து, திருத்தப்பட்ட மேற்படி தீர்வுத்திட்டம் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடப்படவுள்ளது.

அங்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொண்டால் மட்டுமே, இனப்பிரச்சினைக்கான இத்தீர்வுத்திட்டம் நிறைவேற்றப்படும் என்கிறார்கள்.

நீதிமன்றத்தின் பார்வை, சர்வஜன வாக்கெடுப்பு என, இத்தீர்வுத்திட்டம் மேலும் பல தடைகளைத்தாண்ட வேண்டியிருக்கலாம் என்றும் சொல்கிறார்கள். பாரதி சொன்னாற்போல ஆமை மலையேறிய கதைதான்.

கமபவாரிதி இ.ஜெயராஜ

## நாளை ஆரம்பம்

யாழ்.இந்துக் கல்லூரியின் 2017 ஆம் ஆண்டுக்கான முதலாம் தவணை கல்வி நடவடிக்கைகள் நாளை (02.01.2017) திங்கட்கிழமை ஆரம்பமாகிறது. எனினும் க.பொ.த (உ/த) கணித, விஞ்ஞானப் பிரிவுகள் 16.01.2017 திகதியே ஆரம்பமாகும் என கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (இ

## நேரமாற்றம்

இ.போ.ச. காரைநகர் சாலையின் பேருந்துகளின் நேரம் 2017.01.01 ஆம் திகதியிலிருந்து பாடசாலை நேர மாற்றத்தினால் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும் நேரங்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. 786- யாழ்ப்பாணம்- காரைநகர் 06.00, 782- யாழ்ப்பாணம்- காரைநகர் -5.40, 784- யாழ்ப்பாணம்- காரைநகர்- 6.40 யாழ்ப்பாண வணிகர் கழக வேண்டுகோளுக்கிணங்க இரவு நேர 784 ஆம் இலக்க சேவை யாழ்- பேருந்து நிலையத்திலிருந்து இரவு 9 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது என இ.போ.ச. (வடக்கு) காரை நகர் சாலை முகாமையாளர் அறிவித்துள்ளார். (இ

## மின் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை மணி வரை யாழ். பிரதேசத்தில Dr. சுப் பிரமணியம் வீதி, கந்த ரோடை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# ஆண்டுத் தொடக்கத்தில் அன்னை மரியாளின் திருவிழா

இன்று நாம் புதிய ஆண்டிற்குள் நுழைகின்றோம். கத்தோலிக்க திருச்சபை ஆண்டின் முதல் நாளை அன்னை மரியா- இறைவனின் தாய் என்னும் திருவிழாவை சிறப்பாக கொண்டாடப்படுகிறது. மரியா, இறைவனின் தாய் என்கிற இந்த திருவிழாவின் முக்கியத்துவம் என்ன? எதற்காக அவள் இறைவனின் தாய் என்று அழைக்கப்பட வேண்டும்? என்ற கேள்விகளை நாம் கேட்டுக் கொண்டால் அதற்கு விடைதேடவேண்டிய கட்டாயம் எமக்கு உண்டு.

அன்னை மரியா ஆரம்பகால திருச்சபையில் பெற்றிருந்த பங்கும், மரியியல் (மரியாள் பற்றிய ஆய்வு)சிந்தனைகளும், இடமும் மரியாளின் வணக்கத்தைக் கத்தோலிக்கத் திருச்சபையின் உயிரோட்டத்துடன் உறுதிப்படுத்தி

## பரமபிதா காட்டிய பாதை

இருந்தது. இயேசுவின் சீடர்களைத் தொடர்ந்து திருத்தந்தையர்களும் மரியயல் சிந்தனைகளை அவ்வப போது போதித்துள்ளனர்.

தந்தையில்லாமல் கடவுளால் பிறக்க முடிந்தபோது, தாயில்லாமல் அவரால் பிறக்க முடியவில்லை. மரியாளினால் கடவுள் மகிமைக்குள்ளானார் என்பதல்ல பொருள். மகிமை பொருந்திய கடவுளை ஈன்றெடுத்ததால் மரியா இறைவனின் தாயாகும் பேறு பெற்றார் என்பதே கத்தோலிக்க விசுவாசம். அன்னை மரியாளுக்கு ஆயிரம் சிறப்பியல்புகள் இருந்தாலும் இறைவனின் தாய் என்பதே இயேசு கிறிஸ்துவின் தாய்க்கு மகிமை சேர்ப்பதாக உள்ளது.

எனவே மரியா எவ்வாறு இறைவனின் தாய் என்று அழைக்கப்பட்டால் என்பதன் வரலாற்றுப் பின்னனியை நோக்குவோம்: கி.பி ஐந்தாம் நூற்றாண்டில், நெஸ்டோரியஸ் என்னும் கான்ஸ்டாண்டிநோபிளின் ஆயர், 429 ஆம் ஆண்டு, ஒரு ஞாயிற்றுக்கிழமை மறையுரையில், அன்னை மரியாளைப் பற்றி ஒரு தப்பறைக் கொள்கையைப் போதித்தார்.

இயேசுவில் இரண்டு ஆட்கள் இருக்கிறார்கள். மனித இயேசு ஒன்று. தெய்வீக. இயேசு இன்னொன்று. அவரைப் பொறுத்தவரையில், மரியாள் பெற்றெடுத்தது மனித இயேசுவைத்தான். எனவே, அவள் இயேசுவின் அன்னை என்றுதான் அழைக்கப்பட வேண்டுமே தவிர, கடவுளின் தாய் என்று அழைக்கப்பட முடியாது. இயேசு மரியாவிடமிருந்து பிறக்கும்போது, சாதாரண மனிதராகத் தான் பிறந்தார். பின்னர் தம் வாழ்க்கைக் காலதத்தில் கடவுளாக மாறினார் என்று கூறினார். ஆனால், அதுவரை திருச்சபையின் போதனை, இயேசு ஒரே ஆள்தான். ஆனால், அவரிடத்தில் இரண்டு தன்மைகள் இருந்தன. ஒன்று மனிதத் தன்மை. மற்றொன்று தெய்வீகத்தன்மை. நெஸ்தோரயசின் இந்த போதனை. மக்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இதனை ஒட்டி எபேசில் ஆயர் அலெக்ஸான்டரியா. ஆயர் சிரில் தலைமையில் நடைபெற்ற திருச்சங்கத்தில் நெஸ்டோரியஸ் மற்றும் அவருடைய போதனை கண்டனம் செய்யப்பட்டது. கி.பி 431ஆம் ஆண்டு ஜூன் மாதம் 7ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை நடைபெற்ற எபேசு திருச்சங்கம் மரியா கடவுளின் தாய் என்று உறுதியிட்டு பிரகடனம் செய்தது.

மரியாவின் தனிப்பெரும்பேறான கடவுளின் தாய் என்பது இயேசு இறை - மனித இயல்புகளை உள்ளடக்கிய ஒரே கடவுள் என்பதால் உண்மையாகிறது. இயேசு கடவுளின் மகன் மட்டுமல்ல. இயேசு கடவுள் ஆவார். இயேசு கடவுள் என்றால் மரியா கடவுளின் தாயே. தாய் அன்பை உலக மொழிகளில் எடுத்துரைக்க போதிய வார்த்தைகளே இல்லை. இதனை இந்த சின்ன சம்பவம் எடுத்து விளக்கும் என்று நினைக்கின்றேன்: தாயும் குழந்தையும் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தவேளை கொடிய தேள் தாயை கொட்டி விடுகிறது. சட்டென கண் விழித்த தாய் நல்ல வேளை தேள் என் குழந்தையை கொட்டவில்லை. என்று குழந்தையை தூக்கி அன்பு முத்தம் பகிர்ந்தாள். இதுதான் அன்னையின் தாயன்பு. தாயின் அன்பிற்கு இணை எதுவும் இல்லை. ஆசைப்பட்ட எல்லாவற்றையும் பணமிருந்தால் வாங்கிவிடலாம். ஆனால் அம்மாவை வாங்க முடியுமா? என்கிறது ஒரு சினிமா பட்ல் வரி.

அதையே புனித ஆகுஸ்தினார் ஒரு மனிதனின் உடலில் உள்ள உறுப்புகள் எல்லாம் நாக்குகளாக மாறினும் மரியன்னையை, அவருடைய தாய்மைக்கு ஏற்றவாறு புகழ முடியாது என்கின்றார்.

இறைவனின் தாய் மரியா என்னும் கோட்பாட்டிற்கு நிறைய பைபிள் ஆதாரங்கள் உள்ளன. பைபிளில் நற்செய்தி நூல்களை எழுதிய நான்கு நற்செய்தியாளர்களும் மரியா இறைவனின் அன்னை என ஏற்றுக் கொள்கின்றனர். அந்த அனைத்து நற்செய்தியாளர்களும் அவர்களின் நோக்கம் இயேசுவை இறைவனாகக் காட்டுவதாகும். அத்துடன் அன்னை மரியாவை இறைவனின் அன்னை என்றும் காட்டுவது மாகும்.

அன்னை மரியாள் இறைவனுடைய மிகப்பெரிய கொடை. அவளது அன்பும், பண்பும், பரிவும் நமக்கு எந்நாளும் சிறந்த பலமாக இருக்கிறது. அந்த அன்னைக்கு எதிராக இன்றைக்கும் பல தவறான போதனைகள் பரப்பப்படுகிறது. அந்த போதனைகள் போலிகளால் போதிக்கப்படுபவை. அவற்றை அடையாளம் கண்டு கொள்வோம்: மரியா விடியலின் பொழுது சத்தியத்தின் சாகாவரம் பெற்றவள். மரியா தரணிக்கு வந்த பொழுது தான் பூமி தன்னை புதுப்பித்துக் கொண்டது. மரியா எங்கள் பாவ இருட்டின் வெளிச்ச நிலா. ஆண்டவரின் தூதில் ஆனந்தம் கண்டவள். ஆண்டவனை தனக்குள்ளே கொண்டவள்.

ஆகட்டும் என்றதனால் ஆண்டவனின் தாயானவள். இதனால் சுதன் சுடச்சுட சூரிய விளக்காக வந்ததினால் ஏரோது அவரை கொல்ல துடித்ததும் மௌனமாய் அழுதவள். மழலையே உறங்க



வைக்கும் தாலாட்டு அல்ல. பூமியே விழிப்பதற்கான பூபாளம் பாடியவள். ஆண்டவனை அழிக்க அரசன் ஏரோது துரத்தி வருகிறான் என்று கேள்விப்பட்டதும் துள்ளி எழுந்து கையில் ஒளியை ஏந்தி இருட்டைத் துரத்தியவள்.

பாதுகை இல்லாத பாதங்களோடு நடந்தவள். அன்றே தொடங்கியது அன்னை மரியா அவளின் மீட்பின் புனிதப் பய ணம். வெளிச்சத்தின் விலாசம் எகப்து வந்து நின்றது. ஆகாயத் தை அழிப்பதற்கு தூசிகளை துரத்த முடியுமா? இவ்வாறு செயற்பட்டு தன்னை இறைத்திட்டத்திற்கு முழுமையாக அர்ப்பணித்தாள்.

அந்த முழுமையான, நிறைவான, அர்ப்பண வாழ்வே அவரை உலகிற்கு, இறைவனின் தாய். நம்அனைவரின் தாயாக திருச்சபை நமக்கு பறைச்சாற் றுகின்றது. அன்னை சீடத்துவம் நம் தனிமனித வாழ்வில் இறை மனித உறவிலும் ஒன்றித திருக்க வேண்டிய ஒன்று. அவளது அன்பும், பண்பும், பரிவும் நமக்கு எந்நாளும் சிறந்த பலமாக இருக்கிறது. அன்னை மரியா தெய்வீக அருளில் ஒரு தனிப்பட்ட அழைப்பால் பங்கெடுக்கின்றார். இறைவன் இயேசுவை தனது உதிரத்திலே கொண்டிருந்தாள். அவரையே உலகிற்கு கொடையாக அளித்தாள். அதைப்போல இறைவனை உலக மக்களுக்கெல்லாம் நாம் வழங்க வேண்டும். நம் தாயைப் போல நாமும் அருள் நிறைந்தவர்களாய் அருள் மிக்கவர்களாய வாழ்வோம். அப்பொழுது தான் நாம் கொண்டாடும் அன்னையின் திருவிழா அர்த்தம் நிறைந்ததாக மாறும்.

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

## சம்பந்தரின் வாக்...

கடந்த 2015ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 17ம் திகதி நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்ட தமிழ்த்தேசிய கூட்டமைப்பு (தமிழரசுக்கட்சி) வடக்கு - கிழக்கு இணைந்த சமஷ்டி முறையிலான ஆட்சிமுறை, இலங்கை மீது சர்வதேச விசாரணை, இனப்பிரச்சினைக்கு 2016ஆம் ஆண்டிறுதிக்குள் தீர்வு ஆகிய பிரதான வாக்குறுதிகள் உட்பட பல வாக்குறுதிகளை தேர்தல் பிரசாரத்தின்போது தெரிவித்தது.

நடைபெற்ற தேர்தலில் வடக்கு - கிழக்கில் 14 ஆசனங்களை கைப்பற்றி இரண்டு போனஸ் ஆசனங்கள் உடன் 16 ஆசனங்களுடன் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியாகவும் இடம் பிடித்தது.

**தேர்தல் கால வாக்குறுதி**

வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் இம்முறை நல்லதொரு வெற்றியை ஈட்டித் தருவார்களேயானால் 2016ஆம் ஆண்டு தமிழ் மக்களுக்கான தீர்வை நிச்சயம் பெற்றுத்தருவோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன தமிழரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட கிளைக் காரியாலயத்தில் தேர்தல் பிரசாரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யுத்தம் முடிந்த பின்னர் நடைபெற்ற தேர்தல்களில் கிழக்கு மாகாணசபை தேர்தலும் வட மாகாண சபை தேர்தலும் மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

எமது தேர்தல் விஞ்ஞாபனத்தை இந்த மாதம் இறுதி வாரத்தில் வெளியிடவுள்ளோம்.

அதில் எமது அரசியல் இலக்கு உடனடித் தேவைகள் தமிழ் மக்களின் நிலைப்பாடுகள் அபிலாஷைகள் தொடர்பில் தெளிவாக கூறுவோம்.

எங்களைப் பொறுத்தவரை நாம ஒரு திறமையான வெற்றியைப் பெற வேண்டும். எமது இலக்கு 20 ஆசனங்களாகும்.

கொழும்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடாமைக்கு என்ன காரணம்? எங்கள் கவனம் முழுவதும் வடகிழக்கை நோக்கியதாகும்.

வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் பூரண இறைமை பெற்று போதிய சுயாட்சி அதிகாரத்தை பெற்று தாமே தம்மை ஆளும் அதிகாரத்தை உண்டாக்கும் வகையில் இந்த தேர்தலைப் பயன்படுத்த வேண்டும். வடக்கு கிழக்குக்கு வெளியே நாம் அதிக மக்களைக் கொண்டவர்களாக காட்டினால் வடகிழக்கில் நாம் எடுக்க வேண்டிய உறுதியான நிலை பலவீனம் அடைந்து விடும்.

வடக்குக்கும் கிழக்குக்கும் திருகோணமலை ஒரு பாலமாக அமைய வேண்டும். வடக்கில் எதுவித பாதிப்பும் ஏற்பட முடியாது. இது தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசமாகும். அதுபோன்றதே மட்டக்களப்பு மாவட்டம். மட்டக்களப்பில் 75 வீதமான மக்கள் தமிழ் மக்கள் என்பதை யாமறிவோம். இந்த இரண்டு தமிழ்ப்பிரதேசத்துக்கு இடையில் பாலமாக அமைவது திருகோணமலை. இப் பாலம் பலமாக இருக்க வேண்டும். இது பலமாக அமைய தெற்கும் வடகும் உதவியாக இருக்க வேண்டும். இப்பாலத்தை பலமாக வைத்திருபபதில் தமிழ் மக்களுடைய பங்களிப்பு அதிகமாகும்.

திருகோணமலை மக்கள் 80 வதம் வாக்களிப்பார்களாக இருந்தால் நாம் இரண்டு ஆசனங்களை இம் மாவட்டத்தில் பெறமுடியும். தமிழ் மக்களே இதில் ஆர்வம் கொண்டவர்களாக இருக்க வேண்டும். திருகோணமலையில் பல தமிழ்க் கட்சிகள் போட்டியிடுகின்றன. ஈ.பி.டி.பி கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தமிழ்க் காங்கிரஸ் என்பவற்றைக் குறிப்பிடலாம். அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் கொள்கையும் அவர்களின் செயற்பாடுகளும் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதாகும்.

அதில் அமைச்சர் பதவி ஏற்பது ஒற்றையாட்சி முறையொன்றை ஏற்றுக் கொள்வது என்பன உள்ளன.

இதுதான் அவர்களின் கொள்கை செயற்பாடு. அந்த அடிப்படையில் தான் ஜீ.ஜீ.பொன்னம்பலம் செயற்பட்டார் என சம்பந்தன் குறிப்பிட்டார்

**2016 ஆம் ஆண்டுடன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அரசியல் பயணம் முடிகின்றது!**

சம்பந்தன் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தனது அரசியல் பயணத்தை முடிக்க விரும்புகிறது. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போன்றவர்கள் தமது அரசியல் பயணத்தை இப்பொழுது தான் ஆரம்பித்துள்ளோமென்று கூறுகிறார்கள், எம்மைப் பொறுத்தவரை எமது அரசியல் பயணத்தை தொடர்ந்தும் நீடிக்க முடியாது. எமது அரசியல் பயணத்தை முடிக்க விரும்புகிறோம். தொடர்ந்தம் நீட்டிக் கொண்டுபோக நாம் விரும்பவில்லை.

வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் நடைபெறவுள்ள தேர்தலில் உயர்ந்த வெற்றியொன்றை கூட்டமைப்புக்கு பெற்றுக்கொடுக்க வேண்டும். அவ்வாறு தருவார்களானால் 2016ஆம் ஆண்டுக்குள் எமது மக்களின் பிரச்சினைக்கான அரசியல் தீர்வொன்றை கண்டே தீருவோம். அதற்கு மக்கள் ஆதரவு எமக்கு வேண்டும். நடைபெறவுள்ள தேர்தல் மிக முக்கியமானதாகும். இந்த தேர்தல் மூலம் ஏற்படும் விளைவுகள் எதிர்காலத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும்.

இதனை எமது அரசியல் பயணத்தில்முக்கியமான மைல்கல்லாக கருத வேண்டும்.

எனது கணிப்பின்படி 2016ஆம் ஆண்டு முடியும் முன் தமிழ் மக்கள ஏற்றுக் கொள்ளக்கூடிய நியாயமான அரசியல் தீர்வை ஏற்படுத்தி எமது மக்கள் போதிய சுயாட்சியைப் பெற்று வடகிழக்கு பிராந்தியத்தில் தங்கள் ஆட்சியை நடத்த கூடிய நிலைமை ஏற்பட வேண்டும் - ஏற்படுத்து வோமெனக் கூறுகின்றோம் என இரா. சம்பந்தன் தனது உரையில் குறிப்பிட்டார்.

**தொடர்ந்தும் பல வாக்குறுதிகள்**

தேர்தலில் வெற்றி பெற்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் நடைபெற்ற மக்கள் சந்திப்புக்களிலும் இந்த வருடம் 2016 ஆம் ஆண்டிற்குள் தமிழ் மக்கள் ஏற்றுக கொள்ள கூடிய தீர்வு ஒன்றை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நிச்சயமாக பெற்று தரும். மக்கள் எந்த விடயத்திலும் குழப்பம் அடைய தேவையில்லை என தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் தொடர்ந்தும் கூறி வந்திருந்தார்.

இந்த காலப்பகுதியில் தமிழ் மக்களுக்கு நடைபெற்றது இனப்படு கொலையே எனும் தீர்மானம் ஒன்றை வடக்கு மாகாண சபை நிறைவேற்றியிருந்தது. இந்த தீர்மானத்தை தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் ஊடக பேச்சாளர் சுமந்திரன் கடுமையாக விமர்சித்திருந்தார். தீர்வு முயற்சிக்கான ஒரு சூழலில் இவ்வாறன ஒரு பிரேரணை தேவையற்றது எனவும் கூறியிருந்தார். இதே காலப்பகுதியில் அரசாங்கத்தின் பொது நிகழ்ச்சிகளில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தொடர்ச்சியாக பங்கேற்று வந்தது.

**எதிர்க்கட்சி தலைவர் பதவி**

தேர்தலின் பின்னர் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு நாடாளுமன்ற எதிர்க்கட்சி தலைவர் பதவி வழங்கப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனுக்கு பாராளுமன்ற குழுக்களின் தலைவர் பதவியும் வழங்கப் பட்டது. ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மாவட்ட அபிவிருத்தி தலைவர் என்ற பதவிகளும் வழங்கப்பட்டன. எனினும் இந்த பதவியை சிலர் ஏற்கவில்லை.

இவ்வாறான ஒரு நிலையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பயணம் அரசாங்கத்துடன் ஒன்றிணைந்தவாறு தொடர்ந்தது. காலம் செல்ல செல்ல கொடுத்த வாக்குறுதிகள், அரசியல் தீர்வு தொடர்பில் படிப்படியாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு முரண்பாடான கருத்துக்களை வெளிப்படுதத் தொடங்கியது. ஒரு சில மக்கள் பிரதிநிதிகள், ஊடகங்கள், வலைத்தளங்கள் என்பன அடிக்கடி எதிர்க்கட்சி தலைவரின் உறுதிமொழியை மக்களுக்கு நினைவு கூறிக்கொண்டே வந்தன. இந்த நினைவு மீட்டல்கள் நேற்றும் நேற்று முன்தினமும் சற்று அதிகமாகவே காணப்பட்டது.

**அரசை காப்பாற்றிய கூட்டமைப்பு!**

இலங்கையில் நடைபெற்ற போர்க் குற்றங்கள், மனித அழிவுகள் தொடர்பில் உலக நாடுகளால் இலங்கை மீது கொண்டுவரப்பட்ட 2015ஆம் ஆண்டு தீர்மானம் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் உதவியுடன் நீர்த்து போக செய்யபட்டது. இலங்கை அரசாங்கத்திற்கு இன்னுமொரு சந்தர்ப்பத்தை வழங்க உலக நாடுகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு தமிழ்த்தேசிய கூட்டமைப்பும் தலையசைத்தது.

சர்வதேச விசாரணை என்ற நிலைப்பாட்டில் இருந்த தமிழ்த்தேசிய கூட்டமைப்பும் உள்ளக விசாரணை என்பதற்கு தலையசைத்தது. இப்போது உள்ளக விசாரணையும் நடைபெறாமல் இலங்கையை பொறுப்புக்கூறலில் இருந்து விடுவிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பற்கு கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளார்.

**மழுப்பிய கூட்டமைப்பு**

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் 2015ஆம் ஆண்டு தேர்தலில் அடுத்த வருடம் தீர்வு என்று உறுதியளித்தது போன்று 2014 இலும் சர்வதேச உதவியுடன் தீர்வை பெற்று தருவோம் என்ற உறுதியையும் வழங்கியிருந்தார். மேலும் அடுத்த வருடம் தான் தீர்வு என்று கூறவில்லை. தீர்வுக்காக அனைவரும் ஒற்றுமையடைய வேண்டும். அடுத்த வருடம் தீர்வை பெறுவதற்கு ஒற்றுமையே அவசியம எனவும் மன்னாரில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கூறினார்.

அதன் பின்னர் நடைபெற்ற அனைத்து நிகழ்வுகளிலும் எதிர்க்கட்சி தலைவர் சம்பந்தன் தமிழ் மக்களுடைய தீர்வு இந்த வருடத்திற்குள் கிடைக்கும் என்ற வாக்குறுதியை வழங்காமல், தீர்வுக்காக அனைவரும் பாடுபட வேண்டும் என்ற தொனியில் பேசி வந்தார். இதே போன்று தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனும் தீர்வை பெற இது நல்ல சந்தர்ப்பம் என்ற கருத் துப்பட ரவிராஜ் நினைவு பேருரை உட்பட பல இடங்களில் பேசிவந்தார்.

**தடம்மாறிய கூட்டமைப்பு!**

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வாக்குறுதி அளித்தது போன்று 2016 ஆம் ஆண்டுக்குள் தீர்வு என்பது பொய்த்து போக ஆரம்பிக்க, அரசு எம்மை ஏமாற்றினால் போராட்டம் வெடிக்கும், சர்வதேசத்தை நாடுவோம் என்றெல்லாம் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பொது செயலாளர் மாவை. சேனாதிராஜாவால் அடிக்கடி ஊடக அறிவிப்புக்கள் கூறப்பட்டது. இவர் இவ்வாறு கூறுவதற்கு காரணம் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தவறுகளை மறக்கடிப்பதற்கே என்ற விமர்சனமும் அந்தந்த வேளைகளில் முன்வைக்கப்பட்டது.

நவம்பர், டிசம்பர் மாதங்களில் 2016 ஆம் ஆண்டுக்குள் தீர்வு என்பதை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு முழுமையாக கைவிட்டு, புதிய அரசியலமைப்பு மூலம் தீர்வு என்ற விடயத்தை கையில் எடுத்தது. அதனை வைத்தே தனது முழுநேர அரசியலையும் முன்னெடுக்க ஆரம் பித்துளளது. இதற்காக புதிய அரசியலமைப்பு தொடர்பிலும் மக்களுக்கு வாக்குறுதி அடிப்படையிலான நம்பிக்கை ஊடடல்களை வழமை போன்று செய்து வருகின்றது.

**காற்றில் பறந்த வாக்குறுதி!**


இன்று 2017 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி. தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கூறிய வாக்குறுதி நிறைவேற்றப்படுவதற்கான காலம் முடிவடைந்துவிட்டது. ஆனால் தமிழ் மக்கள் எதிர்பார்த்த தீர்வு கிடைக்க வில்லை. மாறாக 2017 ஆம் ஆண்டிலும் தீர்வுக்கான முயற்சிகள் தொடரும் என்ற சம்பந்தரின் பேச்சே எஞ்சியுள்ளது.

**கொதிப்படையும் மக்கள்**

அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல்போனோரின் பிரசசினைக்கான தீர்வு உள்ளிட்ட பிரச்சினைகளுக்கும் தீர்வைப் பெற்றுத் தருவதாக உறுதியளித்திருந்த த.தே.கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன், அந்த விடயங்களிலும் உறுதியான முடிவை, பொறுப்புக் கூறலை இதுவரை வெளிப்படுத்த வில்லை எனவும் பாதிக்கப்பட்டவர்களின் உறவுகளால் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்தக் குற்றச்சாட்டுக்களின் கொதிப்பாகவே நேற்று முன்தினம் வவுனியாவில் இடம்பெற்ற காணாமல்போனோர் தொடர்பில் பொறுப்புக் கூறலை வலியுறுத்திய போராட்டத்தின் போது இரா.சம்பந்தரின் உருவப் படம் தயிட்டு எரிக்கப்பட்டுள்ளதுடன் அவருக்கு எதிராக பலத்த கோசங்கள் எழுப்பப்பட்டிருந் தமை யையும் குறிப்பிடமுடியும். (செ-4)

## "மகிழ்ச்சி மலரட்டும்"
### - ஜெகன் வாழ்த்து



மலருகின்ற புத்தாண்டில் மக்கள வாழ்வு மலர்ச்சியுற வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட நிர்வாகச் செயலாளருமான கா.வேலும்மயிலும் குகேந்திரன் (வி.கே.ஜெகன்) புது வருடவாழ்த்துக்களை தெரிவித்துள ளார்.

சாந்தி சமாதானம் நிறைந்த இந்த புத்தாண்டு எல்லா மத மக்கள் வாழ்விலும் மாற்றத்தையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தும் ஆண்டாக விளங்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன் எனவும் அவர் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (செ)

# நல்லாட்சி அரசை 2020 வரை
## கவிழ்க்கவோ, அசைக்கவோ முடியாது
## அமைச்சர் அமரவீர அதீத நம்பிக்கை

(கொழும்பு)

2017 இல் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு மகிந்த ராஜபக்ஷ பகல் கனவு காண்கிறார் என்றும் ஆனால் 2020 வரை மைத்திரி-ரணில் கூட்டு அரசாங்கத்தை எவராலும் கவிழ்க் கவோ, அசைக்கவோ முடியாது என்றும் அமைச்சரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளருமான மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். தற்போது பனிமூட்டமான காலநிலை என்பதனால் 2017 இல் அரசாங்கத்தைக் கவிழ்ப்பது குறித்து சிலர் கனவு கண்டு கொண்டிருக்கின்றனர். இன்னும் சிலர் எதிர்வு கூறிக் கொண்டி ருக்கிறார்கள் என வும் அவர் விமர்சித்துள்ளார்.

அடுத்த ஆணடில் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு கனவு கண்டு கொண்டிருப்பவர்களுக்கும் எதிர்வு கூறுபவர்களுக்கும் ஒரு விடயத்தை கூறவிரும்புகின்றேன்.

காணும் கனவு ஒருபோதும் நனவாகப் போவதில்லை. இந்த அரசாங்கத்தை 2020ஆம் ஆண்டு வரை எவராலும் கவிழ்க்கவோ, அசைக்கவோ முடியாது.

இந்த அரசை மாற்ற வேண்டுமானால் அதற்குரிய முழு அதிகாரமும் ஜனாதிபதியிடமே உள்ளது.

எனினும் இன்னும் நான்கரை ஆண்டுகளுக்கு அவரால் கூட நாடாளுமன்றத்தை கலைக்க முடியாது.

நாடாளுமன்றத்திலுள்ள பெரும்பான்மையினர் வாக்களித்து நிறைவேற்றப்பட்ட திருத்தங்களின்படி, இந்த அரசாங்கம் 2020 ஆம் ஆண்டு வரையும் பயணிக்கும்.

எனவே அரசாங்கத்தைக் கவிழ்பதாக கனவு காண்பவர்களின் கனவு வெறும் பகல் கனவாகவே இருக்கும்.

கனவு காண்பதற்கு சிலருக்கு உரிமையிருக்கின்றது என்றாலும் அந்தக் கனவை நனவாக்குவது எளிதான் காரியமல்ல.

மைத்திரிபால சிறிசேனவின் அரசை வீழ்த்துவதற்கு அல்லது கவிழ்ப்பதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என்றும் அமைச்சர் மகிந்த அமரவீர கொழும்பு ஆங்கில ஊடகமொன்றுக்கு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-3)

## "மாவா" பொதியுடன் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம் )

கஞ்சா கலந்த மாவாவுடன் மேலும் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம் மணியந்தோட்டம் பகுதியை சேர்ந்த 20 வயது இளைஞனே கைது செய்யப்பட்டவராவார். இவரிடம் இருந்து நுகர்விற்காக வைத்திருந்த 25 கிராம் கஞ்சா கலந்த மாவா கைப்பற்றப் பட்டுள்ளது. பொலிஸாரின் வழமையான ரோந்து நட்வடிக்கையின் போது மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞனை சோதனையிட்ட போதே குறித்த மாவா பொதி கைப்பற்றப்பட்டது. குறித்த நபரிடம் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டுள்ளதுடன் சந்தேக நபரை இன்று பதில் நீதவான் வாசஸ் தலத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் யாழ் பொலிஸார் தெரிவித்தனர். கடந்த இரண்டு நாட்களில் மூவர் யாழ நகரப்பகுதியில் கஞ்சா கலந்த மாவா வுடன் கைது செய்யப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ -11)

## கேரள கஞ்சா...

பருத்தித்துறையிலிருந்து கஞ்சா கடத்தப்படுவதாக காங்கேசன்துறை பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் மாசிங்கவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையில் நேற்று மாலை வல்லை வெளிப்பகுதியில் பொலிஸாரின் விசேட அணி ஒன்று கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தபோது சந்தேகத்துக்கிடமான முறையில் நின்றிருந்த இருவரை நெருங்கியபோது ஒருவர் தப்பியோடியுள்ள நிலையில் அகப்பட்ட ஒருவரிடமிருந்து 1.470 கிலோக்கிராம் கஞ்சாவையும் விசேட பொலிஸார் கைப்பற்றினர்.

கைப்பற்றப்பட்ட கஞ்சாவும் சந்தேகநபரும் பருத்தித்துறை பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக காங்கேசன்துறை பிராந்திய பொலிஸார் தெரிவித்தனர். (செ-60)

## சர்வதேச பங்களி...

கூடலில் கலந்துகொண்டு உரையாற்றும்போது நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களுக்கு நிரந்தர தீர்வு ஒன்றை பெறும் பொருட்டான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவை எவ்வளவு தூரம் முன்னேற்றம் அடைந்திருக்கின்றது என்பது குறித்து ஆதங்கங்களும் கவலைகளும் உண்டு.

தமிழ் மக்களை சம தரப்பாக ஏற்று பிரச்சினைக்கு தீர்வுகாண முயலவேண்டும்.

இதனையே சர்வதேசமும் இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளது.

மனித உரிமை ஆணைக்குழுவில் ஏற்றுக்கொண்ட தீர்மானத்துக்கு எதிராக அரசாங்கம் செயற்பட முடியாது,

விடுதலைப் புலிகளோடு இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளில் இராஜதந்திர அணுகுமுறை காணபடவில்லை என்று குற்றம் சாட்டுகின்ற தரப்புக்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பின் முயற்சிகளுக்கும் அத்தகைய குற்றச்சாட்டை சுமத்த இடமளிக்க முடியாது.

தமிழ் மக்கள் பிரச்சினைக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு நிதானமாக சர்வதேச சமூகத்தோடு இணைந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்த முயற்சி நீதியை நிலைநாட்டாத பட்சத்தில் இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களை ஏமாற்றியது என்ற செய்தியினை சர்வதேச சமூகத்துக்கு அறிவிக்கப்படும்.

அதுவரை வடக்கு கிழக்கு இணைந்த வகையில் பல்லின சமூகங்களை அங்கீகரிக்கின்ற அரசியல் அமைப்பின் ஊடாக தீர்வு பெறும் மக்களின் ஆணையை மதித்து நடபதாக மாவை சேனாதிராஜா தனதுரையில் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## அரசியலமைப்பு ...

சமாஜக் கட்சியின் 39ஆவது நிறைவாண்டு நிகழ்வு நேற்று முன்தினம் கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெற்றது.

கட்சித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கட்சி உறுப்பினர்களான அருட்தந்தை சத்திவேல், திருநாவுக்கரசு, சுந்தரம் மகேந்திரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

அங்கு உரையாற்றிய விக்கிரமபாகு கருணாரத்ன "ஜனநாயகவாத அரசியலமைப்பை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள நிலையில் அதனை தடுப்பதற்கான முயற்சியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அரசாங்கத்திற்குள் இருக்கின்ற பிரிவினரும் இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். சிலர் கொண்டு வருகின்ற யோசனைகளும் பிழையானதாகவே உள்ளன. அதனை தடுப்பதற்கு இதர தரப்பினரின் உதவிகளும் பெறப்பட்டு அதற்கெதிராக போராடவேண்டும்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கி நீதித் துறையை வலுப்படுத்த வேண்டும். அபிவிருத்தி தொடர்பில் அதிகாரமுடைய குழு அல்லது நபரை நியமிக்கும் யோசனை ஒன்றை ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் முன்வைக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பு ஒன்றை உருவாக்காமல் அபிவிருத்தியை வலுப்பெறச் செய்யும் யோசனை கொண்டு வருவது எதற்காக என்ற கேள்வி சமூகத்தில் எழுந்துள்ளது. இதற்கான காரணமும் விளங்கவில்லை. ஜனநாயக ரீதியில் அரசியலமைப்பை வலுப்பெறச் செய்யாமல் அபிவிருத்திப் பயணத் தீர்மானங்களை மேற்கொள்வது முட்டாள்தனமானது.

2017ஆம் ஆண்டில் மீண்டும் ஆட்சிக்கு வருவேன் என மகிந்த ராஜபக்ஷ கூறுகின்றார். அது வெறும் கனவுதான் என நான் கூறுகின்றேன். எனினும் அவர் வெறுமனே அதனை கூறவில்லை. அதிகாரத்தைக் கூறி ஆட்சியைப் பெறவே முயற்சிக்கின்றார் என விக்கிரமபாகு கருணாரத்ன தனதுரையில் குறிப்பிட்டார். (செ-11)

## விடைபெற்றார்...

கட்டேரஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 12ஆம் திகதி பதவியேற்ற இவர், இன்று தொடக்கம் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்கவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## மகிந்தவுக்காக...

ளர்களை அண்மையில் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார். சம்பிக்க ரணவக்கவே பொது பல சேனாவை உருவாக்கினார் என்றும், தன்னிடம் இருந்து அந்நியப்படுத்துவதற்காகவே முஸ்லிம்கள் மீது பொது பல சேனா தாக்குதல் நடத்தியது என்றும் மகிந்த ராஜபக்ஷ இதன்போது குற்றம் சாட்டியிருந்தார்.

இதுகுறித்து பிபிசியின் சிங்கள சேவையான சந்தேசயவுக்கு கருத்து வெளியிட்டுள்ள பொது பல சேனா அமைப்பின் நிறைவேற்று அதிகாரி டிலந்த விதானகே, "மகிந்த ராஜபக்ஷவுடன் தொடர்பு வைத்துள்ள அனைவருக்குமே, எமது அமைப்பு அவருக்கு ஆதரவளித்து வந்தது என்பது நன்றாகத் தெரியும்.

துரதிர்ஷ்டவசமாக இப்போது அவர், தன்னைச் சுற்றியுள்ளவர்களின் ஆலோசனைப்படி வேறு விதமாக பேசுகிறார். மகிந்த ராஜபக்ஷ கூறியது போல, சம்பிக்க ரணவக்கவுடனோ, ராஜித சேனாரத்னவுடனோ பொது பலசேனா தொடர்புகளை வைத்திருக்கவில்லை." என்று விதானகே தெரிவித்துள்ளார். (செ -11)

2016ஆம் ஆண்டில் யாழுக்கு ஒதுக்கப்பட்ட

# ரூ. 5 ஆயிரத்து 300 மில்லியன் நிதிக்குரிய அனைத்து வேலைத்திட்டங்களும் நிறைவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தின்அபிவிருத்திக்கு என கடந்த 2016 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட 5 ஆயிரத்து 300 மில்லியன ரூபாயுக்குரிய அனைத்து வேலைத்திட்டங்களும் முடிவடைந்துள்ளதாக தெரிவித்த யாழ் மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் பிறந்துள்ள புதிய வருடத்தில் வறுமையான மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தக்கூடிய வகையில் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

நேற்றைய தினம் யாழ் மாவட்ட அரச அதிபர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்

யாழ்மாவட்ட அபிவிருத்தி வேலைகளுக்கென கடந்த 2016ஆம் ஆண்டு அமைச்சுக்கள் திணைக்களங்களில் இருந்து ஒதுக்கப்பட்ட 5 ஆயிரத்து 300 மில்லியன் ரூபாயும் செலவு செய்யப்பட்டுள்ளது.

மிக முக்கியமாக மீள்குடியேற்ற அமைச்சில் இருந்து 4 ஆயிரம் மில்லியன் ரூபாயும் விசேட கருதிட்டத்துக்கென வேறு அமைச்சுக்களில் இருந்து ஆயிரத்து 300 மில்லியன் ரூபாயும் ஒதுக்கப்பட்டிருந்தது.

அதில் ஒரு மில்லியன் வீட்டுத் திட்டம், பன்முகப்படுத்தப்பட்ட அளவிலான வேலைத்திட்டம். மீள் குடியேற்ற அமைச்சின் வீட்டுத் திட்டம், விசேட கருத்திட்டங்கள், வீடு திருத்தம், மலசலகூட வசதி, நீர் விநியோகம், கிணறு திருத்தம், படகு கட்டுமானம், இறங்குதுறை கட்டுமானம் போன்ற திட்டங்களுக்கான மேற்குறித்த நிதி ஒதுக்கப்பட்டு வேலைத்திட்டங்கள் அனைத்தும் சிறப்பாக செயற்படுத்தப்பட்டுள்ளன.

இந்த (கடந்த) வருடத்துக்குள் முடிக்கப்படவேண்டிய அனைத்து வேலைகளும் நிறைவடைந்துள்ள நிலையல் தொடர்ச்சியான வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2017ஆம் ஆண்டு புதிய வருடம் சுபீட்சமாக அமைந்து எமது மாவட்டத்தில் உள்ள வறுமையான மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த மேம்படுத்த உதவும் என எதிர்பார்க்கிறோம்.

மிக முக்கியமாக மீள்குடியேற்ற



பகுதிகள் மற்றும் ஏனைய பகுதிகளில் வீட்டுத்திட்டம் தேவையாக உள்ளது. 31 ஆயிரம் பேர் வீடு தேவை என பதிவு செய்துள்ளார்கள். 14 ஆயிரம் பேர் காணி அற்றவர்களாக பதிவு செய்துள்ளார்கள். அந்த வகையில் 2016ஆம் ஆண்டு 8 லட்சம் பெறுமதியான 4 ஆயிரம் வீடுகள் எமது மாவட்டத்துக்கு கிடைந்துள்ளன.

அத்துடன் நீர் விநியோகம், மலசலகூட வசதிகள், தீவுகளுக்கான பாதைகள் மற்றும் பாலம் மீள்குடியேறிய பகுதிகளில் வீதி புனரமைப்பு போன்ற முக்கியமான வேலைத்திட்டம் விரைவில் மேற்கொள்ள வேண்டிய தேவை உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

# அ.தி.மு.க பொதுச் செயலாளராக நேற்றுப் பொறுப்பேற்றார் சசிகலா

மறைந்த தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் தோழியான வி.கே. சசிகலா நேற்று அ.தி.மு.கவின் பொதுச் செயலாளராக பொறுப்பேற்றுக் கொண்டார்.

டிசம்பர் மாதம் ஐந்தாம் திகதி தமிழக முதல்வரும், அ.தி.மு.கவின் பொது செயலாளருமான ஜெயலலிதா மாரடைப்பு காரணமாக காலமானார்.

அதனைத் தொடர்ந்து புதிய தமிழக முதல்வராக ஓ.பன்னீர் செல்வம் பதவியேற்றுக் கொண்டார்.

இந்நிலையில், கடந்த 29ஆம் திகதி நடைபெற்ற அ.தி.மு.கவின் பொதுக்குழு கூட்டத்தில் கட்சியின் பொது செயலாளராக சசிகலா ஒருமனதாக தேர்தெடுக்கப்பட்டார். மேலும், பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி கட்சிக்கு தலைமை ஏற்க வேண்டும் என்று கூறி தமிழக முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் தம்பித்துரை ஆகியோர் அவரை நேரில் சந்தித்து வலியுறுத்தி இருந்தனர்.

இச்சூழலில், பொதுச் செயலாளர் பதவியை ஏற்பதற்காக நேற்றுப் பகல் 12 மணியளவில் போயஸ் கார்டனிலிருந்து அ.தி.மு.க தலைமையகத்துக்கு புறப்பட்டார் சசிகலா.





பின்னர, அங்குள்ள எம்.ஜி.ஆர் சிலைக்கு மாலை அணிவித்து அ.தி.மு.கவின் பொது செயலாளராக பொறுப்பேற்றுக் கொண்டார். (செ-11)

# இலங்கை படைகளிலிருந்து 6 ஆயிரம் பேர் விலகினர்

இலங்கை முப்படைகளில் இருந்து தப்பிச் சென்ற சுமார் 6000 படையினர் பொதுமன்னிப்புக் காலத்தில் சமூகமளித்து, சட்ட பூர்வமாக விலகியுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொஷான் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

தப்பிச்சென்ற படையினர் சரணடைந்து சட்டபூர்வமாக விலகிக் கொள்வதற்கு பாதுகாப்பு அமைச்சு பொது மன்னிப்புக் காலத்தை அறிவித்திருந்தது.

டிசம்பர் முதலாம் திகதி தொடக்கம் ஒரு மாதத்துக்கு இந்த பொது மன்னிப்பு அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்ற 9 அதி காரிகளும் 6502 படையினரும் தமது படைப்பிரிவுகளில் சரணடைந்தனர். இவர்களில் 4 அதிகாரிகளும் 5667 படையினரும்சட்டபூர்வமாக இராணுவத்தில் இருந்து விலகியுள்ளனர்.

கடற்படையைச் சேர்ந்த 2 உயர்நிலை அதிகாரிகள் மற்றும் 614 படையினரும், விமானப்படையைச் சேர்ந்த 20 அதிகாரிகளும் 294 படையினரும்தமது படைப்பிரிவுகளில் சரணடைந்தனர். (இ-3)

# முடிந்தால் அரசை கவிழுங்கள்

## – சஜித் பகிரங்க சவால்

2017ஆம் ஆண்டு அரசாங்கத்தைக் கவிழ்ப்பதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்த கருத்திற்கு, அமைச்சர் சஜித் பிரேமதாச அம்பாந்தோட்டையில் நேற்று பதிலளித்தார்.

அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்ததாவது,

இத்தகைய பொய்யைக் கூறுவதால் என்ன நேரும்? இலங்கைக்கு வருகை தரவுள்ள முதலீட்டாளர்கள் ஏன் அங்கு செல்ல வேண்டும் என எண்ணுவார்கள். ஏனெனில், இலங்கையில் நிலையற்ற தன்மையொன்று உருவாகுகின்றமையால், நாம்ஏன்இலங்கைக்குச்சென்று கோடிக்கணக்கில் முதலீடுகளை செய்து, தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்குள் எழும். இதுவே 2017 ஆம் ஆண்டு அரசாங்கம் மாற்றமடையும்என்றுசர்வதேச ஊடகவியலாளர்களுக்கு கூறிய மைக்கான நோக்கமாகும். இதுவே ரகசியம்.

இது மிக மோச மானதொன்றாகும். தொழிற்சாலைகளை உருவாக்கி பிரேமதாச, மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க குடும்பத்தினருக்கா தொழில்கள் வழங்கப்படும்? முடிந்தால் 2017 ஆம் ஆண்டு அரசாங்கத்தைக் கவிழ்க்குமாறு நான் பகிரங்கமாக சவால் விடுக்கின்றேன் என்றார் சஜித். (செ-11)

**V2 TRAVELS**

குறைந்த விலையில் சர்வதேச விமான பயணச்சீட்டுக்கள்.

- வெளிநாட்டிலிருந்து வருவோருக்கான இலங்கை விசா நீடிப்பு.
- வெளிநாட்டு விசா(UK,கனடா,சுவிஸ்,ஜேர்மனி,பிரான்ஸ்) விண்ணப்ப படிவம்(Online form) நிரப்புதல்.
- இந்தியா, தாய்லாந்து, மலேசியா விசாக்கள்.

தொடர்புகளுக்கு: 0768226236

• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

(C-6930)

**FLC FRENCH LANGUAGE CENTRE**
FOR THE BEST FRENCH FOREVER

பிரெஞ்சு மொழி வகுப்பு

No. 40, பலாலி வீதி, ஆரியகுளம்.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 07.01.17 சனி 10 am.

பிரதான வீதி, நெல்லியடி
TP: 021 3202973
ஆரம்பம்: 09.01.17 திங்கள் 3.30pm.

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1 Classes.

Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre

(C-6921)

"புத்திசாதுரியமான மாணவச் செல்வங்களின் மதிநுட்பமான தெரிவு"

**ஞானோதய அக்கடமி**
(சங்கத்தானை, சாவகச்சேரி)

A/L 2019 A/L DAY CLASS

■கலை ■வர்த்தகம் ■தொழில்நுட்பம்

ஆரம்பம்:-08.01.2017

ஞாயிறு காலை 9.00 மணி அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும்
-நிர்வாகம்

(7314)

OFFSET PRINTING

SUCCESS BY DESIGN

LABLES | LEAFLETS | POSTERS
HANDBILLS | VISITING CARDS | LETTER HEADS
BROCHURES | INVITATION CARDS
CALENDARS | BOXES & PACKAGING | MAGAZINE
1st CLASS DESIGNING & PRINTING



high quality
2 YEARS WARRANTY

DIGITAL PRINTING

FLEX BANNER | STICKER
ONE WAY VISION STICKER
CLEAR STICKER
X STAND WITH BANNER
VEHICLE BRANDING

STICKER CUTTING

4 FEET STICKER CUTTING MACHINE
DESIGN CUTTING
WALL DESIGN CUTTING
SANDBLAST DESIGN CUTTING
LETTER CUTTING
VEHICLE STICKER CUTTING

new



SCREEN PRINTING

BAG | CAP | UMBRELLA
PVC PRODUCTS
CERAMIC PRODUCTS
AND ETC...



FOLLOW ME

- தேர்ச்சி மிக்க வடிவமைப்பு
- உயர்தர பிறிண்டிங் சேவை
- சிறந்த வாடிக்கையாளர் சேவை

ideas PRINTERS

(அ-6933)

936A, K.K.S Road, Jaffna. (near the naachimar kovil) 021 222 7788

**குயின்சி விநியோகஸ்தர்கள்**
**(புத்தகசாலை)**




- மருத்துவ பீட மாணவர்களுக்கான மருத்துவ நூல்கள்
- ஆங்கில அகராதிகள், தேசிய பாடசாலைப் புத்தகங்கள்
- சிறுவர்களுக்கான நகைச்சுவைக் கதைகள்
- மாணவர்களுக்கான அறிவியல் நூல்கள், நீதிநூல்கள்
- மங்கையர்களுக்கான சமையலில் ருசி பார்க்க சமையல் குறிப்புப் புத்தகங்கள், அழகுக்குறிப்புப் புத்தகங்கள் மற்றும் கோலப்புத்தகங்கள்

10% முதல் 50% வரையான விலைக் கழிவு

- சமயத்தினை வளர்க்க ஆன்மீகப் புத்தகங்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான எழுதுகருவி உபகரணங்கள், பயிற்சிப் புத்தகங்கள், க.பொ.த. சாதாரண தர மாணவர்கள், க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான கடந்தகால வினாத்தாள்கள் போன்றவற்றை பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

குயின்சி விநியோகஸ்தர்கள்
271, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
T.P : 021 221 7513 H.P. 077 226 8486

(6952)

**கட்டட வேலைகள் செய்து கொடுக்கப்படும்**



கட்டடங்கள் கட்டுதல், வீடு கட்டுதல், பழைய வீடுகளைத் திருத்துதல், சுற்றுமதில் கட்டுதல், குளியலறை கட்டுதல், மாபிள் பதித்தல், தச்சு வேலைகள் என்பவற்றுடன் Plumbing, Painting, Electrical works அனைத்தும் தரமாகவும் குறைந்த விலையிலும் குறித்த காலத்திலும் செய்து கொடுக்கப்படும்.

AXSHAYA CONSTRUCTION, JAFFNA

தொடர்புகளுக்கு:- 0776679564 (J.K.VASAN) E.mail:-axshaya construction@gmail.com

(C-6793)

**வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தித்திக்கும் இனிய புதுவருட நல்வாழ்த்துக்கள்**

**வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை**

தொடர்புகளுக்கு:
070 330 5500
021 - 221 5656

**AnnA Express Courier Services**
அண்ணா அன் கோ (தனியார்) நிறுவனம்,
976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம்

(அ-6935)

உங்கள் விருப்பத்துக்குரியவர்களின் புகைப்படங்கள் மற்றும் கவிதைகளை நீங்கள் விரும்பியவாறு வடிவமைத்து துரிதமாக பிறிண்ட் செய்து தருகின்றோம்

Mug / Crystal Trophies / Mobile covers / Floor Tiles / Stones / Plates / Flasks / Drink bottle /

**CREATIVE DESK**
146, Parameswara Junction,
Palaly Road, Thirunelvely

Mobile: 077 777 8529
Phone: 021-4545 103
www.fb.com/joygift.lk


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.01.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.


# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 98

2017 Happy New Year

வள்ளுவர் ஆண்டு 2047 | 01.01.2017 | தொலைபேசி : 021 222 3378


உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

## 2016 இல் சம்பந்தர் 2017 இல் மகிந்த



வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறை வணக்கத்துடன் மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூறியதும் அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்ததுடன் அனைவரும் ஒருவருக்கொருவர் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர்.

**வாத்தியார்:** இன்று பிறக்கின்ற 2017 ஆம் ஆண்டில் அனைவருக்கும் சுபீட்சம் கிடைக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். 2016 ஆம் ஆண்டில் இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூறியவர் அல்லோ. 2016 ஆம் ஆண்டும் முடிஞ்சு போயிற்று.

**விதானையார்:** இது தெரிஞ்ச காரியம் தானே! 2016 இல் அரசியல் தீர்வு கிடைக்காது எண்டு எங்கட தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும். சம்பந்தர் ஐயா தான் பாவம் அரசாங்கத்தை நம்பிறார்.

**மூப்பர்:** விதானையார் 2016 இல் அரசியல் தீர்வு நிச்சயம். இதை நம்புங்கள் என்று சம்பந்தர் ஐயா உத்தரவாதம் தந்தவர். அதன் பிறகு எப்படி...

**விதானையார்:** இலங்கை அரசாங்கம் ஒருக்காலும் எங்கட பிரச்சினையைத் தீர்க்காது என்பது சர்வ நிச்சயம். சம்பந்தர் ஐயா பாவம். நல்லாட்சியினர் நமக்குத் தீர்வு தருவினம் எண்டு நம்பிப் போட்டார் போல.

**சாத்திரியார்:** விதானையார் இதென்ன கதை. இலங்கையின் வரலாற்றில இனப் பிரச்சினையைத் தீர்க்க எந்தத் தலைவராவது விரும்பியதான சரித்திரம் இருக்குதோ. இனப்பிரச்சினையைத் தீர்ப்போம் என்று தேர்தலில சொல்லுவினம். ஆட்சிக்கு வந்த பிறகு இனப்பிரச்சினை எதுவும் இலங்கையில இல்லை எண்டு சொல்லுவினம். இந்த வழமைக்கு ஜனாதிபதி மைத்திரியும் விதிவிலக்கல்ல என்பதுதான் உண்மை.

**பண்டிதர்:** 2016 தீபாவளி வாழ்த்தில அடுத்த தீபாவளிக்குள்ள தீர்வு கிடைத்துவிடும் என்று சம்பந்தர் ஐயா சொன்னவர் அல்லோ. அப்ப அடுத்த தீபாவளி எண்டால் இன்று மலர்ந்த 2017 ஆண்டுத் தீபாவளிக்குள்ள தீர்வு என்பது தானே பொருள்.

**கங்காணி:** பண்டிதர் ஐயா சம்பந்தர் அண்ணே சொன்னது அடுத்த தீபாவளி எண்டு. 2017 தீபாவளிக்குள் தீர்வு காணப்படவில்லையெண்டால் அடுத்த தீபாவளி எண்டு சொல்லலா மல்லோ அது தான். அவர் அப்ப டிச் சொல்லி இருக்கிறார்.

**பண்டிதர்:** அட இன்று போய் நாளை வா என்ற மாதிரி...

**மூப்பர்:** சரி 2016 இல் தீர்வு என்று சொன்ன சம்பந்தர் ஐயாவின்ர வாக்குத்தான் பலிக்கவில்லை. 2017 ஆம் ஆண்டில ஆட்சியைக் கவிழ்ப்பன் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சபதம் எடுத்திருக்கிறார் இது எப்படி நடக்குமோ!

**வாத்தியார்:** நல்லாட்சிக்கும் ஆரோக்கியம் போதாமல் உள்ளது. ஜனாதிபதி மைத்திரியைப் பயன்படுத்தி தங்கட ஐக்கிய தேசியக் கட்சியை பிரதமர் ரணில் கட்டியெழுப்புகிறார். இதால ஜனாதிபதி மைத்திரிக்கு திருப்தியில்லை என்று பரவலாகப் பேசப்படுகிறது.

**பண்டிதர்:** தேசிய அரசு அமைக்க வெளிக்கிட்ட பிறகு என்ர கட்சியை வளர்க்கிறது உன்ர கட்சியை வளர்க்கிறது எண்டு நினைத்தால் ஆபத்து தேசிய அரசாங்கத்திற்கு என்பது மறுக்க முடியாத உண்மை.

ஜனாதிபதி மைத்திரி ஒரு நல்ல மனிதர். அவர் நல்லவர் என்பதற்காக அவரைப் பயன்படுத்தி தங்கட கட்சியை வளர்க்க ஐக்கிய தேசியக் கட்சியினர் நினைத்தால் அது மிகப்பெரும் தவறு.

**வாத்தியார்:** அதுதான் சொல்லவாறன் 2017 இல் நல்லாட்சியை கவிழ்ப்பன் என்று மகிந்த ராஜபக்ஷ சொல்றது சிலவேளை சரிப்பட்டு வந்திடும் போலவும் தெரிகிறது.

**சாத்திரியார்:** அப்ப நான் கனடா போக தயாராக வேண்டியது தான்.

(ஆலடியில் சிரிப்பு)

**விதானையார்:** முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின்ர பலத்தை யாரும் குறைத்து மதிப்பிடக்கூடாது. உண்மையில சிங்கள மக்கள் இப்பவும் மகிந்த ராஜபக்ஷவை விரும்புகினம். அவரை மன்னித்து ஏற்றுக் கொள்ளவும் தயாராக இருக்கினம்.

அதேநேரம் நல்லாட்சிக்குள்ளும் மகிந்தவுக்கு ஆதரவான அமைச்சர்கள் இருக்கினம். ஆதலால 2017 இல் ஆட்சி கவிழ்ப்பு என்று மகிந்த ராஜபக்ஷ எடுத்த சபதம் நிறைவேறினாலும் ஐயம் கொள்வதற்கு இடமில்லை.

**பண்டிதர்:** அரசாங்கம் என்றால் மக்கள் நலன் சார்ந்த பணிகளை முன்னெடுக்க வேணும். நல்லாட்சியை பொறுத்த வரை அதன் செயற்பாடுகள் மந்த வேகத்திலதான் நகருது. இப்படி நகரும் போது அதை மக்கள் ஏற்க மாட்டினம். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி தேர்தலில வெற்றி பெறுவதற்கு தமிழ் மக்கள் தான் மூல காரணம். ஆனால் தமிழ் மக்களை மீளக்குடியமர்த்துவதில கூட அவரால் வெற்றி பெற முடியவில்லை.

**கங்காணி:** அது மட்டுமல்ல பண்டிதர் ஐயா, இன்றைக்கு வடக்கு கிழக்கில எத்தனையோ புத்தர் விகாரைகள் கட்டப்பட்டுள்ளன. இவை அனைத்தும் சட்டவிரோதமாக கட்டப்பட்டவை. இவற்றையெல்லாம் தடுத்து நிறுத்தி மதவாத போக்குகளை ஜனாதிபதி மைத்திரி கட்டுப்படுத்தியிருக்க வேணும். இருந்தும் அவர் அதனை செய்யாதது அவருக்கு பின்னடைவுதான்.

**விதானையார்:** சரி பார்ப்பம். 2016 தீர்வு என்று உத்தரவாதம் தந்த சம்பந்தன் ஐயா தோற்றுப்போனால் இப்ப 2017 இல் ஆட்சிக் கவிழ்ப்பு என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறுகிறார். அது நடக்கல்ல. இது நடக்குதோ என்று பார்ப்பம். இப்படி விதானையார் சொல்ல அந்நேரம் பார்த்து ஆலடி பிள்ளையார் கோயில் மணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்கு சென்றனர்.

ஆதித்தன்

# நீதித்துறையின் நம்பகத்தன்மைக்கு சவாலாகிய சிங்கள ஜூரிகள் சபை

பாதுகாப்புப் படையினர் பிரதிவாதிகளாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்களாகவும் காணப்படும் அரசியல் சார்ந்த வழக்குகளில் ஜூரி சபையின் விசாரணை பொருத்தமற்றது என அரசியல் ஆய்வாளர்கள் கருத்துரைத்துள்ளனர்.

'பாதுகாப்புப் படையினர் பிரதிவாதிகளாகவும் சிறுபான்மைத் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டவர்களாகவும் உள்ள வழக்குகளை விசாரணை செய்யும் ஜூரிகள், குற்றம்சாட்டப்பட்டவர்களை விடுவிக்கப்படுவது தவறானது.

ஆகவே இவ்வாறான வழக்குகளில் நீதிபதி தீர்ப்பை வழங்கும் உச்ச நீதிமன்ற விசாரணைக்குச் செல்வதே சிறந்தது என்றும் கருத்துரைத்துள்ளனர்.

ஜூரி சபையால் தீர்ப்பு வழங்கப்படும் போது அதற்கான காரணங்களை வெளியிட வேண்டிய தேவையிருக்காது. ஆனால் உச்ச நீதிமன்ற நீதிபதி தீர்ப்பை வழங்கும் போது அதற்கான காரணங்களைக் குறிப்பிட வேண்டும். இதில் மூன்று நீதிபதிகள் அங்கம் வகிப்பார்கள்.

'சாதாரண சட்டத்தின் கீழ் விசாரணைகள் மேற்கொள்ளப்படும் போது, குற்றம் சாட்டப்பட்டவர்கள் சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் அல்லது ஆங்கல மொழியில் பேசும் ஜூரியை அமர்த்துவதற்கான ஏற்பாடு காணப்படுகிறது.

இது குறிப்பாக சமூகவியல் குற்றங்கள் அல்லது அரசியல் ரீதியான வழக்குகளுக்கும் தீர்ப்புக்களைப் பெறப் பயன்படுத்த முடியும் என்றும் அரசியல் ஆய்வாளர்கள் கருத்துரைத்துள்ளனர்.

திருகோணமலை- குமாரபுரத்திலுள்ள கிளிவெட்டி எனும் குக்கிராமத்தைச் சேர்ந்த 26 அப்பாவிப் பொது மக்கள் 11 பெப்ரவரி, 1996இல் ஆறு இராணுவ அதிகாரிகளால் படுகொலை செய்யப்பட்டனர்.

இப்படுகொலையானது குமாரபுரம் படுகொலை என அழைக்கப்படுகிறது. இப்படுகொலையில் ஆறு பெண்கள் மற்றும் 13 சிறுவர்கள் உட்பட 26பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

இப்படுகொலை தொடர்பான ஆரம்பகட்ட விசாரணைகள் மூதூரில் இடம்பெற்றன. இப்படுகொலையை நேரில் கண்டவர்கள் இப்படுகொலையை மேற்கொண்ட இராணுவத்தினரை அடையாளங் காண்பித்தனர்.



இந்த இராணுவத்தினர் திருகோணமலை - தெகிவத்தை இராணுவ முகாமிலேயே பணியாற்றியிருந்தனர்.

போர்ச்சூழல் காரணமாக இந்த வழக்கானது சிங்களப் பிரதேசத்திலுள்ள அநுராதபுரம் உயர்நீதிமன்றுக்கு மாற்றப்பட்டது. இங்கு 20 ஆண்டுகளின் பின்னரே வழக்கு ஆரம்பமானது.

குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் 101 வெவ்வேறு குற்றங்களுக்காக சட்டமா அதிபரினால் குற்றம் சாட்டப்பட்டனர். ஆனால் ஜூலை 2016 இல், ஆறு சிங்களப் பிரதிநிதிகளைக் கொண்ட ஜூரி சபையால் இவர்கள் குற்றமற்றவர்கள் என அறிவிக்கப்பட்டனர். அநுராதபுர உயர் நீதிமன்ற நீதிபதி மஞ்சுளா திலகரட்ண இந்த ஆறு இராணுவ வீரர்களுக்கும் எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களிலிருந்து இவர்களை விடுவித்தார்.

இவ்வாறான வழக்குகளில குற்றவாளிகள் எவ்வித தண்டனைகளும் வழங்கப்படாது விடுவிக்கப்படுவதானது நீதி கிடைக்க வேண்டும் எனப் போராடும் தமிழ் மக்கள் மத்தியில் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

'குமாரபுரம் படுகொலையில் பாதிக்கப்பட்ட மக்கள் குற்றவாளிகளை அடையாளங்காட்டிய போதிலும் அநுராதபுரம் உயர் நீதிமன்ற நீதிபதியால் இவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

ஆகவே உள்ளக நீதிப் பொறிமுறை மூலம் தமிழர்களுக்கு நீதி கிடைக்கும் என எதிர்பார்க்க முடியாது என்பதையே இவ்வாறான சம்பவங்கள் தெளிவாகச் சுட்டிநிற்கின்றன. அத்துடன் போர்க் குற்றங்களுக்கு அனைத்துலக விசாரணை ஒன்று தேவை என்பதையும் இது வலியுறுத்தியுள்ளது' என சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

இப்படுகொலையில் பாதிக்கப்பட்டு தற்போது உயிருடன் வாழ்வோரும் இப்படுகொலையில் கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தினரும் தமக்கு நீதி கிடைக்க வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுத்ததுடன் இந்த வழக்கானது உச்ச நீதிமன்றில் மீளவும் தொடரப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

இதனைத் தொடர்ந்து அரசால் இந்த வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட போதிலும் தற்போதும் இது தீர்வு காணப்படாது நிலுவையில் உள்ளது.

நீதியான தீர்வு எட்டப்படுவதை வலியுறுத்த வேண்டிய இலங்கையின் நீதி முறைமையில் பல்வேறு கட்டமைப்பு சார் பிரச்சினைகள் நிலவுவதாக ரவிராஜ் கொலை வழக்கில் பாதிக்கப்பட்ட தரப்பு சார்பாகத் தோன்றிய சட்டத்தரணியான நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்தார்.

இவ்வாறான கொலை வழக்கில் சம்பந்தப்படும் இளநிலை இராணுவ வீரர்கள் மீது எந்தவொரு நடவடிக்கை எடுக்காத அதேவேளையில் இவர்களுக்கு கட்டளை வழங்கும் பொறுப்பிலிருந்தவர்கள் யார் என அடையாளங் காணப்படாமை நீதிமுறைமைக்குள் காணப்படும் சிக்கல்களுள் ஒன்றாகும்.

இவ்வாறான கொலை வழக்குகளில் துப்பாக்கிகளைப் பயன்படுத்தி கொலையை மேற்கொண்டவர்கள் யாருடைய கட்டளையின் கீழ் அல்லது கண்காணிப்பின் கீழ் இவற்றை மேற்கொண்டனர் எனபதை அறிய வேண்டியது மிகவும் முக்கியமானதாகும் என ரவிராஜ் கொலை வழக்கில் வழக்குத் தாக்கல் செய்த ரவிராஜ் குடும்பத்தினர் சார்பாக வாதாடிய சுமந்திரன் தெரிவித்தார்.

கட்டளை வழங்குவோர் தனக்குக் கீழுள்ள ஒருவர் தவறு செய்யும் போது அதனைத் தடுக்காது அல்லது தண்டிக்காது விட்டால், அந்தச் செயலுக்கு கட்டளை வழங்குபவரே பொறுப்பாளி ஆவார். ஆனால் இலங்கையில இவ்வாறான குற்றங்கள் இடம்பெறும் போது அதற்குக் கட்டளை வழங்கியவர்கள் அடையாளம் காணப்படுவதோ, தண்டிக்கப்படுவதோ இல்லை என சுமந்திரன் தெரிவித்தார்.

ரவிராஜ் படுகொலை வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டவர்கள் நீதிமன்றால் விடுவிக்கப்பட்டமை தொடர்பாக மார்ச் 2017 இல் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கையில் அநீதி இழைக்கப்படுவதாக நோக்கப்படுமா என சுமந்திரனிடம் வினவியபோது, போர்க்குற்றங்கள் தொடர்பாக அனைத்துலக நீதிப் பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்கின்ற தமிழ் மக்களின் கோரிக்கையை இது மேலும் பலப்படுத்தும் என சுமந்திரன் தெரிவித்தார்.

இந்த வழக்குத் தொடர்பில் சட்டமா அதிபர் அதிபர் திணைக்களம் நடந்து கொண்ட முறையானது ஏமாற் றத்தை அளிப்பதாகவும் இலங்கையில் இடம்பெறும் விசாரணைகளில் நீதியைப் பெற்றுக் கொள்வதில் பிரச்சினைகள் உள்ளன என்பது ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள கூட்டத் தொடரில் முன்னுரிமைப்படுத்தப்படும் என தேசிய மொழிகள் மற்றும் கலந்துரையாடல் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

வழிமூலம் - New Indian Express
மொழியாக்கம் - நித்தியபாரதி




# மாற்றத்தால் ஏற்றம் பெறலாம்

ஒரு நாள் முல்லா தெருவழியாக நடந்து போய்க் கொண்டிருந்தார்.

ஒரு குடிசை வாசலை அவர் கடந்து சென்ற சமயம் குடிசைக்குள் ஏதோ சத்தம் கேட்கவே உள்ளே சென்றார்.

அந்தக் குடிசையில் ஒரு ஏழை விதவைப் பெண் வசித்து வந்தாள். துணிகளை தைத்துக் கொடுத்து அவள் கஷ்ட ஜீவனம் நடத்திக் கொண்டிருந்தாள். அவளுக்கு பத்து வயதில் ஒரு மகன் இருந்தான்.

அந்தக் குடும்பத்தைப் பற்றி முல்லாவுக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் மீது அவருக்கு அனுதாபமும் உண்டு.

வீட்டுக்குள் தாயும் மகனும் எதோ சச்சரவில் ஈடுபட்டிருந்தனர்.

"இங்கே என்ன நடக்கிறது?" என்று முல்லா வினவினார்.

"முல்லா அவர்களே இவனைப் பாருங்கள் ஒழுங்காக பாடசாலைக்கு போகமாட்டேன் என்று அடம்பிடிக்கிறான், அறிவுரை கூறிப் பார்த்தேன். அடித்து மிரட்டிப் பார்த்தேன். ஒன்றுக்கும் மசியமாட்டேன் என்கிறான்" என்றாள் தாய் வேதனையோடு.

"குழந்தாய் நீ பாடசாலைக்குப் போக வேண்டியது அவசியமில்லையா? அது உன் எதிர்காலத்துக்கு நல்லதில்லையா?" என்று முல்லா சிறுவனுக்கு புத்திமதி கூறினார். பையன் கேட்பதாக இல்லை.

"நான் பாடசாலைக்கு போகப்போவதே இல்லை" என்று அடம்பிடித்தான்.

முல்லா சுற்றும் முற்றும் பார்த்தார். தைப்பதற்காக அந்தப் பையனின் தாய் வைத்திருந்த விலை உயர்ந்த துணி ஒன்று அவர் கண்களில் பட்டது.

அதை எடுத்து முல்லா துண்டு துண்டாகக் கிழித்துப் போட்டு விட்டார். அதைக்கண்டு தாயும் மகனும் அதிர்ச்சியும் திகைப்பும் அடைந்தனர்.

"அம்மா முல்லா விலை உயர்ந்த துணியைக் கிழித்துப் பாழாக்கி விட்டாரே?" என்று திகைப்போடு கேட்டான் பையன்.

"பாடசாலைக்கு போகமாட்டேன் என்று உன் எதிர்கால வாழ்க்கையையே பாழாக்கிக்கொள்கிறாயே அதைவிட இந்த விலை உயர்ந்த துணி பாழானது பெரிய விடயமா" என்றார் முல்லா.

இந்தச் சொற்கள் அவன் மனத்தில் பெரிய மாறுதலை உண்டாக்கிற்று. உடனே புத்தகங்களை எடுத்துக் கொண்டு பாடசாலைக்குப் புறப்பாட்டான்.

அவன் சென்றபிறகு முல்லா தாம் கிழித்த துணியின் மதிப்புக் கேற்ற விலையைக் கொடுத்து விட்டுப் புறப்பட்டார்.

**ஒருமுறை அறிவாளியுடன் பேசுவது ஒரு மாதம் நூல்களைப் படிப்பதை விட அதிக நன்மை தரும்.**

**குட்டீசுக்கு**
**வலம்புரியின்**
**புத்தாண்டு வாழ்த்துக்கள்**
**Happy New year - 2017**

# 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**அப்பாவே**
**எங்கள் அற்புதமான வாழ்வின்**
**அத்திவாரம் நீங்கள் –அன்று**
**உங்கள் விரல் பிடித்து**
**நடை பயின்றோம் – இன்று**
**உயர்கின்ற பொழுதில்**
**நீங்கள் இல்லையே அப்பா!**
**தில்லைக் கூத்தன் உங்களை**
**அதிகம் நேசித்தானோ?**
**விரைந்து உங்களை அவனிடம்**
**அழைத்துக் கொண்டானோ?**
**எங்கள் வாழ்வின் உயர்வெல்லாம்**
**உங்கள் ஆசிகளுடன் தான் அப்பா.**

**10**
**01**
**1966**



**01**
**01**
**2008**

# திரு.தியாகராசா மகேஸ்வரன்

**(முன்னாள் இந்து கலாசார அமைச்சரும் யாழ்.,கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும்)**

பவதாரணி (மகள்),
பிரணவன் (மகன்),
பவித்திரா(மகள்),
276, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-2221877

தகவல்: திருமதி விஜயகலா மகேஸ்வரன்,
இல.32, 36 ஆவது ஒழுங்கை, கொழும்பு-06.
தொலைபேசி: 2360679





# வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்) 021 567 1532



## உலகின் முதல் சினிமாப் படம் எது?

## புலிகளை அழித்தவர்களால் ஏன் வாள்வெட்டுக்களை அழிக்க...

## தமிழ் மக்களுக்கு தீர்வு கிடைக்குமா?

**மதீசன் — நல்லூர்**

**தமிழ் மக்களுக்கு தீர்வு கிடைக்குமா?**

அரசர்கள் மட்டும் செல்லும் வீதியில் மனுநீதிச் சோழனின் மகன் தேரில் செல்கிறான். மாட்டுக் கன்றொன்று திடீரென அவன் தேர் சில்லுக்குள் சிக்குண்டு இறந்து போகிறது.

தாய்ப்பசு மனுநீதி சோழன் அரண்மனை மணியை அடித்து நீதி கேட்கிறது. தாய்ப்பசு பட்ட துன்பத்தை நான் அனுபவிக்க அதே தேர்ச் சில்லில் தன் மகனை நெரித்து தீர்ப்பு வழங்குகிறான் மனு நீதிச் சோழன்.

இப்படி தன் மகனானாலும் குற்றம் செய்தால் தண்டனை வழங்கும் பரம்பரை தமிழ்ப் பரம்பரை. என்ன செய்ய இன்று அடிமைப்பட்டு நீதிக்காக ஏங்கி நீதி மறுக்கப்பட்டு ஏங்கி ஏங்கி ஏமாற்றங்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது.

இப்படி இதை எழுதும் போது ஒரு பாடல் ஒலித்தது "அங்கே சிரிப்பவர்கள் சிரிக்கட்டும் அது ஆணவச் சிரிப்பு..."

**தாருணி — கட்டுவன்**

**நாளைக்கு உலகம் அழியுமென்றால் நீங்கள் எதை நினைத்து கவலைப்படுவீர்கள்?**

2017 இல் தமிழர் பிரச்சினைக்கும் தீர்வென்றார்கள். அந்தத் தீர்வு வட்டமாக இருக்குமா சதுரமாக இருக்குமா இல்லை முக்கோணமாக இருக்குமா எனத் தெரியாமல் செத்துப் போகப் போகிறேனே என்பதை விட வேறு எந்தக் கவலையும் இருக்காது.

**துவா — நல்லூர்**

**உலகின் முதல் சினிமாப் படம் எது?**

த ஸ்ரோரி ஒஃவ் த கெலிகாங் (The Story of the KellyGang) என்னும் திரைப்படம். இத் திரைப்படம் 1906ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் வெளியானது. இலக்கியங்களை, கலைவடிவங்களை திரைப்படமாக்கி வெளியான முதல் திரைப்படம் லெமிசெர பிள்சு எனும் பிரான்சு மொழி திரைப்படமாகும். இத் திரைப்படம் 1909 ஆம் ஆண்டு வெளியானது. மேலே உங்களுக்காக உலகின் முதலாவது திரைப்படத்தின் ஒரு காட்சி.

**சபி — கோண்டாவில்**

**சாதி, மதம் என்பது?**

காசுக்காக மாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது மதம். மதம் மாற்றுவதற்காக பேசப்பட்டுக் கொண்டிருக்கிறது சாதி.

**கலா — உடுவில்**

**2017 இல் ஆவது போதைப்பொருள் தடைப்படுமா?**

வருடத்துக்கு முதல்நாள் அதாவது 31.12.2016 அன்றும் வருடத்தின் அன்றும் மதுபான சாலைகளில் நிற்கும் கூட்டத்தைப் பாருங்கள். அதன்பின் இனி போதையை கட்டுப்படுத்த முடியாது என்கின்ற நிலைக்கு வந்துவிடுவீர்கள். மதுப்பழக்கம் எமது பண்பாட்டுடன் இணைந்தாலும் ஆச்சரியத்திற்கில்லை.

**ரஜீவா — அல்வாய்**

**மைத்திரிக்காக ஒரு கவிதை சொல்லுங்கள்?**

உங்கள் உயிருக்கு ஆபத்தென
ஆரூடம் சொன்னபோது
பக்கென்றிருந்ததையா எமக்கு
பத்திரமையா பத்திரம்
எங்கள் மீது பழி போட
எதிரணி சுத்தினமையா சுத்தினம்

**தவராஜா — இணுவில்**

**2050 இல் யாழ்ப்பாணம் எப்படி இருக்கும்?**

யாழ்ப்பாணம் – யாழ்ப்பாணய. பேரன் தாத்தா வின் விரலைப் பிடித்தபடி நடந்து செல்கிறான். பஸ்தரிப்பிடத்தில் நாகதீப பஸ் எகட நகின்ன (நயினாதீவு பஸ்சில் ஏறவும்) நகர விளம்பர ஒலிபரப்பில் காந்தாவங்கே ஹித்த ஹமத்தி ஆபரண ஹனிமட்ட கொந்தம ஷாலாவக் கரிஸ்மா ஆபர்ண ஷாலாவ (மனதிற்குப் பிடித்த நகைகளை வாங்க நாடுங்கள் கரிஸ்மா நகையகம்) தாத்தா எதுவும் புரியா மல் வெறுப்பேறி வீதிக்கு குறுக்காக செல்கிறார் சடுதியென பிறேக் அடித்த வாகனத்தில் இருந்தவர் கெதர கியால ஆவத (வீட்டில் சொல்லிவிட்டா வந்தாய்) என்றார்.

**கபில் — மானிப்பாய்**

**புலிகளை அழித்தவர்களால் ஏன் வாள் வெட்டுக்களை அழிக்க முடியவில்லை?**

வாள்களுக்கு புலிச்சாயம் பூசப்பட்டு விட்டதே. புலி பசித்தாலும் புல்லு தின்னாது என்பது அவர்களுக்கு தெரியாது போல.

**நிருத்திக் — நெல்லியடி**

**இறுதிவரைக்கும் நிலைக்கும் உறவு?**

ஒரு மனிதனுக்கு தன்னைவிட இறுதிவரை வரும் உறவென்று எதுவும் இல்லை. இதைத்தான் கண்ணதாசன் வீடுவரை உறவு வீதி வரை மனைவி காடுவரை பிள்ளை கடைசி வரை யாரோ என்று பாடியுள்ளார்.

**கீனு — மானிப்பாய்**

**பழுத்த இலை மரத்தில் இருந்து விழும் போது ஏன் கவிழ்ந்து விழுகிறது?**

இது வாழ்வின் தத்துவம். மண்ணில் விதை விட்டு மண்ணைப் பிளந்து முளைவிட்டு மரமாகி விருட்சமாகி மனிதர்க்கு பயன் கொடுத்து தன்னைத் தனக்கு உரமாக்கி உறுதி கொள்வது தான் மரம். இந்த வாழ்வின் தத்துவத்தை யாரும் நினைத்துப்பார்ப்பதில்லை.

அப்பிள் பழம் விழ புவியீர்ப்பு விசையை கண்டுபிடித்த நியூட்டன் பற்றி இன்னும் எத்தனை நாட்கள்தான் பேசிக்கொண்டிருக்கப் போகிறோம்.

**விது — உரும்பிராய்**

**பெண் அடிமை எப்போது ஒழியும்?**

நான் அடிமைப்படுகின்றேன் என்பதை பெண் எப்போது புரிந்து கொள்கிறாளோ அப்போது.

**சிவசிந்துராஜா**

**வாழ்வில் மனிதனுக்கு உயர்வைத் தருவது?**

சிலர் பணம்தான் உயர்வென்பர். சிலர் பதவி தான் உயர்வென்பர். சிலரோ பரம்பரை பரம்பரையாக பேசப்படக் கூடிய சொத்துதான் உயர்வென்பர். இன்னும் சிலரோ தங்கள் அந்தரங்க விடயங்களை நாலுபேரின் முன் பேசுவது அதனால் தமக்கு உயர்வு என்ற எண்ணத்துடனும் வாழ்கின்றனர். இவர்கள் கிட்டத்தட்ட வடிவேலுவைப் போன்றவர்கள். இப்படி மனித மனங்கள் எப்போதும் மனிதம் என்கின்ற உயர்வை எட்டாது தாறுமாறாக சிந்தித்துக் கொண்டே இருக்கும்.

**தர்மா — மடத்தடி**

**இன்றைய பெண்களின் நாகரிகம் பற்றி?**

பெண் பிள்ளை சிரிச்சா போச்சு புகையிலை விரிச்சா போச்சு என்கின்ற பழமொழிகள் வகுக்கப்பட்டதெல்லாம் பெண் தெய்வமாகப் போற்றப்படுபவள் என்பதற்காகதான். தெய்வம் இவ்வாறான அநாகரிக செயல்களில் எப்படி ஈடுபடும். என்றைக்கு எமது பண்பாட்டை உடைத்து நாகரிக மோகம் உட்புகுந்ததோ அன்றே அது நீர்புகும் கப்பல் போல் ஆகிவிட்டது.

இனி யார் சென்றாலும் மீட்கமுடியாது. இந்த நேரத்தில் இது பற்றிப் பேசினால் பெண்ணடிமை என்பார்கள். உடைக்கப்பட்ட எம் பண்பாட்டிற்குள் இனி லெகின்ஸ்வந்தென்ன ஈஞ்சலெக் வந்தென்ன, வந்தது வந்ததுதான் போனது போனதுதான்.

**ஜெய்சனா — மல்லாவி**

**காதலர்களிடம் இருக்கவேண்டிய முக்கியமான நல்ல பண்புகள்?**

காதலர்களே! முதலில் காதலர்களாக இருக் கப் பழகுங்கள். செல்வது, நிற்பது, கதைப்பது இப்படி உங்கள் சல்லாபங்களை மக்கள் கூடிநிற்கும் இடங்களில் வைத்துக்கொள்ளாதீர்கள். நாய்கள்கூட மனிதர்களைக் கண்டால் நகர்ந்து அப்பால் செல்கிறது. நாய்களுக்கு ஐந்தறிவு, மனிதர்களுக்கு ஆறறிவு.

**பகீர்துசன் — யாழ்ப்பாணம்**

**தமிழர் போதைக்கு அடிமைப்பட்டனரா? அடிமைப்படுத்தப்பட்டார்களா?**

2009 இறுதி யுத்தத்திற்கு முந்தைய தரவுகளைப் புரட்டிப் பாருங்கள் யாழ்ப்பாணத்தில் மது பாவனையின் விகிதாசாரத்தை. அன்று கஞ்சா என்ற சொல்லுக்கே இடமில்லை. என்றைக்கு இறுதி யுத்தம் நிறைவு பெற்று தமிழர் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டதோ அன்றைக்கே எம் அடுத்த சந்ததியினர் போராட முன்வரக் கூடாது என்கின்ற விதைகள் விதைக்கப்பட்டன. இப்போது அந்த விதைகள் எம் இளைஞரை போதையின் பிடியில் சிக்க வைத்து சின்னாபின்னமாக்குகிறது. இதில் வடக்கில்தான் அதிக மதுபாவனை என்று அறிக்கை வேறு.




# கவிதைக் கலசம்

காதல்
பலருக்கு தேய்பிறை
சிலருக்கு வளர்பிறை

பேனா
பலதை எழுதும்
பலமற்ற குருதி

முகப்புத்தகம்
இனம்தெரியா
இணைய நண்பன்
படம் காட்டி செல்லுமிடம்

சிறை
வாழ்வு செய்தது
சில்லறை
அதற்கு கம்பி போட்ட
கல்லறை

குப்பி விளக்கு
கால மாற்றத்தால்
களைந்தெறிந்த களை

அம்மா
வலிகளை தனக்கும்
சுகங்களை பிறருக்கும்
வழங்குமோர்
ஈகைப் பிறவி

பசி
ஏழையின்
உயிருக்கும்
உதிரத்துக்கும்
இடையிலான
போராட்டம்

**பா.தர்சன்**
**அச்சுவேலி**

## காத்திருப்பு

எருக்கிலைப் பஞ்சாய்
காற்றிலே மிதந்து
புவியை விட்டு உயர்ந்தேன்!
புவியின் கவர்ச்சி விசை
என்னை மட்டும்
புறக்கணித்துவிட்டது
இந்த கேடு கெட்ட
மனிதரில்லா வாழ்க்கை
எத்தனை மகத்தானது– என்
உயிரை மதிக்காத
உலகை விட்டுப் போவதில்
எனக்கு உடன்பாடுதான்!
ஆனாலும்...
போனது உடல்
போவது உயிர்
காத்திருப்பதோ
என் கனவுகள்

**சி.சாமந்தி**
**பளை**

## தமிழா இனி யாரை நம்பப் போகின்றாய்?

தந்தை செல்வாவை நம்பினாய்
தளபதி அமிர்தலிங்கத்தை நம்பினாய்
தம்பி பிரபாகரனை நம்பினாய்
நடந்தது என்ன?
கிடைத்ததா உரிமை
தீர்ந்ததா உன் பிரச்சினை
அன்னை இந்திராவை நம்பினாய்
அண்ணன் எம்.ஜி.ஆர். ஐ. நம்பினாய்
அம்மா ஜெயலலிதாவை நம்பினாய்
நடந்தது என்ன?
கிடைத்ததா உரிமை
தீர்ந்ததா உன் பிரச்சினை
வணங்காமுடி கப்பலை நம்பினாய்
ஐ.நாவை நம்பினாய்
அமெரிக்கா பார்த்துக்
கொள்ளும் என்றாய்
நடந்தது என்ன?
கிடைத்ததா உரிமை
தீர்ந்ததா உன் பிரச்சினை
தந்தை செல்வா அன்றே சொன்னார்
தமிழனை இனி கடவுள்தான்
காப்பாற்ற வேண்டுமென்று
கடவுள் காப்பாற்றுவாரா
அல்லது கைவிட்டுவிடுவாரா?
காலம்தான் பதில் சொல்லவேண்டும்
கடைசியில் ஏமாற்றம் ஏமாற்றமே

**கு.சிவஞானமூர்த்தி**
**வவுனியா**

## 2017 இல்

நேரம் பன்னிரெண்டு மணி
அந்த வீதியில் நடக்கிறேன்
வெறிச்சோடிக் கிடக்கிறது அது
ஆங்காங்கே வெடிச்சத்தங்கள் சில

வீறிட்டு நாய்கள்
வீதியில் திரிந்தன
வெடியின் கொடுமையோ
பசியின் பிடியோ?

கோவில் வாசலில்
ஒருதாய் கதறி அழுகிறாள்
காணாமல் போன மகன்
மறுபடி வருவானா என்று

இந்த ஆண்டே
நல்ல ஆண்டாய் வா
எம் துயர் துடைக்க
நல்லவர்களைத் தா

நடந்தேன்...
நாய்களின் ஓட்டம் நிற்கவில்லை
நான் நடந்து கொண்டேயிருக்கிறேன்
நிலையின்றி...

வீதியோரத்தில் ஒட்டப்பட்டு
கிழிந்தும் கிழியாததுமாய் கிடந்தது
தேர்தல் காலத்துச் சுவரொட்டியொன்று
தேடினேன் என்னவென்று

2017 இல்
அரசியல் தீர்வுக்காய்...
சமஷ்டியைப் பெற்றிட...
தமிழன் தமிழனாக வாழ்ந்திட...
புள்ளடியிடுங்கள் வீட்டிற்கு...

**மாவை. நா.கஜேந்திரன்**

# மௌனத்தின் தேடல்– 334



## மீட்பரே

ஊக்க சக்தியாய்
உதித்தவரே
உலகையாள பிறந்தவரே
ஆக்கும் சக்தியாய்
அவதரித்தீர்
ஆக்கசக்தி எம்மில்லை
நேசசக்தியாய்
பிறந்த உம்மை
நெற்றியில் முட்கிரீடம்
வைத்தனரே
சிலுவை சுமந்த
செஞ்சுடரே
செழுமையில்லை
எம்மிடத்தில்
கொடுமை நிறைந்த பூமியிலே
குறைகள் கலைய வந்தீரோ
மீட்பராய் வந்த உம்மிடத்தில்
மீட்சியை வேண்டி
துதிக்கிறோம்



**இளவரசு**
**ஓட்டுசுட்டான்**

## யேசு பிறந்தார்

வயல்களை நோக்கிய
வான்மழையாய்
இருளினை அகற்றிடும் விடியலாய்
தீவனத் தொட்டியில்
மரியன்னை மடியில்
குழந்தையேசு
பாலகனாய் பிறந்திட்டார்

**உடுவிலூர் கலா**

## அதியுவனே ஆண்டவரே

கன்னி மரியாள் மடியில்
தவழ்ந்து ஏரோது மன்னனுக்கு
ஒளிந்து உலகமே வியந்து
நிற்க உதித்த அதியுவனே!
ஆண்டவரே நீவீரபட்ட
பாடுகள் நாமறிவோம்
தந்த அதிசயங்களையும்
கேட்டறிந்தோம்
மனித உருவில் வந்த தெய்வமே
புனித பைபிள் மறை
கூறும் பொக்கிஷமாம்
இனிதே கூறும் சங்கீதம்
வாய்க்கியங்கள் ஆண்டவரே
இத்தினத்தில் வழிபடுவோம்
வாழ்வு நலம் பெற

**அபி குலமாலிகா**
**சங்கானை**

## காட்சி கொடு ஆண்டவரே

விண்ணுலகில் நின்று இறங்கி
வந்த தேவரே! உன்னதமாய்
உத்தமராய் உலகு உய்ய
மண்ணுலகில் மாந்தர்
ஒளிபெற்று விழிப்புற கண் மலர்ந்து
காட்சி கொடு ஆண்டவரே
ஏரோது மன்னன் ஏவிவிட்டான்
கொலை செய்ய
பாரேந்தும் பாலகனோ
நல்விதிக்குள் மறைந்து நின்றார்
வலிகளை, பாடுகளை சுமப்பதற்காக
மானுடரைக் காக்க வந்த
உத்தமரை மரணம் நெருங்காது
வந்தகடமைகள்தான் முடியும் வரை

**சா.லஷ்மி**
**சித்தன்கேணி**

## கி.பி (கிறிஸ்து பிறப்பு)

தாரின் ஒளியினில்
தவழ்ந்த தனிமையில்
ஜனித்த இயேசுவே
ஆதரித்த கரங்களை
அனுதினம் ஏடு பதித்துவிடு
சூக்கும புத்திரனாய்
சுடர்விட்டு ஒளிர்வாயோ!
சூசையப்பர் அழுகையை
பதிலாக உரைத்துவிடு
உதிர்ந்த தினத்தில்
மலரும் மொட்டாகியயே!

**சு.சுருத்திகா**
**யா/ வயாவிளான் ம.க.**

## பாலனின் பிறப்பு

தேவதைகள் ஆசீர்வதிக்க
தொழுவத்தில் தாய் மடியில்
தங்க மகனாக சிசுபாலன்
பிரகாசித்து
அன்பில் மைந்தனாக
கருணையில் கடலாக
அகிம்சையில் ஒளியாக
வாழ்க்கையை வழிகாட்ட
சரித்திர நாயகன்
உதித்த தினத்தை
இன்பம் பொங்கிட
கொண்டாடுவோம்

**சி.பிரியங்கா**
**மட்டுவில் தெற்கு**

## மனங்களில் நிறைந்தார்

மாட்டுத் தொழுவத்திலே
மரியாள் மகனாய்
அவதரித்தார் யேசு
அவனி சிறப்புற
பாலைவனமாயிருந்த
பாவிகள் வாழ்க்கை
வற்றாத ஜீவநதியாய்
மாறிட வகை செய்தார்
பாவிகளை மன்னித்து
பாவத்தை ஏற்றார் பரமபிதா
சிலுவையைச் சுமந்து
தூயமனங்களில் நிறைந்தார்
அன்பு மழை பொழிந்து
அறவழி நின்று
அகிலத்தை வென்றார்

**சி.திவ்வியா**
**யா/ப.மெ.ம.வி.**

# மௌனத்தின் தேடல் –335



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 04.01.2017ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -



















# 2017ஆம் ஆண்டு உங்களுக்கு எப்படி? இது சிரிப்பதற்கு மட்டும்!







புதுவருடத்தினை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கின்றனர் மக்கள். கடந்த ஆண்டை விட வரும் ஆண்டு மிகவும் சிறப்பாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் எல்லோர் மனதிலும் நிச்சயம் இருக்கும்.

இதற்காகவே மக்கள் புதுவருடத்தில் நமது இராசிபலன்கள், சனிப்பெயர்ச்சி பலன்கள் எவ்வாறு காணப்படுகிறது என்பதை தெரிந்து கொள்ள ஆர்வம் அதிகமாகவே இருக்கும்.

ஒருபுறம் இப்படியான சுவாரசியமான தேடுதலில் இருக்கும் மக்களுக்கு மறுபுறம் நெட்டிசன்கள் செய்யும் ரகளை சற்று சிரிக்க வைப்பதாகவே இருக்கிறது. இதோ நெட்டிசன்களின் இராசி பலன்... உங்கட இராசிக்கு எப்படி?...




















## உலகின் அழகான குட்டி தம்பதிகள்



உலகின் மிகக் குட்டியான தம்பதியாக கின்னஸ் சாதனை படைத்துள்ளனர் **Paulo Gabriel** மற்றும் **Katyucia Hoshino**. பிரேசிலில் இருவரும் திருமணம் செய்து கொண்டனர்.

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு இன்டர்நெட் வழியாக இருவரும் சந்தித்ததாகவும், ஒருவரை ஒருவர் பிடித்து போகவே திருமணம் செய்து கொண்டதாகவும் கூறியுள்ளனர்.

இந்நிலையில் லண்டனில் இருவரின் உயரமும் அளக்கப்பட்டு கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பிடித்துள்ளனர். இருவரின் உயரமே சேர்த்து 70 இன்ச் என்பது குறிப்பிடத்தக்கது.

## வெட்டிவேர் செருப்பு



சமீபகாலமாக வெட்டிவேர் பல வழிக ளில் மனிதர்கள் உபயோகப்படுத்தும் பொருளாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. 'இந்தியன் வெட்டி வேர் நெட்வேர்க்' அமைப்பைச் சேர்ந்தவர்கள் வெட்டிவேரை மதிப்புக்கூட்டிய பொருளங்களாக விற்பனை செய்து வருகிறாரகள்.

"மருத்துவ குணம் கொண்ட வெட்டி வேரில் பலவிதமான பொம்மைகள், செருப்புகள், மாலைகள், கால் மிதிகள், படுக்கை விரிப்புகள், வாசனைத்திரவியங் கள், சோப்புகள் என்று 60இற்கும் மேற்பட்ட பொருட்கள் தயாரிக்கப்பட்டு உலகம் முழு வதும் விற்பனையாகிக் கொண்டிருக் கிறது.

இப்போது வெட்டிவேர் செருப்பினை தயார்செய்து விற்பனை செய்து வருகின்ற னர். இந்தச் செருப்பானது, உடலின் வேர் வையையும், சிறுநீரையும் பெருக்கி வெப் பத்தை அகற்றி உடலுக்கு குளிர்ச்சியூட்டு கிறது. வெட்டிவேர் தொப்பியை பெண்கள் நறுமணத்திற்காகவும் தலையில் அணிவது ண்டு என்றார்.

## வீட்டு வேலைக்கார டெக்மோரா




"மார்க் வீட்டு வேலைக்காரன்" அப்படி என்று ஒரு டைட்டில் வைத்துப் படமே எடுக்கலாம். அப்படி ஒரு கண்டு பிடிப்பை வெளியிட்டு இருக்கிறார் பேஸ்புக் சி.இ.ஓ மார்க். ஆர்ட்டிஃபிஷியல் இன்டெலிஜென்ஸ் மூலமா நமது கமெண்டு களுக கு ஏற்ப வேலை செய்யும் "ஜார்விஸ்" என்ற தானியங்கிக் கட்டுப்பாட்டு சேவைதான் அது. அது எப்படி வேலை செய்யும் என்கிறது ஃபர்ஸ்ட் லுக் வீடியோவை வெளியிட்டு இருக்கிறார் மார்க். "இது வரைக்கும் டெக் உலகில் வந்த ஆர்ட்டிஃபிஷியல் இன்டெலிஜென்ஸ்க ளில்இதுதான்பெஸ்ட்!" எனச் சொல்லும் அளவுக்கு ட்யூன் ஆகி இருக்கு ஜார் விஸ். அந்த வீடியோவில் நாம் பார்க் கிற விடயம் ஒரு செக்கன் நம் கண் ணில் சிட்டி ரோபோவைக் கொண்டு வந்து நிறுத்துகிறது. மார்க், "லைட்ஸ் ஓப்" என்று சொன்னதும் வீட்டில் உள்ள எல்லா லைட்டும் ஓப் ஆகிவிடும். காலை யில் எழுந்ததும் உங்கள் குழந்தையை எண்டெர்டெயின் பண்ணப் போறேன் எனறு சொல்கிறது. இதுதவிர, மார்க் அலு வலகம் புறப்படும போது அவர் எப்போ தும் அணியும் ஒரே கலர் டீ சேர்ட்டான ப்ரவுன் டீ சேர்ட்டைத் தூக்கி அடிக் கிறது. "தொழில் நுட்ப உலகின் புதிய முயற்சி இது!" என்கினறனர் தொழில்நுட்ப நிபுணர்கள். இதைத் தயா ரிக்க மார்க் கிட்டத்தட்ட 18 மாதங்கள் செலவழித்திருக்கிறார். இது எப்படி உருவானது என்ற விளக்க வீடியோ யூ-டியூபில் வெளியிடப்பட்டுள்ளது. அதில் பாவம் மார்க அவரது குடும்பத்தை பாடாய்ப்படுத் தியுள்ளார் முதலில் இரும்பு மனிதன வோய்ஸ் சின்க் ஆகாமல் வி.டி.வி. கணேஷ் வோய்ஸ் மாதிரி கரகர குரலில பேசி அவரது மனைவியை கடுப்பேற் றியிருப்பது வேற லெவல். சுருக்கமா கச் சொன்னால், "இந்த ஜார்விஸ் என்ன சொன்னாலும் பதில் சொல்லும், சொன்ன வேலையைக் கரெக்டா செய்யும்!" என்கிறார் மார்க்.

# வந்தாரை வரவேற்காத வன்முறை நகரங்கள் !

ரிஸ்க் எடுக்கிறதெல்லாம் எனக்கு ரஸ்க் சாப்பிடுற மாதிரி' என கெத்தாகக் கொலரைத் தூக்கிவிடுபவர்களை அசைத்துப் பார்க்கும் வகையில், உலகின் சில நகரங்கள் மிகவும் ஆபத்தானவை. இந்த நகரங்களைப் பற்றி கூகுளில் தேடினால் 'என்னப்பா வீட்ல சொல்லிட்டு வந்துட்டியா?' எனக கேட்டும் சாரதிகள் போல எண்ணத் தோன்றுகிறது.

### ரியோ டி ஜெனிரோ



பிரேசிலின் தலைநகரம் ரியோ டி ஜெனிரோ. அழகான கடற்கரை, உலகம் முழுக்கப் பிரபலமான ஜீசஸ் சிலை எனப் பல சுற்றுலா அம்சங்கள் இருந்தும் இந்த நகரம் பாதுகாப்பற்ற நகரமாகத்தான் கருதப்படுகிறது. உலகின் டாப்-50 மோசமான நகரங்களின் பட்டியலில் 21 இடங்கள் பிரேசிலைச் சேர்ந்தவை என்பது இன்னும் அதிர்ச்சியைத் தரும். காரணம், இங்கே பல்கிப் பெருகியுள்ள கோஷ்டி மோதல்களும் குற்றச்செயல்களும்தான். ஒரு வருடத்தில் துப்பாக்கி வெடிக்காத நாட்களை விரல்விட்டு எண்ணிவிடுமளவிற்கு இங்கு தினம் தினம் தீபாவளி கொண்டாடுகின்றன போதைக்கடத்தல் கும்பல்கள். ஒலிம்பிக் போட்டியைப் பார்க்கச் சென்றிருந்த சுற்றுலாப் பயணிகளின் உடைமைகளை பட்டப்பகலில் லாவகமாக பறித்ததெல்லாம் மறக்க முடியாத அனுபவங்கள்.

### மொகதிசு



கடற்கொள்ளையர்கள் கலாசாரத்தை இன்னும் உயிர்ப்போடு வைத்திருக்கும் நாடான சோமாலியாவின் தலைநகரம்தான் இந்த மொகதிசு. மோசமான நகரங்களின் பட்டியலில் மிக முக்கியமானது இது. தீவிரவாத இயக்கங்களுக்கு இடையேயான உள்நாட்டுப் போரால் ஓட்டை ஆகியிருக்கும் இந்த நகரத்திலிருந்து உங்களைப் பாதுகாத்துக்கொள்ள ஒரே வழி, இந்த நகரத்திற்குப் போகாமல் இருப்பதுதான். அதையும் தாண்டி அடம்பிடித்துச் சென்றீர்கள் என்றால், ஆயுதம் ஏந்திய தனியார் பாதுகாவலர்கள் இல்லாமல் அறையை விட்டே வெளியே செல்லாதீர்கள் என்கின்றன பல நாடுகளின் தூதரகங்கள். கொஞ்சம் கலரான ஆட்களைப் பார்த்தாலே அலேக்காகத் தூக்கிச் சென்று அழகு பார்ப்பதுதான் பல தீவிரவாத இயக்கங்களுக்கும் வேலையாம். புரிஞ்சுதா?

### சான் பெட்ரோ சுலா



ஹோண்டுராஸ் நாட்டின் சான் பெட்ரோ சுலா நகரமும் காரகஸ் போலவே வன்முறைகள் நிறைந்தது. நாம் தெருவில் நடந்து போகும்போது குப்பைகளைப் பார்த்துப் பழகிவிட்டதைப்போல, தினம்தோறும் கொலை செய்யப்பட்ட உடல்களைப் பார்த்துப் பழக்கப்பட்டவர்கள் இந்த நகரத்தைச் சேர்ந்தவர்கள். கோஷ்டி மோதல் காரணமாகப் பலியாவோர் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே போகிறது. இதன் காரணமாக, இன்ஜினீயரிங் முடித்துவிட்டு சவப்பெட்டி செய்யும் தொழிலுக்குச் செல்லும் இளைஞர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கிறதாம். காதல் மட்டுமில்லை. வன்முறையும் சொல்லிக்கொண்டு வருவதில்லை என்பதால் சுற்றுலாப் பயணிகள் செல்ல அச்சப்படும் நகரங்களின் பட்டியலில் முன்னிலை வகிக்கிறது.

### காரகஸ்

வெனிசுவெலா நாட்டின் தலைநகரம்தான் காரகஸ். பெயரில் மட்டுமல்லாமல், அந்த நகரமே கொஞ்சம் காரசாரமானதுதான். போதைக்கடத்தல் கும்பல்கள் சர்வ சாதாரணமாக சண்டைபோட்டு துப்பாக்கிச் சூடு நடத்துவதால், கடந்த ஆண்டு மட்டும் சுமார் 4,000 பேர் உயிரிழந்துள்ளார்கள். என்கிறது ஒரு ரிப்போர்ட். டொரண்டினோ, ராம்கோபால் வர்மா படங்களை மிஞ்சும் அளவிற்கு இரத்தம் தெறிக்கும் வன்முறை நிரம்பிய இந்நகரத்திற்கு வெளிநாட்டுக்காரர்கள் சென்று வந்தாலே ஒரு வருடத்திற்கு கனவிலும் அடர்சிவப்பு நிறத்தில் இரத்தம் வருவது நிச்சயம் என அடித்துச் சொல்கிறார்கள். உயிர் மேல் ஆசையுள்ளவர்கள், இந்தப் பக்கம் தவறியும் போய்விடாதீர்கள் எனப் பல இணையத் தளங்களும் அறிவுறுத்துகின்றன.



### கௌதமாலா

உலகளவில் மிக அதிகமாய் ஏலக்காய் உற்பத்தி செய்யும் நாடான கௌதமாலா குடியரசின் தலைநகரம்தான் கௌதமாலா. இராணுவப் புரட்சி, உள்நாட்டுக் குழப்பம் போன்ற காரணங்களால் நாட்டின் பல பகுதிகள் இன்னும் வளர்ச்சியடையாமல் இருக்கின்றன. நாடு முழுக்க சுற்றுலாத்தலங்கள் இருந்தாலும் வன்முறைகள் மற்றும் கடத்தல் சம்பவங்களால் பலரும் இந்த நகரத்திற்குச் செல்ல நடுங்குகின்றனர். பேருந்தில் ஏறிக் கொள்ளையடிக்கிறதுதான் நமக்குத் தெரியும். ஆனால் இங்கே பேருந்தையே கடத்திக் கொண்டுபோய்விடுவது சகஜம். இங்கு ஆட்களைவிட துப்பாக்கிகள்தான் அதிகம் பேசுகின்றன.



பொதுவாகவே இலத்தீன் அமெரிக்க நாடுகளில் போதைப் பொருள் கடத்தல், கோஷ்டி மோதல் போன்ற காரணங்களால் பாதுகாப்பற்ற நிலைமை நிலவுகிறது. சில ஆபிரிக்க, ஆசிய நாடுகளில் உள்நாட்டுப் போர், தீவிரவாதம் பெரும் அச்சுறுத்தலாக உள்ளன. சாலை, கடல் மார்க்கம், விமானம் என எப்படிச் சென்றாலும் ஆபத்துகள் கையசைத்து வரவேற்கின்றன. அது சரி...

# குளிர்கால நோய்களை விரட்ட...

ஆரோக்கியத்தை அசைத்துப் பார்க்கும் காலம், குளிர் காலம். இந்தக் காலத்தில்தான் சளி, இருமலை ஏற்படுத்தும் வைரஸ்கள் எளிதில் பரவும். சின்னச்சின்ன முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் போதும்... குளிரோடு சேர்த்து நோய்களுக்கும் போடலாம் நோ என்ட்ரி. அப்படிப்பட்ட சில முக்கியமான நோய்கள், தடுக்கும் வழிமுறைகள் இங்கே...

### சரும வறட்சி

குளிர்காலத்தில் பனி அதிகம் இருப்பதால் தோல் வறண்டுவிடும் சுருக்கம் ஏற்படும் தோல் காய்ந்து, உதிரும் நிலைகூட சிலருக்கு வரலாம். உதடு, தோல்களில் வெடிப்பு, தோலின் நிறம் வெளிறிக் காணப்படுதல் மற்றும் புண்கள் வரும்.

**தீர்வு:** இவற்றைச் சரிசெய்ய லிக்விட் பாரஃபின், கோல்டு கிரீம்களை தடவலாம். அதைவிட எளிய முறை, தேங்காய் எண்ணெயை கை, கால், முகத்தில் தேய்த்துக்கொள்வது.

### மூட்டுவலி

மூட்டுவலிக்கு உடல் எடை அதிகரிப்பது, கல்சியம் குறைபாடு, மெனோபாஸ் எனப் பல காரணங்கள் உள்ளன. ஆனால், குளிர்காலத்தில் மூட்டு ஜவ்வில் அலர்ஜி ஏற்பட்டு அழுத்தம் கொடுக்கும்போது வலி ஏற்படும். உடலில் வீக்கம், இடுப்புவலி தீவிரமாகும். முதுகுத்தண்டுவட அழற்சி போன்ற அறிகுறிகள் ஏற்படும்.

**தீர்வு:** தினசரி சில உடற்பயிற்சிகள் செய்துகூட வலியைக் குறைக்கலாம். வைத்தியரிடம் ஆலோசனை பெற்று மருந்துகள் சாப்பிடலாம்.

### அஜீரணக் கோளாறு


குளிர்காலத்தில் அதிகம் பசி எடுக்காது. சாப்பிட்ட உணவு எளிதில் செரிக்காமல் வயிற்றுக்கோளாறு மற்றும் அஜீரணத்தை உருவாக்கலாம். வயிறு மந்தநிலையில் இருக்கும். வயிற்றுவலி, வயிற்றுப்போக்கு ஏற்படலாம்.

**தீர்வு:** இதைத் தவிர்க்க, உடலின் இரத்த ஓட்டம் சீராக இருக்கவேண்டியது அவசியம். அதற்கு நீண்ட தூர நடைப் பயிற்சி செய்யலாம். கொழுப்புச்சத்து அதிகம் உள்ள பொருட்களைத் தவிர்க்க வேண்டும். பழங்கள், கீரை வகைகளை அளவாக சாப்பிடலாம். ஒரேஞ்ச், அன்னாசி, தக்காளி, முட்டைக்கோஸ், கரட் உள்ளிட்ட உணவுகளைச் சேர்த்துக்கொண்டால், நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். அஜீரணக்கோளாறைத் தொடர்ந்து காய்ச்சல் இருந்தால், மருத்துவ சிகிச்சையோடு இரத்தப் பரிசோதனையும் செய்து கொள்ளவேண்டியது அவசியம்.

### ஆஸ்துமா மற்றும் சுவாசக்கோளாறு

ஆஸ்துமா மற்றும் வீஸிங் பிரச்சினை உள்ளவர்களுக்கு, நெஞ்சுச் சளி ஏற்படும். இடைவிடாத இருமல் மற்றும் மூச்சுத்திணறல் ஏற்படும். அதனால் சுவாசிப்பதே சிரமமாக இருக்கும். முதியவர்களுக்கு மூச்சுக்குழலில் சுருக்கம் ஏற்படும். மூளை மற்றும் இதயத்துக்குச் செல்லும் இரத்த ஓட்டம் குறையும். இதனால் பக்கவாதம் ஏற்படக்கூட வாய்ப்பு உள்ளது.

**தீர்வு:** இந்தச் சமயத்தில் வைத்தியரிடம் ஆலோசனை பெற்று 'இன்ஹேலர்' பயன்படுத்துவது நல்லது. காதுகளில் பஞ்சு வைப்பது, மப்ளர், மாங்கி கேப் அணிந்துகொள்ளலாம். காலை, மாலை வேளைகளில் வெளியில் அலைவதைத் தவிர்க்க வேண்டும்.




### வைரஸ் காய்ச்சல்

குழந்தைகளுக்கு சளி, காய்ச்சலோடு மூச்சிரைப்பும் (Wheezing) வரும். வைரஸ் கிருமிகள் ஒருவரிடமிருந்து மற்றவருக்குப் பரவ வாய்ப்புகள் உள்ளன. தொண்டைவலி, காய்ச்சல், சோர்வு, குமட்டல், உடல்வலி, அரிப்பு, தலைவலி, இருமல், தொண்டைப்புண், அடிவயிற்றில் வலி போன்றவை வைரஸ் காய்ச்சலின் முக்கிய அறிகுறிகள். சில நேரங்களில் வைரஸ் காய்ச்சலால் பாதிக்கப்பட்டவருக்கு மேற்கூறிய அறிகுறிகள் தென்படாமலும் இருக்கலாம். அதற்குப் பதிலாக மூச்சுவிடுவதில் சிரமம் மற்றும் தொடர்ந்து ஐந்து நாட்கள் அதிகப்படியான காய்ச்சல் இருக்கக்கூடும்.

**தீர்வு:** எளிதில் செரிமானமாகும் வீட்டு உணவுகளையே சாப்பிட வேண்டும். தண்ணீரை நன்றாகக் கொதிக்கவைத்து ஆறவைத்துப் பருக வேண்டும். ஹோட்டல் உணவுகளைத் தவிர்க்க வேண்டும். மருத்துவச் சிகிச்சையுடன் ஓய்வு எடுத்தால் காய்ச்சல் சரியாகிவிடும். வெளியில் செல்லும்போது, மாஸ்க் அணியலாம். தும்மல், இருமல் மூலமாக வைரஸ் பரவும் என்பதால், கைக்குட்டை அல்லது டிஷ்யூ பேப்பர் பயன்படுத்துவது நல்லது.

## சிறுகதை




அன்று லாவண்யாவிற்கு அளவற்ற சந்தோசம் தேர்த்திருவிழாவுக்குப் போகலாமா?... என நாலைந்து நாட்களாக நெஞ்சைக் குடைந்தெடுத்த கேள்விக்கு முடிவு கிடைத்திருந்தது.

"பிள்ளைகளே , ...... நாளைக்கு எமதூர்க் கோயிலின் தேர்த் திருவிழா, ஆதலால் இந்த விசேட வகுப்பு நடைபெறாது" என வகுப்பாசிரியையின் அறிவிப்பு பிள்ளைகளின் வாயிலே தேன் வார்த்தது போல் இருந்தது. அதிலும் கோயி லின் அருகில் குடியிருக்கும் லாவ ண்யாவின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்ற இருக்கும் மாணவி லாவண்யா அவளது தாயார் கமலாம்பிகை வீட்டிற்கு அருகிலுள்ள பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றி வருகிறார்.

பரீட்சையைமையமாகக்கொண்டு இன்று லாவண்யாவின் மீது பெரும் சுமைகள் சுமத்தப்பட்டுள்ளன. காலை 7.30 மணிக்கு பாடசாலைக்குள் நுழைந்து கொள்பவளுக்கு பி.ப 2.00 மணிக்கு பாடசாலையிலே விசேட வகுப்பு ஆரம்பமாகிறது. அவளது தாயார் கமலாம்பிகை தனது களைப்பை யும் பாராது 3 மணிக்கு பாடசாலை வாசலில் நிற்கின்றாள். சலிப்புடன் வெளியே வரும் லாவண்யாவின் கண்கள் தாயாரைத் தேடுகிறது. கமலாம்பிகையும் அங்கு நிற்கும் பலரையும் விலத்தி பிள்ளை..... பிள்ளை... என்றவாறு வேகமாக வருகிறாள். தான் கையில் கொண்டு வந்த இரண்டு வடைகளையும் மைலோவொன்றையும் மகளிடம் கொடுக்கிறாள். அவற்றை விரைவாக மிண்டி விழுங்கிக் கொண்ட லாவண்யாவின் புத்தகப்பையை மாற்றி தான் கொண்டு வந்த இன்னோர் புத்தகப்பையை அவளது முதுகிலே சுமத்தி அருகில் நிற்கும் ஆட்டோவில் ஏற்றி விடுகிறாள். இன்னும் மூன்று மாணவர்கள் அவ ளுடன் சேர்ந்து ஏறிக் கொள்கின்றனர். நகரத்தில் உள்ள பிரபல ஆசிரியரின் வகுப்பு , ஆட்டோ நகரத்தை வேகமாக அடைகிறது. அலுத்துக் களைத்த பிள்ளைகள் நால்வரும் வகுப்பறைக்குள் நுழைகிறார்கள். இவர்களைப் போல் இன்னும் பல இடங்களிலிருந்தும் களைப்புடன் பிள்ளைகள் வந்திருக்கிறார்கள். இரண்டு மணித்தியாலங்களாக நடைபெற்ற வகுப்பு முடிவுக்கு வருகிறது. மீண்டும் ஆட்டோவில் ஏறுகிறார்கள். லாவண்யா வீட்டை வந்டையும் போது அவளை வரவேற்பதற்காக கமலாம்பிகை ஏங்கித் தவித்த முகத்துடன் காத்திருக்கின்றாள். மாலை 6 மணிக்கு மதிய உணவை முடித்துக்கொண்டவளுக்கு களைப்பு இன்னும் மாறவேயில்லை. ஆயினும் தள்ளாடித் தள்ளாடி எழுந்து நிற்க வேண்டிய தேவை. ஏனெனில் ஆங்கில ஆசிரியர் வீட்டிற்கு வரப் போகின்றனர்.

காலை 7.30 மணியிலிருந்து இரவு 8 மணிவரை ஓய்வின்றிப் படிக்கும் லாவண்யாவின் தாயார் ஒரு ஆசிரியை அவர் ஆசிரிய கலாசாலை, கல்விமாணி, முதுகல்விமாணி எனப் பல தொழிற்றகைமைகளைப் பெற்றுள்ளார். அவருக்குப் பிள்ளைகளின் உளவியல் என்னவென்று தெரியாமல் இருப்பது தான் எமது கற்கை நெறிகளின் குறைபாடாகிறது. யாவும் பரீட்சைக்காகவே கற்கப்படுகிறது, கற்பிக்கப்படுகின்றது.

லாவண்யா களைத்து விட்டாள். அவளை அறியாமலே கண்கள் தூக்கத்தை எட்டி விட்டன. சிறிது நேரத்தின் பின் தாயார் தட்டி எழுப்பி இரவு உணவை ஊட்டி விட்டு அவளுக்கு விருப்பமில்லாத ஒன்றையும் காதில் போட்டு விடுகிறாள்.

"பிள்ளை இன்றைக்கு படிச்சதுகளைஒருக்கால்தட்டிப்பார்பிள்ளை..." லாவண்யாஅரைத் தூக்கத்தில் விழுந்து எழுந்து கற்கின்றாள்.

இதற்கு மேலாக வீட்டின் தொலைக் காட்சிப்பெட்டி பரீட்சை முடியும் வரை இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. தொலைக்காட்சி தான் பொழு போக்காக இருந்த அந்த வயது போன இரண்டு ஜீவன்களும் ஒவ் வோர் மூலையில் இருந்து தூங்கி விழு ந்து கொண்டிருக்கிறார்கள்.

தேர்த்திருவிழாவுக்காக நாளைய தினம் வகுப்புக்கள் நடைபெறாது என ஆசிரியை கூறிய செய்தி யுடன் வேகமாக வீட்டுக்கு வரும் லாவண்யா.

அம்மா... அம்மா

நாளைக்கு தேருக்காக வகுப்பில்லையாம் அம்மா... எனக் கூறியவாறு துள்ளிக் குதித்த வண்ணம் என்ரை உடுப்புக்களையும் அயன் பண்ணி வையுங்கோ...

மகிழ்ச்சியுடன் இருக்கும் லாவண்யா தனது வீட்டில் நின்றவாறு தூரத்தே தெரியும் கோயில் கோபுரங்களை நோக்குகின்றாள். அன்றைய தினம் இரவு நடைபெறவிருக்கும் சப்பறத் திருவிழாவுக்காக கோபுரங்கள் மின்விளக்குகளால் அழகுபடுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

லாவண்யாவின் உள்ளக் கிடக்கையில் ஏற்பட்டிருக்கும் மகிழ்ச்சியுடன் , தாயார் கமலாம்பிகையால் சேர்த்தியங்க முடியவில்லை. அவளது எண்ணங்களெல்லாம் புலமைப்பரிசில் பரீட்சையும் தனது மகளையும் பற்றியதாகவே இருக்கிறது. லாவண்யாவின் கருத்துக்களைப்பொருட்படுத்தாதவளாய்பிள்ளை... லாவண்யா சாப்பிடு ஆட்டோவரப் போகுது... என்றவாறு சமையலறையிலிருந்து வெளியே வருகிறாள்.

லாவண்யா சாப்பிடுகிறாள். புத்தகங்களைத் தூக்குகிறாள், காத்திருக்கிறாள், ஆட்டோ வருகிறது. ஏறிக் கொள்கிறாள். ஆட்டோ விரைகிறது.

சப்பறத் திருவிழாவென்றால் சொல்ல வேண்டுமா, ஆலயம் ஒளி வெள்ளத்தில் மிதக்கிறது. அந்த ஒளி லாவண்யாவின் வீட்டுச் சுற்றாடலையும் நிரம்பி நிற்கிறது.

அம்மா.... இரவுக்கு கோயிலுக்குப் போவோமா? என்றவாறு சிறிய ஒரு கெஞ்சல்.

பிள்ளை எப்படியும் சப்பறம் தொடங்க ஒன்பது மணியாகும் அப்ப நாங்கள் போகலாம். அதுவரையும் கொஞ்சம் படி பிள்ளை.

ஆலய ஒலிபெருக்கியின் இரைச்சல்களுக்குள் லாவண்யா புத்தகமும் கையுமாக இருந்து ஏதோ படித்துக் கொண்டிருக்கிறாள்.


இரவு வீட்டு வேலைகளை ஒதுக்கி விட்டு அன்றைய தினசரி பத்திரிகைக்குள் கண்ணைப் புதைந்திருக்கும் கமலாம்பிகைக்கு ஒரு செய்தி எட்டுகிறது. தரம் 5 மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கான செயலமர்வு ஒன்று நாளை காலை 8.30 மணிக்கு நகரத்திலுள்ள மண்டபம் ஒன்றில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்பதே அதுவாகும்.

என்ன செய்வதென்று தெரியாது விழிக்கின்றாள் கமலாம்பிகை. இதற்கிடையில் சக பெற்றோர்களிடம் இருந்தும் வகுப்பாசிரியரிடம் இருந்தும் இவ்விடயம் தொடர்பாகத் தொலைபேசி அழைப்புக்களும் வந்து குவிந்த வண்ணம் இருக் கின்றன. கட்டாயம் போக வேணும் என வகுப்பாசிரியரும் எப்படிப் போவது என பெற்றோர்களும் உரையாடிக் கொண்டிருக்கிறார்கள்.

கமலாம்பிகை லாவண்யாவிற்கு அருகில் அமைதியாக அமர்ந்து கொண்டு "பிள்ளை நாளைக்கு யாழ்ப்பாணத்திலை உங்களுக்கொரு செமினாராம்..." "பல இடங்களில் இருந்தும் முக்கியமான ஆட்கள் எல்லாம் வருகினமாம் அதுவும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள் கட்டாயம் பங்குபற்ற வேண்டுமாம்..." என்றவாறு தனது கட்டளைகளை லாவண்யாவின் காதுகளுக்குள் மெல்ல மெல்ல போட்டுக் கொள்கிறாள்.

சப்பறத்திருவிழா, தேர்த்திரு விழா என்ற எண்ணங்களுடன் புத்தகங்களுக்குள் உறைந்திருக்கும் லாவண்யாவின் உள்ளத்தை வலிகள் நெருடிக் கொள்கின்றன. தாயின் சொல்லைத் தட்ட முடியாது என்பது அவளுக்குத் தெரியும். மௌன மாக ஏங்கித் தவிக்கிறாள். உள்ள மும் மௌனமாக அழுகிறது.

பிள்ளை தேர்த்திருவிழா அடுத்த



வருடமும் வரும் இப்ப வெளிக்கிடு சப்பறத்தை பார்த்திட்டு வருவம்.

பொழுது புலர்ந்துவிடுகிறது. கமலாம்பிகை வேகமாக இயங்க ஆரம்பித்து விடுகிறாள். வீட்டு நிர் வாகம் மற்றும் பல தொலைபேசி அழைப்புக்கள் எல்லாவற்றிற்கும் பதிலளிக்க வேண்டிய பொறுப்பும் அவளுக்குரியது.

ஆலயத்தில் தேர்த்திருவிழாவிற்கான ஆயத்தங்கள் தொடங்கி விட்டன. கமலாம்பிகை மகளுடன்வெளியே வருகிறாள். மோட்டார் சைக்கிளில் இருவரும் வேகமாக புறப்படுகின்றனர். வீதியெங்கும் பக்தர் கூட்டம் கோயிலை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. லாவண்யா கலங்கிய விழிகளுடன் தாயாரின் பின்னே அமர்ந்திருக்கிறாள்.

செயலமர்வு மண்டபத்திற்குவெளியே பல தரப்பட்ட வாகனங்கள் நீண்ட வரிசையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மண்டபம் நூற்றுக்கணக்கான மாணவர்களால் நிரம்பி வழிகிறது. சில மாணவர்கள் இருப்பதற்கு இருக்கையின்றி பின் வரிசையில் நிற்கிறார்கள். இதைவிட வருகை தந்த பெற்றோர்களும் மாணவர்களைச் சூழ நிற்கிறார்கள்.

பல பாகங்களில் இருந்து வந்த பல பல ஆசிரியர்கள் தங்கள் கருத்துக்களைக் கூறுகிறார்கள். சில வினாக்களைச் செய்து காட்டுகிறார்கள்.

செயலமர்வு நீண்ட நேரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சிதம்பரச் சக்கரத்தில் பேய் பார்த்தது போல் பல மாணவர்கள் அமர்ந்து இருக்கிறார்கள். கோயிலின் தேர்த்திருவிழா என்ற எண்ணத்தில் ஆழ்ந்து இருக்கும் லாவண்யாவிற்கு எதுவுமே விளங்கவில்லை.

வளவாளர்கள் கொண்டு வந்த மாதிரி வினாப்பத்திரங்களை பெற்றோர்கள் முண்டியடித்து விலை கொடுத்து வாங்குகிறார்கள்.

மதியத்திற்கு பிற்பாடே செயலமர்வு நிறைவுக்கு வருகிறது. லாவண்யா சினத்துக் களைத்த முகத்துடன் தாயாரின் மோட்டார் சைக்கிளில் ஏறிக் கொள்கிறாள்.

தேர்த்திருவிழா முடிவடைந்து கோயில் வெறிச் சோடிக் கிடக்கிறது. வீட்டு வாசலில் நின்று கோயிலைப் பார்த்த லாவண்யா உள்ளே நுழைகிறாள். தேர்த்திருவிழாவிற்கென உடுப்பதற்கு வைத்த அவளது நீட்டுப் பாவாடையும் சட்டையும் அப்படியே கிடக்கிறது. கட்டிலில் விழுகின்றாள், அழுகின்றாள்.

ஓர் இரவில் தூக்கத்திலிருக்கும் கமலாம்பிகையின் கைத்தொலைபேசியின் அலறல் அவளைத் தட்டி எழுப்பிக் கொள்கிறது.

"றிசல்ட் வந்திட்டுது என்ரை பிள்ளைக்கு நூற்றி அறுபத்து மூன்று புள்ளி பாஸ் பண்ணி விட்டாள். உங்கட பிள்ளைக்கு என்ன மாதிரி..." ஒரு பெற்றோர் ஆவலாக கேட்கிறார்.

பிள்ளை றிசல்ட் வந்திட்டுதாமடி என்றவாறு வேண்டாத கடவுளை யெல்லாம் வேண்டி தொலைபேசியில் சுட்டெண்ணை அழுத்துகின்றாள். கைத்தொலைபேசி நூற்றி இருபத்தாறு புள்ளி என் பதையும் சித்தியடையவில்லை என்பதையும் காட்டி நிற்கின்றது.

கமலாம்பிகையின் இரு கண்களிலிருந்தும் கண்ணீர் ஓடுகிறது. தாயாரின் கண்ணீரிலிருந்து லாவண்யா தனது நிலையை அறிந்து கொண்டு விழிபிதிங்கி நிற்கிறாள். சனியனே உனக்கு என்ன குறை விட்டனான்.பிறகு லாவண்யாவைப் பார்த்து முறைக்கிறாள். கமலாம்பிகை வீட்டில் உள்ளோரின் முகங்களும் வாடிவத ங்குகின்றது. லாவண்யாவின் உள்ளம் படபடக்கின்றது.

இதற்கிடையில் பல்வேறு இடங்களிலிருந்து தொலைபேசி அழைப்புக்கள் வந்து குவிகின்றன. கமலாம்பிகையால் யாருக்கும் பதில் கூற முடியவில்லை.

"நாயே நாளைக்கு நான் ஆற்றையும்கண்ணிலமுழிக்கலாமே...?" என மீண்டும் திட்டித் தீர்க்கின்றாள்.

"சனியனே எனக்கு முன்னாலே நிற்காதே எங்கையண்டாலும் போய்த்துலை" என மீண்டும் பேரிடியாக விழுகிறாள் கமலாம்பிகை.

கமலாம்பிகை தன் கைத்தொலைபேசியை நிறுத்திக் கொள்கிறாள். அவளுக்கு தூக்கம் வரவில்லை. அழுகிறாள். எழும்புகிறாள். மீண்டும் படுக்கிறாள்.

இதேபோல் படுக்கையிலிருக்கும் லாவண்யாவும் அழுது கொள்கிறாள். அவளது அழுகை க்குப் பல காரணங்கள் பரீட்சை யில் சித்திய டையாமை, தாயாரின் திட்டுதல், ஆறுதல் கூற யாரும் இல்லை என விரிந்து செல்கிறது.

கல்வி என்றால் இப்படித் தானா? இன்னும் எவ்வளவு காலம் இப்படி இருக்க வேண்டும்? இந்தப் பெரிய சுமையை என்னால் சுமக்க முடியுமா? பாடசாலைக்குக் கட்டாயம் போகத்தான் வேணுமா? ஏன் படிக்க வேணும்? என இன்று கல்வி மேல் ஒரு வெறுப்பு அடைந்தவளாக உள்ளாள் லாவண்யா.

**க.மு.ஞானி**

# மனம் போல் மாங்கல்யம்



பெண் பார்த்து விட்டு மாப்பிள்ளை வீட்டார் கிளம்பியதும் அவங்க ஓகே சொல்லிட்டாங்க.

நீ என்னம்மா சொல்றே? மகள் சுதாவிடம் கேட்டார் தந்தை சண்முகம்.

இந்த மாப்பிள்ளை வேண்டாம்ப்பா என்றாள் சுதா மிகவும் தெளிவாக.

ஏம்மா?

அவர் பெற்றோருடன் வந்து உட்கார்ந்தவர் நாம் ஹோலில் செய்திருந்த நேர்த்தியான அலங்காரம் ரம்மியமான மெல்லிசை எதையுமே கண்டுக்கலை வந்ததிலிருந்து அவரோட அப்பா, அம்மா தான் பேசி னாங்க. இவர் வாயைத் திறக்கல.வைத்த டிபன்னையும் குருவி மாதிரி கொறித்தார் திருப்தியா அள்ளி சாப்பிடலை.

நல்லா இருக்கா ...இல்லையா? என்ற எந்த உணர்ச்சியையும் வெளிப்படுத்தல. நான் அவர்களுக்கு மரியாதை செய்யும் போது கூட செல்போனில் பேசிக் கொண்டிருந்தவர். என்னை ஆர்வத்துடன் பார்க்கவில்லை . அவங்க பெற்றோர் பெண் பிடிச்சிருக்கா? என்றபோதும் வாய் திறக்காமல் தலையை மட்டும் ஆட்டினார். படித்தவர், வசதியான குடும்பம், கை நிறைய சம்பாதிக்கிறார். ஒழுக்கமானவர் எல்லாம் சரியப்பா. ஆனால் எந்தவித உணர்ச்சிகளையும் காட்டத் தெரியாத ரோபோ மாதிரி இருப்பவரை கட்டிக்கிட்டு என்னப்பா செய்யுறது?

நீ சொல்வது சரிதாம்மா . உன்னை என்னால புரிஞ்சுக்க முடியுது. வாழ்க்கையை ரசிக்கத் தெரிந்தவர் ஒருவர் கண்டிப்பாய் நமக்கு கிடைப்பார் கொஞ்சம் பொறுத்திருப்போம் என்றார் சண்முகம்.

சுதா மகிழ்ச்சியோடு ஓடி வந்து அப்பாவை அணைத்துக் கொண்டாள்.

# செய்வன திருந்தச் செய்



ஒருநாள் விமானத்தை சுத்தம் செய்யும் பணியாளன் ஒருவன் , பைலட் அறையை சுத்தம் செய்யும் போது விமானம் ஓட்டுவது எப்படி- முதல் தொகுதி என்ற புத்தகத்தைக் கண்டான். அவன் அந்தப் புத்தகத்தைப் பிரித்தான்.

முதல் பக்கத்தில் எஞ்சினை ஸ்டார்ட் செய்ய சிவப்பு கலர் பட்டினை அழுத்துக என எழுதி இருந்தது. அவன் விமானியின் இருக்கையில் அமர்ந்து சிவப்புக் கலர் பட்டினை அழுத்தினான். எஞ்சின் ஸ்டார்ட் ஆகிவிட்டது!

அவனுக்கு ஒரே குஷியாகிவிட்டது. இரண்டாவது பக்கத்தை புரட்டினான். விமானத்தை நகர்த்துவதற்கு நீல நிற பட்டினை அழுத்துக என எழுதி இருந்தது. அவனும் அப்படியே செய்தான். விமானம் நகர ஆரம்பித்து வேகமாக ஓடத் தொடங்கியது.

இப்போது அவனுக்கு பறக்கும் ஆசை வந்தது. மூன்றாவது பக்கத்தைப் பிரித்தான். விமானம் உயரே பறப்பதற்கு பச்சைக் கலர் பட்டினை அழுத்தவும் என்று இருந்தது.அவனும் பச்சைக் கலர் பட்டினை அழுத்தினான். விமானம் மேலெழும்பிப் பறக்க ஆரம்பித்தது.


அவன் மிகவும் உற்சாகமாக 20 நிமிடங்கள் வானத்தில் பறந்தான். தன் திறமையில் மிகவும் திருப்தி அடைந்தவனாக விமானத்தைக் கீழே இறக்க முடிவு செய்து புத்தகத்தின் நான்காவது பக்கத்தைப் பிரித்தான்.

அவ்வளவு தான்! அவனுக்கு மயக்கம் வந்து கை, கால்கள் நடுங்க ஆரம்பித்து விட்டன.

காரணம் நான்காவது பக்கத்தில் இப்படி எழுதி இருந்தது... விமானத்தை எப்படி கீழே இறக்குவது என்பதைக் கற்றுக் கொள்ள இந்தப் புத்தகத்தின் இரண்டாவது தொகுதியை அருகிலுள்ள புத்தகக் கடையில் வாங்கிப் படியுங்கள்!

# குழந்தைப் பேற்று மருத்துவத்தில் புதுமை

இங்கிலாந்து விஞ்ஞானிகள் ஐ.வி.எஸ். எனப்படும் புதிய தொழில்நுட்பத்தால் பெண்ணின் கருப்பையில் உள்ள குழந்தையின் செயற்பாட்டை பத்து நிமிடங்களுக்கு ஒருமுறை பார்ப்பதை சாத்தியமாக்கியுள்ளனர். இதற்கு முன்பு 24 மணி நேரத்திற்கு ஒருமுறை மட்டுமே காண முடியும். மேலும் யு.எஸ்.பி. மூலம் பெற்றோர்களுக்கு புகைப் படங்களாக எடுத்துக் கொடுக்கும் வசதியும் இந்த தொழில்நுட்பத்தில் உள்ளது. இதன் மூலம் குழந்தை உருவான நாளிலிருந்தே அதன் இயக்கங்கள், ஆரோக்கியம் குறித்த தகவல்களை சுலபமாகக் கணக்கிட முடியும். சின்ன மாற்றங்கள் , குறைகள் கூட வைத்தியர்களுக்கு எளிதாகத் தெரியவரும் என்பதால் குழந்தைப் பேறு மருத்துவ உலகில் இது ஒரு அருமையான கண்டுபிடிப்பாகப் பார்க்கப்படுகிறது.



# கடி ஜோக்ஸ்



"க்யூவில நிக்கிறவங்க கழுத்துல ஐ.டி கார்ட் தொங்குதே. எல்லாரும் இங்கே வேலை செய்றவங்களா?"


"இல்லை. ரெகுலரா இங்கே வர்றவங்க. ஏ.டி.எம் கார்டைத்தான் அப்படிப் போட்டிருக்காங்க!"



"இது சுகர் மாத்திரைனு சொன்னீங்களே டாக்டர்!"

"ஆமா... அதுக்கு என்ன இப்போ?"

"கசக்குதே!"



"கண்ணுக்கெட்டிய தூரம் வரை எதிரிகளே தென்படவில்லை மன்னா."

"அவ்வளவு தூரமா ஓடிவந்துவிட்டோம் மந்திரியாரே?"




"தன்னைத் தனியா விட்டுட்டு, எல்லோரும் போயிட்டாங்களேன்னு தலைவர் செம கடுப்பில் இருக்கிறார்."

"கட்சியில் இருந்தா?"

"இல்லை... வாட்ஸ்அப் குரூப்பில் இருந்து."



"தலைவரை, தொகுதிப் பக்கம் தள்ளிக்கொண்டுவந்த வர்தா புயலுக்கு நன்றி... நன்றி... நன்றி!"



"பயந்தாங்கொள்ளி போல கதவு, ஜன்னலை எல்லாம் இப்படி வேகமா அடிப்பதை நிறுத்திட்டு, நேருக்கு நேர் வாங்கடா பார்க்கலாம்!"

"அது வர்தா' புயல் தலைவரே!"



"ஏ.டி.எம் எல்லாம் காலியாக இருப்பதைப் பார்த்தால், நிலைமை சீராகி விட்டது போலிருக்கே!"

"நாம்தான் ஏ.டி.எம்-மில் பணமே போடுவது இல்லையே மன்னா!"



"எதிரி மன்னன் என்னை 'வர்தா... வர்தா...'னு கூப்பிடுறானாமே. ஏன் அமைச்சரே?"

"நேற்றைய போரில், நீங்கள் அந்த அளவுக்கு வேகமா ஓடிவந்திருக்கக் கூடாது மன்னா!"




"புலவருக்கு ஏன் சவுக்கடி கொடுக்கிறார்கள்?"

"மன்னர் காதில் ரத்தம் வருவதைப் பார்த்தும் தொடர்ந்து பாடிக்கொண்டே இருந்தாராம்!"

"போச்சு... போச்சு... எல்லாம் போச்சு மன்னா!"

"என்ன ஆனது தளபதி?"

"எதிரி, போர்க்களத்தில் ஏ.டி.எம் அமைத்து நம் படைவீரர்களைத் திசைத் திருப்பிவிட்டான் மன்னா!"




# 2016 இன் சிறந்த இருபது-20 துடுப்பாட்டக்காரர்கள் இவர்கள்தான்

இருபது–20 கிரிக்கெட் விளையாட்டின் அடித்து ஆடு அல்லது அவுட் ஆகு என்பது தான் இருபது–20 கிரிக்கெட்டின் பொலிசி. மூன்றரை மணி நேர ஆட்டம் தான், ஆனால் ஓவருக்கு ஓவர் எகிறும் சஸ்பென்ஸ் காரணமாக இருபது–20 கிரிக்கெட்டுக்கு பல கோடி ரசிகர்கள் இருக்கின்றார்கள். ஆறு பந்துகள் உங்கள் வாழ்க்கையை மாற்றிப் போடலாம்.

ஒரே ஒரு கட்ச், ஒரே ஒரு விக்கெட், ஒரே ஒரு சிக்ஸர், ஒருவரை உலகின் மூலை முடுக்கெல்லாம் கொண்டுபோய் சேர்க்கும் என்றால் எந்த கிரிக்கெட் வீரனுக்குத் தான் இருபது –20 கிரிக்கெட் ஆட ஆசை வராது? கிரிக்கெட் என்றால் இருபது– 20 தான். சினிமாவைப்போல, சூதாட்டத்தை போல, ஷேர் மார்க்கெட்டைப்போல ஓவர் நைட்டில் உலகப்புகழ் பெரும் பாக்கியம் இருபது–20 துடுப்பாட்டக்காரர்களுக்குத் தான் கிடைக்கிறது. இந்த ஆண்டு இருபது–20 கிரிக்கெட்டில் அசத்திய துடுப்பாட்டக்காரர்கள் யார் யார்?

### 1. விராட் கோலி

இருபது–20 போட்டியில் இந்தாண்டு விராட் கோலிக்கு பந்து வீசியவர்கள் மிரண்டு போய் கிடக்கிறார்கள். அவர் அதிகம் சிக்ஸர் அடிப்பதும் இல்லை, “ஓடி ஓடியே எப்படி இவ்வளவு எளிதாக ஓட்டங்களைச் சேர்க்கிறார் என புரியவில்லை. இவருக்கு எப்படி ஃபீல்டர்கள் நிறுத்துவது என்றே தெரியவில்லை” என எதிரணி தலைவர்கள் புலம்புகிறார்கள். கடந்த ஆண்டின் தொடக்கத்தில் அவுஸ்திரேலிய மண்ணில் நடந்த இருபது–20 தொடரில் மூன்று போட்டிகளிலும் அரை சதம் அடித்து இந்தியாவை வெற்றி பெற வைத்தார் கோலி. பாகிஸ்தான் அணிக்கு எதிராக ஆசியக் கோப்பை போட்டியிலும் சரி, உலகக்கோப்பையிலும் சரி அவர் ஆடிய சரவெடி ஆட்டம், காலிறுதியில் அவுஸ்திரேலியாவை நொறுக்கிய கதை ஆகியவற்றை ரீவைண்ட் செய்து பார்ப்பதே கிரிக்கெட் இரசிகர்களுக்கு பெரும் மகிழ்வு தரும்.



### 2. மக்ஸ்வெல்

பல்லேகல மைதானத்தில் செப்டெம்பர் மாதம் இலங்கைக்கு எதிராக மக்ஸ்வெல் ஆடிய ஆட்டம் அம்மாடியோவ்! அவுஸ்திரேலிய அணியில் ஒருநாள் போட்டி, டெஸ்ட் அணிகளில் மக்ஸ்வெல்லை கழற்றிவிட்டது அவுஸ்திரேலியா. இந்நிலையில் இலங்கைத் தொடரில் மோசமாக டெஸ்ட் தொடர் ஆடியது ஆஸி. இருபது–20 தொடருக்கு மட்டும் மக்ஸ்வெல் அழைக்கப்பட்டார். நான் ஓப்பனிங் துடுப்பாட்டக்காரனாக இறங்கணும் என அடம்பிடித்து களமிறங்கினார்.

தனது ஒட்டுமொத்த கோபத்தையும் அந்த மச்சில் பழி தீர்த்துக் கொண்டார் மக்ஸ்வெல். 65 பந்தில் 14 பவுண்டரி, 9 சிக்ஸர்கள் விளாசி 145 ஓட்டங்கள் எடுத்து நொட் அவுட்டாக களத்தில் நின்றார். என்ன நடக்கிறது என்றே புரியாமல் இலங்கை வீரர்கள் தவித்தனர். அடுத்த போட்டியிலும் 29 பந்தில் ஏழு பவுண்டரி, நான்கு சிக்ஸர்கள் எடுத்து 66 ஓட்டங்கள் குவித்தார் மக்ஸ்வெல். முன்னதாக ஜோஹனஸ்பேர்க்கில் தென்னாபிரிக்க அணிக்கு எதிராக 43 பந்தில் 75 ஓட்டங்கள் விளாசினார். எந்த வரிசையில் எப்படி இறக்கி விட்டாலும் சிக்ஸர் விளாசும் இந்த நாயகன் இருபது–20 ஃபார்மெட்டின் சூப்பர் ஸ்டார்.




### 3. ஜாஸ் பட்லர்

ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிராக மட்டும் தான் கடந்த ஆண்டில் ஒற்றை இலக்க ஓட்டங்களில் அவுட் ஆனார் ஜாஸ் பட்லர். அதிரடியாக ஆட வேண்டும் அதே சமயம் அணி இக்கட்டான நிலையில் இருக்கும்போது கடைசி வரை இருந்து ஃபினிஷர் ரோல் செய்ய வேண்டும் என்ற நிலை எப்போதெல்லாம் இங்கிலாந்து அணிக்கு ஏற்படுகிறதோ அப்போதெல்லாம் பட்லரை அழைப்பார் இங்கிலாந்து தலைவர் மோர்கன். அவரது நம்பிக்கையை காப்பாற்றி அணியை வெற்றிக்கு அழைத்துச் செல்வது பட்லரின் வழக்கம். தென்னாபிரிக்க தொடரிலும் சரி, உலகக் கோப்பையிலும் சரி, இலங்கைத் தொடரிலும் சரி ஃபினிஷர் ரோலை பக்காவாகச் செய்தார் பட்லர். அநேகமாக இருபது –20 போட்டிகளில் இங்கிலாந்தின் அடுத்த தலைவர் பொறுப்பு இவரைத் தேடி வரலாம்.




### 4. மார்டின் குப்தில்

இருபது–20 உலகக்கோப்பையின் முதல் போட்டியில் இந்தியாவும் நியூசிலாந்தும் மோதுகின்றன. மச் நாக்பூர் மைதானத்தில் நடக்கிறது. சுழலுக்கு சாதகமான மைதானம் என்பதால் அஷ்வினை முதல் ஓவர் வீசச் சொல்கிறார் டோனி. அஷ்வின் முதல் பந்தை வீச மிட்ஆன் திசையில் ஒரு சிக்ஸர் அடித்து உலகக்கோப்பை தொடரை ஆரம்பித்தார் குப்தில். அந்த பொசிட்டிவ் எனெர்ஜி தான் குப்திலின் பிளஸ். பாகிஸ்தான் அணி நியூசிலாந்துக்குச் சுற்றுப்பயணம் வந்திருந்த போதும் சரி, உலகக்கோப்பையிலும் சரி தனி ஆளாக நின்று பாகிஸ்தான் பவுலர்களின் பந்துவீச்சை சிதறவிட்டு நியூசிலாந்து அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றார்.

### 5. ஹாசிம் அம்லா

டக்கென ஜெர்க் அடித்துவிடாதீர்கள். பதற்றப்படாமல் படியுங்கள். டெஸ்ட் கிரிக்கெட்டில் கூட சுமாரான ஆட்டத்தை ஆடிய தென்னாபிரிக்கா சிங்கம் அம்லா. கடந்த ஆண்டு இருபது–20 கிரிக்கெட்டில் அதிரடி ஆட்டம் காட்டினார். இவர் நம்ம லிஸ்ரிலேயே இல்லையே என எதிரணி பவுலர்கள் நொந்தனர். அவுஸ்திரேலியாவுக்கு எதிராக கப்டவுனில் 62 பந்தில் 97 ஓட்டங்கள் விளாசினார் அம்லா. டிவில்லியர்ஸை விட இவர்தான் இருபது–20 போட்டிகளில் எதிரணிக்கு கடும் டார்ச்சராய் இருந்தார்.

### 6.ஜோ ரூட்

உலகக்கோப்பை இருபது–20 போட்டியில் தென்னாபிரிக்க அணிக்கு எதிராக, இங்கிலாந்து வீரர் ரூட் எடுத்த அதிரடி அரை சதம் அமர்க்களம். மும்பை வான்கடே மைதானத்தில் அன்று அவர் வெளுத்ததில் தென்னாபிரிக்காவின் உலகக் கோப்பை கனவுகள் சில நிமிடங்களில் கலைந்தன. இறுதிப்போட்டியில் மேற்கிந்திய அணிக்கு எதிராக இவர் அடித்த அரை சதம் இங்கிலாந்தை கௌரவமான ஓட்டங்கள் குவிக்க உதவியது. ஒருவேளை பிராத்வெயிட் அந்த நான்கு பந்துகள் மஜிக்கை நிகழ்த்தி யிருக்காவிட்டால் ரூட் தான் உலகக் கோப்பை நாயகனாக மிளிர்ந்திருப்பார்.






MIBM ஆனது புகைப்பட துறையில் மாத்திரமல்லாமல் முகாமைத்துவ கற்கை நெறியினையும் கற்பித்து வருகின்றது. முகாமைத்துவ டிப்ளோமா பயிற்சி நெறிகளும் எதிர்வரும் தை மாதம் 8 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட இருக்கின்றது. இதைப்பற்றிய விபரங்களை மேலும் தெரிந்து கொள்ள 077 661 5152 என்ற இலக்கத்துக்கு அல்லது info@mibm.lk என்ற முகவரியோடு தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளலாம். அத்தோடு www.mibm.lk என்ற இணையத்தளத்தின் மூலமாகவும் அறிந்து கொள்ளலாம். MIBM ஆனது கொழும்பு, நீர்கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய இடங்களில் தமது சேவையை வழங்கி வருகின்றது. MIBM ஆனது கல்வித்துறையில் மாத்திரமல்லாது Consultation, Recruitment ஆகிய துறைகளிலும் தனது பங்களிப்பை செய்து கொண்டு வருகின்றது. நட்டத்தில் இயங்கும் அல்லது எதிர்பார்த்த இலாபத்தை பெற முடியாமல் இருக்கும் நிறுவனங்கள் MIBM உடன் தொடர்பு கொண்டு அவர்களது Consultation சேவையை பெற்றுக் கொள்ளலாம்.



மேலும் நிறுவனங்களுக்கு பணியாட்கள் தேவைப்படும்போது அல்லது MIBM இன் மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு தேவைப்படும் போது அத்தேவையை MIBM இன் மூலமாக நிவர்த்தி செய்து கொள்ளலாம். இது மாத்திரமன்றி நிறுவனங்கள் தமது ஊழியர்களுக்கு முகாமைத்துவம் அல்லது ஆளுமைத்திறனில் பயிற்சியளிக்க வேண்டுமாயின் அவர்களும் MIBM உடன் தொடர்பு கொள்ளலாம்.

# காலத்தால் அழியாத கானங்கள் ...

பாடல்: பட்டிக்காடா பட்டணமா.....
படம்: மாட்டுக்காரவேலன்.
வரிகள்: கண்ணதாசன்.
பாடல்: எல்.ஆர்.ஈஸ்வரி, சௌந்தரராஜன்.




பட்டிக்காடா பட்டண்மா ரெண்டும் கெட்டா லெட்சணமா
ஆட்டம் பார்த்து நோட்டம் பார்த்து
ஆளை முடிவு கட்டனுமா
பட்டிக்காடா .... பட்டணமா....
ரெண்டும் கெட்டா.... லெட்சணமா...
பட்டிக்காடா பட்டணமா
ரெண்டும் கேட்டான் லெட்சணமா

இந்த மாமா நேற்று வரை மாட்டுக்காரன் தாண்டி
இப்போ தாம்மா கோட்டும் சூட்டும் மாட்டி வந்தாராண்டி
பாக்கலாமா கிட்ட வந்து மூக்கும் முழியும் தோண்டி
இது காங்கேயம் ... காளையடி...
தும்ப விட்டு... வாலை பிடி...
எதுக்க நின்னா முட்டுமடி
கயத்த போட்டு கட்டுங்கடி (பட்டிக்காடா )

என்னை மாமான்னு கூப்பிடுற மங்கையரே வாருமம்மா.....
ஏமாந்த சோனகிரி யாருன்னு பாருமம்மா.... பாருமம்மா......
(பட்டிக்காடா )

அம்மா நீங்க குனிஞ்சிருந்தா குட்டு போடுவீங்க
சும்மா வாங்க கொடுக்கட்டுமா
கன்னம் ரெண்டும் வீங்க
அம்மா நீங்க குனிஞ்சிருந்தா குட்டு போடுவீங்க
சும்மா வாங்க கொடுக்கட்டுமா
கன்னம் ரெண்டும் வீங்க
அய்யோ ஏங்க காலேஜ்க்கு போனீங்களா தூங்க
அட ய டி உ தெரியுமா எடுத்து சொன்னா புரியுமா (பட்டிக்காடா)

தட்டிக்கேட்க ஆளில்லாத குட்டிகள் தானோ
வெறும் வெட்டி பேச்சை பேசி வாயில் சுட்டிகள் தானோ
மரத்தை விட்டு நிலத்தில் வந்த மந்திகள் தானோ
மரத்தை விட்டு நிலத்தில் வந்த மந்திகள் தானோ
நீங்க மூக்கு வெளுத்து நாக்கு நீண்ட பிறவிகள் தானோ
அட காலு... அரை... முக்கால்... முழுசு....
எடத்தை பாத்து நின்னுக்கணும் எதுக்க நின்னா முட்டிக்ணும்
(பட்டிக்காடா)

# கனவுகளும் பலன்களும்



**கனவில் பாம்பு வந்தால்...**

ஒற்றை நல்ல பாம்பைக் கனவில் கண்டால் விரோதிகளால் தொல்லை உண்டாகும். இரட்டைப் பாம்புகளை கண்டால் நன்மை உண்டாகும். பாம்பைக் கொல்வதாக கனவு கண்டால் விரோதிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். பாம்பு கடித்து விட்டதாக கனவு கண்டால் தனலாபம் உண்டாகும்.

பாம்பு விரட்டுவதாக கனவு கண்டால் வறுமை உண்டாகும். காலைச் சுற்றிப் பாம்பு பின்னிக் கொள்வது போல் கனவு கண்டால் சனி பிடிக்கப்போகிறது என்று பொருள். பாம்பு கடித்து இரத்தம் வருவதாக கனவு கண்டால் பிடித்த சனி நீங்கி விட்டது என்று அர்த்தம்.

கழுத்தில் மாலையாகப் பாம்பு விழுவதாகக் கனவு கண்டால் பணக்காரன் ஆகலாம்.

**வெள்ளை நாகம் கனவில் வந்தால்**

இந்தக் கனவு ஒரு ஆபத்தை முன் கூட்டியே அறிவிக்கும் ஒரு முன்னோடியாகவே தோன்றுகிறது. தொடர்ந்த மனக் குழப்பத்துக்கும் மன சஞ்சலத்திற்கும் நீங்கள் அண்மைக் காலமாக ஆளாகியிருக்கிறீர்கள் எனக் காட்டுகிறது.

வெள்ளை நாகம் என்பது பொதுவாகவே எதிர்காலத்தை குறிக்கும். ஆகவே எந்தவித புது முயற்சிகளையும் மேற்கொள்ளும் போது ஒரு முறைக்கு இரு முறை சிந்தித்து செயற்படுங்கள். பாம்பாட்டியின் முகம் உங்களுக்கு தெரிந்த முகமா? இல்லையா என நீங்கள் குறிப்பிடவில்லை. அந்தப் பாம்பாட்டியின் ஜாடை நினைவிருந்தால் யோசித்து அவர் உங்கள் உறவினர்களுள் யாரை மாதிரி இருந்தார் என்பதை ஆராயுங்கள். நிச்சயம் அந்த உறவினர் மூலம் உங்களுக்கு வரக் கூடிய ஆபத்து விலகும். கனவின் இறுதியில் நீங்கள் அந்த பாம்பை உங்கள் வீட்டுக்கு வர முடியாமல் செய்திருப்பதும் மேலும் பெரிதான பாம்பு சின்னதானதும் நல்ல குறிகள். அவை உங்கள் ஆபத்தை நீங்கள் எப்படியும் வென்று விடுவீர்கள் என்பதை குறிக்கிறது.

ஆனாலும் இரண்டு பாம்புகள் என்பது தொடர் ஆபத்தைக் குறிக்கிறது. ஆகவே நீங்கள் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

நீங்கள் உங்கள் குடும்பத்தோடு உங்கள் இஷ்ட தெய்வக் கோயிலுக்கு சென்று வழிபட்டு வாருங்கள். நல்லது நடக்கும்!

**கனவில் பறவைகள் வந்தால்**

பறவைகளைக் கனவில் கண்டால் ஏற்படும் பலன்கள் பற்றிய விபரம் வருமாறு.

சிட்டுக் குருவியைக் கனவில் கண்டால் குடும்பத்தில் ஒற்றுமையும் அமைதியும் நிலவும். சிட்டுக் குருவி ஜோடி பிரிந்து விட்டது போலக் கனவு கண்டால் குடும்பத்தில் பிரிவு ஏற்படும்.

குருவிகளைக் கனவில் காண்பது நல்லது. கஷ்டங்கள் விலகும். வழக்குகளில் வெற்றி கிடைக்கும். நோய்கள் குணமாகும். வீட்டில் குருவி கூடு கட்டுவது போலக் கனவு கண்டால் திருமணமாகாதவருக்குத் திருமணம் நடக்கும். திருமணமாகியிருந்தால் புத்திர பாக்கியம் உண்டாகும். குருவிக் கூட்டைப் பார்த்தாலும் இதே பலன்கள் ஏற்படும்.

ஆனால் குருவிக் கூட்டைப் பிரிப்பது போலக் கனவு கண்டால் துயரச் சம்பவம் நடக்கும்.

குருவி அதன் குஞ்சுகளுக்கு இரையூட்டுவது போலக் கனவு கண்டால் வாழ்க்கையில் சந்தோசம் ஏற்படும். குருவிகள் மகிழ்ச்சியாக இருப்பதாகக் கனவு கண்டாலும் நல்லது தான். ஆனால் குருவிகள் சண்டையோடு வது போலக் கனவு கண்டால் குடும்பத்தில் பிளவு ஏற்படும். தொழிலும் கெடும்.

குருவிகள் இறந்து கிடப்பது போலக் கனவு கண்டாலும் கெட்டதுதான். வாழ்க்கையில் பிரச்சினைகள் உண்டாகும். ஏரியில் பறவைகள் கூட்டமாக இருப்பது போலக் கனவு கண்டால் குடும்பத்தில் திருமணம் போன்ற சுப காரியங்கள் நடக்கும். ஆனால் ஏரியில் பறவைகள் இறந்து கிடப்பது போலக் கனவு கண்டால் சோகமான செய்தியைக் கேள்விப்பட நேரும்.

ஆந்தையை தனியாகக் கனவில் கண்டால் பலவிதக் கஷ்டங்கள் ஏற்படும். முட்டையைசாப்பிடுவது போலக் கனவு கண்டால் வாழ்க்கையில் இறக்கமும் வசதிக் குறைவும் ஏற்படும். முட்டை வியாபாரம் செய்வதாகக் கனவு கண்டால் வியாபாரம் விருத்தியாகும். இலாபம் பெருகும். உடைந்து போன முட்டைகளைக் கனவில் கண்டால் பலவித சங்கடங்களுக்கு ஆளாக நேரும்.

பறவைகளைக் கனவில் கண்டால் நல்ல பலன்கள் ஏற்படும். பறவைகள் பறப்பது போல் கனவு கண்டால் செல்வம் கிடைக்கும். பறவைகளில் முட்டைகளைக் கனவில் கண்டால் தொழிலில் இலாபம் கிடைக்கும். பறவை அதன் குஞ்சுகளுக்கு உணவு ஊட்டிவிடுவது போல கனவு கண்டால் புத்திர பாக்கியம் ஏற்படும்.

(அடுத்தவாரம் தொடரும்)

# முன்நிர்மாணிக்கப்பட்ட வீடுகளைப் பெற விரும்பும் வடக்கு, கிழக்கு மாகாண மக்களுக்கான விண்ணப்பம் கோரல்



## முன்நிர்மாணிக்கப்பட்ட வீடுகள்:-

இன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் தேவைப்படுகிறது. அதன் பிரகாரம் முதற்கட்டமாக உடனடியாக பத்தாயிரம் (10,000) **முன்நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை** மிகவிரைவில் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. சர்வதேச நியமங்களுக்கு அமைவான, சூழல் மற்றும் சமூக அங்கீகாரத்துடன் கூடிய வசதியான இவ்வீடுகள், உலகின் பெயர்பெற்ற முன்னணி நிறுவனத்தின் ஊடாக நிர்மாணிக்கப்படவுள்ளது. இந்நிறுவனம் இவ்வீடுகளுக்கு 30 வருடகால உத்தரவாதத்தை அரசாங்கத்துக்கு வழங்கியுள்ளதுடன், குறைந்தபட்சம் 60-70 வருடகால பயன்பாட்டுக்குரியதென்றும் இந் நிறுவனத்தினர் சுட்டிக்காட்டுகின்றனர்.

## அமைப்பு:-

வசிப்பிட அறை, சமையலறை, தனியான கழிவறை மற்றும் இரு அறைகளுடன் கூடிய 550 சதுரஅடி பரப்பளவு கொண்ட வீடுகள்.

## வசதிகள்:-


- சூரியக்கல மின்சார வசதி
- குழாய் நீர்க்கிணறு
- சமையல் எரிவாயு அடுப்பு – சமையலறை அலுமாரி (Pantry Cupboard)
- மின்விசிறி – 03
- இலங்கை மின்சார சபையினால் வழங்கப்படும் மின்சாரத்தைப் பெறுவதற்கான கம்பிகளை (wiring) வீட்டில் பொருத்துதல்.
- சூழல் வெப்பத்தைவிட 3-5 பாகை செல்சியஸ் குறைவான சௌகரியமான வசிப்பிட சூழல் கொண்ட வீடுகள்.

## அழைப்பு:-

ஒஸ்கா ஒழுங்கை, செல்வபுரம், பலாலி வீதி, உரும்பிராய் தெற்கு கோப்பாயில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் இவ்வீடமைப்புத் திட்டத்தின் மாதிரி வீட்டினை பார்வையிட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிர்மாணிக்கப்படும் முன்நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கொடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இவ்வீடுகளைப் பெற விரும்புவோர் இந்த விளம்பரத்தில் இருக்கும் விண்ணப்பப்படிவத்தையோ அல்லது உங்கள் பிரதேச செயலகத்தில் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவத்தையோ பூர்த்திசெய்து 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15ஆம் திகதிக்கு முன் குறிப்பிட்ட கிராம அலுவலரின் அத்தாட்சியுடனும், பிரதேச செயலாளரின் ஒப்பத்துடனும் உங்கள் பிரதேச செயலகத்தில் நேரடியாகவோ, தபால் மூலமாகவோ சமர்ப்பித்து உறுதிச்சீட்டைப் பெற்றுக்கொள்ளவும். அந்த விண்ணப்பப்படிவத்தின் ஒரு பிரதியை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.





## முன்நிர்மாணிக்கப்பட்ட வீடமைப்புத் திட்டத்தின்கீழ் வீடொன்றைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப் படிவம்

1. குடும்பத் தலைவரின் முழுப் பெயர் : ..............................
2. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ..............................
3. தற்போதைய முகவரி : ..............................
4. கிராம அலுவலர் பிரிவு : ..............................
5. பிரதேச செயலாளர் பிரிவு : ..............................
6. நிரந்தர முகவரியும் வதிவிட முகவரியும் : ..............................
7. குடும்ப அங்கத்தவர்கள் எண்ணிக்கை : ..............................
8. காணி தொடர்பான விபரம்
   - 8.1. காணி அமைந்துள்ள முகவரி : ..............................
   - 8.2. கிராம அலுவலர் பிரிவு : ..............................
   - 8.3. பிரதேச செயலாளர் பிரிவு : ..............................
   - 8.4. உடனடியாக வீடமைக்கும் நிலையில் அக்காணி உள்ளதா? : ஆம் / இல்லை
   - 8.5. நீங்கள் வசிக்கும் காணியில் முன்நிர்மாணிக்கப்பட்ட வீட்டைக்கட்டுவதற்கு அனுமதியை அளிக்கின்றீர்களா? : ஆம் / இல்லை

என்னால் மேலே சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து விபரங்களும் சரியானவையென்றும் உண்மையானவையென்றும் இத்தால் உறுதிப்படுத்துவதோடு மேற்படி வீட்டுத்திட்டத்தின் கீழ் முன்நிர்மாணிக்கப்பட்ட வீடொன்றை பெற்றுக்கொள்வதற்கு எனது பூரண சம்மதத்தினையும் என்னால் மேலே குறிப்பிடப்பட்ட காணியில் முன்நிர்மாணிக்கப்பட்ட வீட்டை அமைப்பதற்கு எனது பூரண சம்மதத்தினையும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

..............................    ..............................
திகதி    விண்ணப்பதாரியின் ஒப்பம்

கிராம அலுவலரின் சான்றுப்படுத்தல்

விண்ணப்பதாரியினால் மேலே சமர்ப்பிக்கப்பட்ட விபரங்கள் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் அத்தாட்சிப்படுத்துவதுடன் இக்குடும்பம் உள்ளக இடம்பெயர்ந்த ஒரு குடும்பம் என்றும் இக்குடும்பத்திற்கு முன்நிர்மாணிக்கப்பட்ட வீடொன்றை வழங்குவது உகந்ததென்றும் சிபார்சு செய்கின்றேன்.

..............................    ..............................
திகதி    கிராம அலுவலரின் ஒப்பமும் பதவி இலச்சினையும்

பிரதேச செயலாளரின் சான்றுப்படுத்தல்

சிபார்சு செய்கின்றேன்/சிபார்சு செய்யவில்லை.

..............................    ..............................
திகதி    பிரதேச செயலாளரின் ஒப்பமும் பதவி இலச்சினையும்

செயலாளர்
சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு
இல.356 B, காலி வீதி
கொழும்பு-03.

# அபகீர்த்தியே மிஞ்சும்

காணாமற்போனவர்களின் உறவினர்கள் எதிர்கொள்ளும் மனஉளைச்சலை காணாமற்போகச் செய்ய இலங்கையில் இன்னும் அர்ப்பணிப்புடன் எந்த விதச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவில்லை.

மாறாக காலத்தை இழுத்தடிக்கும் நடவடிக்கைகளையே அரசாங்கங்கள் முன்னெடுத்து வருகின்றன.

இலங்கையில் உள்நாட்டுப் போர் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் பல கட்டப்போராட்டங்களில் காணாமற்போனவர்களின் உறவினர்கள் ஈடுபட்டுள்ளனர்.

ஆனால் அரசாங்கமோ ஆணைக்குழுக்களை அமைப்பதிலேயே குறியாகயிருந்தது.

மகிந்த ஆட்சியில் காணாமற்போனவர்களைக் கண்டறிய ஆரம்பிக்கப்பட்ட மக்ஸ்வெல் பரணகம தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழு காணாமற்போனவர்களைக் கண்டறிய ஆக்கபூர்வமான எந்தவித நடவடிக்கையிலும் ஈடுபடாமல் நட்டஈடு வழங்குவதிலும் மரணச் சான்றிதழ் வழங்குவதிலுமே அக்கறை காட்டியது.

சமுர்த்தி நிவாரணம் வழங்குவதாகவும் வீட்டுத் திட்டத்தில் உள்வாங்குவதாகவும் வாக்குறுதியளித்து மரணச் சான்றிதழை வழங்க முயற்சிகளை மேற்கொண்டபோதும் காணாமற்போனவர்களின் உறவினர்களின் உறுதியான நிலைப்பாட்டால் அந்த முயற்சி வெற்றியளிக்கவில்லை.

இறுதியில் காணாமற்போனவர்கள் என்ற சான்றிதழை வழங்க அரசாங்கம் அமைச்சரவையில் அங்கீகாரத்தையும் பெற்றது.

காணாமற் போனவர்களின் உறவினர்களுக்கு வழங்கப்படவுள்ள இந்தச்சான்றிதழ் மூலம உறவினர்களைத் தேடும் உறவுகளுக்கு ஆறுதல் கிடைக்கப் போவதில்லை. ஆனால், காலத்தை இழுத்தடிப்பதற்கான ஒரு சந்தர்ப்பம் அரசுக்கு கிடைத்துள்ளது.

கடத்தப்பட்டு காணாமற்போனவர்கள் தொடர்பாக இராணுவத்தினர் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை இராணுவத்தினர் தாமாகவே முன்வந்து ஏற்று விசாரணை செய்வார்கள் என யாரும் ஒருபோதும் நம்பவில்லை.

காணாமற்போனவர்கள் தொடர்பாக இதுவரை முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் அனைத்தும் காலத்தை இழுத்தடிக்கவும் காணாமற்போனவர்கள் தொடர்பாக சர்வதேச ரீதியாக வரும் அழுத்தங்களிலிருந்து அரசு தப்பித்துக் கொள்ளவும் மேற்கொண்ட நடவடிக்கையே.

காணாமற்போனவர்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாக சர்வதேச நாடுகளுக்கும் ஐ.நாவுக்கும் விளக்கமளிக்க தற்போது காணாமற்போனவர்கள் என்ற சான்றிதழை வழங்க முற்பட்டுள்ளது அரசு.

இந்நில்லயில் வடக்கு - கிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளில் நல்லாட்சி அரசு எனக்கூறப்படும் மைத்திரி - ரணில் அரசிடம் பல கோரிக்கைகளை முன்வைத்து காணாமற்போனவர்களின் உறவினர்கள் மற்றும் பொது அமைப்பினர் நேற்று முன்தினம் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

இதில் வவுனியாவில் நடைபெற்ற போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனின் உருவப் படம் எரிக்கப்பட்டு எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

இந்த எதிர்ப்பு - எரிப்பு நடவடிக்கை தமிழ் மக்கள் ஏமாற்றப் பட்டுக்கொண்டிருப்பதை வெளிப்படுத்துவதாகவே அமைந்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப்பீட உறுப்பினர்களின் உருப்படங்கள் மற்றும் கொடும்பாவிகள் இதற்கு முன்னரும் பல சந்தர்ப்பங்களில் எரிக்கப்பட்டன.

ஆனால், அந்தக் காலப்பகுதிகளில் உட்கட்சி முரண்பாடுகள் முற்றியிருந்ததால் அரசியல் ரீதியிலான காரணங்களைக்கூறி தப்பித்துக்கொண்டனர்.



இருப்பினும் தேர்தல் காலங்களில் காணாமற்போனவர்களின் விவகாரத்தை முக்கிய பிரசாரப் பொருளாகக் கையாளும் தமிழ் அரசியல்வாதிகளும் தேர்தல் வெற்றிக்குப் பின்னர் காணாமற்போய் விடுவதால் எப்போதும் காணாமற்போனவர்கள் தொடாபான கோரிக்கை தமிழர் தாயகத்தில் இருந்து கொண்டே இருக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

பிரிட்டனின் முன்னாள் பிரதமா டேவிட் கமரூன், ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் ஆணையாளர் திருமதி நவநீதம்பிள்ளை உள்ளிட்ட சர்வதேச தலைவர்கள் தமிழர் தாயகப் பகுதிகளுக்கு விஜயம் மேற்கொண்ட சந்தர்ப்பங்களில் கவனயீர்ப்புப் போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர்.

மகிந்த ஆட்சிக்காலத்தில் மக்களின் வேண்டுகோள்கள் அனைத்தும் நிராகரிக்கப்பட்ட நிலையில் அவரையும் மக்கள் நிராகரிக்க முற்பட்டதன் விளைவாக மைத்திரி- ரணில் தலைமையிலான கூட்டு அரசு உருவானது.

நல்லாட்சி அரசு என்று பெயர் சூட்டிக்கொண்ட இந்தக் கூட்டு அரசின் மீது தமிழ் மக்கள் அதீத நம்பிக்கை வைத்தனர். இந்த அரசை உருவாக்கியதில் பங்காளிகளாகத் தமிழர்கள் உரிமை கோரும் நிலையையும் பெற்றுக் கொண்டனர். ஆனால் துரதிர்ஷ்டவசமாக தமிழர்களின் எதிர்பார்ப்பை சிதறடிக்கும் வகையில் நல்லாட்சி அரசின் செயற்பாடுகளும் அமைந்துள்ளன.

மத்திய அரசு என்றால் அது இப்படித்தான் இருக்கும். மகிந்தவும் மைத்திரியும் வேறு நபர்களே. ஆனாலும் அரசின் கொள்கை ஒன்றுதான். ரணில் பிரதமராகயிருந்தாலும் எதிர்க்கட்சித் தலைவராகயிருந்தாலும் தமிழர் நலனில் அக்கறையின்றியே செயற்படுவார். தமிழர்களுக்கு பிரச்சினை ஏற்படும் போது மௌனமாக இருப்பார். பிரச்சினைகளைத் தீர்க்க முற்பட்டால் எதிர்ப்பார்.

தமிழர்கள் நிரந்தரத் தீர்வைப் பெற்று சிங்களவர்களுக்கு இணையாக வாழ வேண்டும் என்று கருதுவதில் தவறேதும் இல்லை. தனிநாட்டுக் கோரிக்கையை தமிழர்கள் கைவிடவேண்டும். ஆனால் தமிழர்கள் எதிர்பார்க்கும் சுதந்திரமான வாழ்க்கையை ஏற்படுத்திக்கொடுக்க தயாரில்லை.



யுத்தத்துக்குப் பின்னரான காலப்பகுதியில் தமிழர்கள் உரிமைகள் அனைத்தையும் இழந்து ஏதிலிகளாக சொந்த நாட்டுக்குள்ளேயே அவல வாழ்க்கையை வாழ்கின்றனர்.

இது தமிழர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனையா? தமிழர்களை சிங்கள அரசுகள் அனைத்தும் நிந்திப்பதற்கு என்ன காரணம்? தமிழர்களுக்கு உரிமைகளை வழங்குவதற்கு தடையாகவுள்ள காரணங்கள் என்ன? இதை அரசு வெளிப்படுத்த வேண்டும்.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அந்தஸ்து பெற்ற தமிழர் தரப்புக்கு உரிமைகளை கொடுக்க வேண்டிய பெரும் பொறுப்பு அரசைச் சார்ந்துள்ளது.

தமிழினத்துக்காக தம்மையே அர்ப்பணித்து உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு போராடியவர்களைப் பயங்கரவாதிகள் பட்டியலில் இணைத்து படுகொலைக்குட்படுத்திவிட்டு எஞ்சியவர்களை அடிமைகளாக வைத்திருக்க நினைப்பது ஜனநாயக விரோதமானது.

அதுவும் அந்த மக்களின் ஜனநாயக உரிமைகளை கபட நாடகமாடிப் பெற்றுவிட்டு நட்டாற்றில் விடுவது நல்லாட்சிக்கு நன்மை பயக்காது.

தமக்கான உரிமைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கோடு பிள்ளைகளைப் போராட்ட களத்துக்கு அனுப்பி வைத்த பெற்றோர் உயிரிழந்தவர்களை மறக்க முடியாது காணாமற்போனவர்களையும் காணமுடியாது கவலையுடன் கண்ணீர் மல்க வேண்டுவது கண்டும் கண்டு கொள்ளாது இருப்பது முறையல்ல.

எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தனின் மீது காணாமற்போனவர்களின் உறவினர்களுக்கு ஏற்பட்டுள்ள விரக்தி, கோபம் நாளை அரசியல் கைதிகளின் உறவினர்களுக்கும் ஏற்படலாம். அவர்களும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு கொடும்பாவிகளை எரிக்க முற்படுவர். பின்பு 2004 ஆம் ஆண்டுக்குள் நிரந்தர அரசியல் தீர்வு தமிழருக்கு கிடைக்கும் என்று கூறி ஏமாற்றியது. 2016 ஆம் ஆண்டுக்குள் தீர்வு என்று கூறி எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பிடிக்கும் முயற்சியில் வெற்றி கண்டது. ஆனால் தீர்வு முயற்சியில் கோட்டைவிட்ட அரசியல் சாணக்கியத்துக்கு எதிராக ஒட்டுமொத்த தமிழினமும் வெகுண்டெழலாம்.

இப்போது ஓரிரு இடங்களில் காட்டப்படும் எதிர்ப்புக்கள் தமிழர் தாயகம் எங்கும் வியாபித்து அரசியல் ரீதியில் மக்களின் எதிராளிகளாக மாறுவதைத் தவிர்க்க இந்த ஆண்டிலாவது முயற்சிக்க வேண்டும்.


ஓரிரு பாராளுமன்ற ஆசனங்களை வைத்துக்கொண்டு ஜாதிக ஹெல உறுமய, ஜே. வி.பி. போன்ற கட்சிகள் சிங்களவர்களின் உரிமைக்காக வெளிப்படுத்தும் எதிர்ப்பையாவது வெளிபடுத்தி தமிழ் மக்களின் நம்பிக்கையை காப்பாற்ற முற்படுங்கள்.

ஒரு சிலரின் பதவி ஆசைக்காக ஒட்டுமொத்த இனத்தையும் அடைவு வைக்காதீர்கள். நல்லாட்சியை நம்பி ஏமார்ந்துவிட்டோம் என்று 2017 ஆம் ஆண்டின் இறுதியில் கூறி தப்பிக்க முடியாது. இதைத் தமிழ் தலைமைகள் உணர்வது அவசியம்.

**எஸ்.ஆர்.கரன்**

# facebook

# சபாஷ் சீனா



அட இந்த திட்டம்கூட நல்லாத்தான் இருக்கும் போல என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டான் அனந்து.

தொலைக்காட்சி, ரேடியோ, பத்திரிகைகள் எங்கும் எதிலும், டிஜிட்டல்மயம் பற்றி விலாவாரியாக விபரித்ததைப் பார்த்தபின்தான் அப்படி ஒரு முடிவுக்கு வந்து சந்தர்ப்பத்தை எதிர்பார்த்தும் காத்திருந்தான்.

பழம் நழுவி பாலில் விழுவதுபோல்... அவனது அலுவலகத்தில் "மிஸ்டர் அனந்து நீங்க உடனடியா மும்பை போகணும், நம்ம கிளை அலுவலகத்தில ஏதோ பிரச்சினையாம், நீங்க அட்டெண்ட் பண்ணி தீர்த்துட்டு வாங்க சீக்கிரமா புறப்படுங்கோ" என கட்டளையிட்டார் ஜி.எம்.

தலையைச் சொறிந்தபடி சேர், மும்மை போக டூர் ஆட்வான்ஸ் வேணுமே என்று கேட்க, அட இன்னாப்பா நீ அதான் எல்லாம் டிஜிட்டல்மயமாகி வருதே, ஒன்னோட ஸ்மார்ட் போனை யூஸ் பண்ணி செலவு செஞ்சிட்டு அப்புறமாக கிளைம் பண்ணிக்க" என்றார். இவன் மனக்கணக்கும், ஜி.எம் யோசனையும் ஒன்று சேர செயற்படுத்த தொடங்கினான்.

முதலில் பிளைட் ரிட்டர்ன் டிக்கெட் புக் செய்தான். அதன் மெஸேஜை ஸ்மார்ட் போனில் பத்திரப்படுத்திக் கொண்டான்.

விமானத்தளத்தில், அவன் புக் செய்திருந்த ஏர் சர்விஸில், விபரம் சொல்லி பிளைட்டில் ஜன்னலோர இருகையில் அமர்ந்து இயற்கையின் எழிலான வானத்து மேகங்களை ரசித்தவாறே பறந்தான்.

விமானம் மும்பை போய் சேர்ந்த்து. அதன் பிறகு, ஒரு டாக்ஸியில் ஏறி, பயணம் செய்து டாக்ஸிக்கும் ஸ்மார்ட் போனிலேயே பணத்தை செலுத்தினான்.

கிளை அலுவலகம் போய் அங்குள்ள பிரச்சினைகளை கேட்டு தெரிந்து கொண்டான்.. பிரச்சினைகளுக்கான தீர்வை இன்னும் ஒரு மணி நேரத்தில சொல்றேன் என்று அங்குள்ளவர்களிடம் தெரிவித்தான்.

அரைமணி நேரம் கழிந்திருக்கும். அந்த அலுவலகத்தில் உள்ள கழிவறைக்குப் போனான. அங்குதான் வில்லங்கத்திற்கு அத்திபாரம் அமைக்கப்பட்டிருந்த்து.


அவனின் சட்டைப் பையிலிருந்த ஸ்மார்ட் போன் நழுவி கழிவறைக்குள் விழுந்து விட்டது. அவ்வளவுதான் அவனுக்கு உடம்பு வியர்த்து விட்டது.

ரிட்டர்ன் டிக்கெட்டின் விபரம் ஸ்மார்ட் போனில் மெஸேஜாக உள்ளது அல்லவா? அதைக் காண்பித்தால்தான் ஏர் போர்ட்டில் போர்டிங் பாஸ் தருவார்கள். என்ன செய்வது என்று தெரியாமல் முழித்தான்.

கிளை அலுவலகத்தில் விபரத்தைச்சொன்னான்அரைமணி நேரத்திற்கு முன்னால், இவன் முன் கைகட்டி நின்றவர்கள், இப்பொது கைகொட்டிகும்மாளமிட்டவாறே, இவருடைய பொருளையே. ஒழுங்கா வைச்சுக்க தெரியல. இந்த லட்சணத்துல, நம்ம அலுவலக பிரச்சினையை பெரிசா தீர்க்க வந்துட்டாரு என்று அவன் காது படவே கேலி செய்தார்கள்.

அனந்துக்கு அவமானமாய் போய்விட்டது, யோசித்தான். யோசித்தான். எல்லாம் டிஜிட்டல்மயம் என்கிறார்கள்.

சரியாக புரிந்து கொள்ளாமல்,, அவசரகுடுக்கையாக உடனே செயற்படுத்தி விட்டோம். அதற்கான பலனை அனுபவித்துதானே ஆகணும் என்று புலம்பியவாறே. அங்கு பணிபுரியும் ஒரு பணியாளரிடம் ஸ்மார்ட் போனை வாங்கி... மும்பை ஏர்போர்ட்



டில் விபரம் சொன்னான்.

அந்த ஏர்லைன் சர்வீஸ் பெண்மணி சேர், டோண்ட் வெரி எங்க சர்வீஸ் எப்பவுமே சிறப்பா இருக்கும், இதுபோல பயணிகள் தவற விடுறது சகஜம்தான், ஆதனால, நாங்க உங்கள் டீடெயில்ஸ் எங்க கம்ப்யூட்டர்ல வைச்சிருக்கோம், வந்து உங்க டிக்கெட் நகலை வாங்கிட்டு பிளைட்டுல போகலாம், யூ ஆர் ஓல்வேஸ் வெல்கம்" என்று அழகான ஆங்கிலத்தில் சொன்னார்.

மும்பை ஏர்போர்ட் போய் ரிடர்ன் டிக்கெட் நகலை வாங்கி கொண்டு, இருக்கையில் அமரந்து சாகவாசமான பின்பு என்னதான் டிஜிட்டல்மயம் இருந்தாலும், இந்த பேப் பருகத இருக்கிற மரியாதையேயே தனிதான் கணடுபிடிச்ச சீனாவுக்கு சபாஷ என்று மனதுக்குள்ளேயே பாராட்டிக் கொண்டான்.


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 944

Search for people, places and things · Nagendram · Home

### தினேசன்




### சிந்து





### ராகுலன்




### துஷியந்தன்




### சொருபன்




### தர்சன் குலசீலன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 66

## விற்றமின் C

விற்றமின் Cஆனது இழையங்கள், எலும்புகள் மற்றும் பற்கள் உட்பட உங்களுடைய உடம்பின் எல்லா பாகங்களினதும் வளர்ச்சிக்கும் மற்றும் மென் சவ்வுகளைப் புதுப்பித்தலுக்கும் தேவைப் படுகின்றது.

காயங்களைக் குணப்படுத்துவதற்கும் நோய் எதிர்ப்புச் சக்தி செயல்முறையின் தொழிற்பாட்டிற்கும் விற்றமின் C அத்தியாவசியமானதாகும்.

விற்றமின் C ஆனது விசேடமாக புதிய மற்றும் பச்சையான காய்கறிகளையும் பழங்களையும் உட்கொள்கின்றமையால் உடனடியாக கிடைக்கக்கூடியதாக உள்ளன.

சமைக்கின்றபோதும் செயல் முறைக் குட்படுத்தப்படுகின்ற போதும் விற்றமின் C ஆனது அழிக்கப்படுகின்றது. பிரதான உணவுக்குப் பின்னர் புளிப்பான பழங்களை உட்கொள்வதன் மூலமும் பச்சை இலை வறுவல்களுக்கு எலுமிச்சை பழச்சாற்றினை சேர்ப்பதன் மூலமும் விற்றமின் Cயைபெற்று, இரும்பு அகத்துறிஞ்சலை அதிகரித்துக் கொள்ளலாம்.

### விற்றமின் C அடங்கிய உணவுகளாவன

**பழங்கள்**

நெல்லி, கொய்யா, மரமுந்திரிகைப் பழம் (கஜு), நட்சத்திரப்பழம் புளிப் பானபழங்கள், (தோடை, எலுமிச்சை), பப்பாசிப்பழம் அன்னாசிப்பழம்.


**கடும் பச்சைநிற இலை காய்கறிகளும் ஏனைய காய்கறிகளும்**

முருங்கை இலை, அகத்தி இலை, வல்லாரை, கங்குன், முள்ளங்கி இலை, பீட்ரூட் இலை, முருங்கைக்காய், கறிமிளகாய், தக்காளி.

### உண்ணக் கூடியநார்பொருட்கள்

பழங்களிலும் காய்கறிகளிலும் உள்ள நார்பொருட்கள் குடலின் அசைவினை ஒழுங்காக்குவதற்கு உதவுகின்றன. அவ்வாறே, மலச்சிக்கல், எரிச்சல் ஏற்படக் கூடிய அரிப்புடனான குடல் அறிகுறிகள் மற்றும் குடல் புற்றுநோய் போன்றவற்றை தடுக்கின்றன. நார்ப்பொருட்கள் உணவு களின் நச்சுத்தன்மையை மறைமுகமாக அகற்றுகின்றன. மற்றும் கொலஸ்டரோலின் அகத்துறிசலையும் குறைக்கின்றன.

சந்தைகளிலிருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய பிற்சேர்க்கையான நார்ப்பொருட்களை விட உணவுகளிலிருந்து பெற்றுக் கொள்ளும் நார்ப்பொருட்கள் சிறந்தவை ஆகும்.




### நார்ப்பொருட்கள் அடங்கிய உணவுகளாவன

**தானியங்கள்**

- புலுங்கல் அரிசி, மண்ணிற அரிசி, குரக்கன், சோளம் மற்றும் முழுமணித் தானியங்கள்.

**பழங்கள்**

- பசன் புரூட் **(Passion Fruit)**, விளாம்பழம், கொய்யாப்பழம், வில்வம்பழம், பப்பாசிப்பழம், தோலுடனான அப்பிள் மற்றும் பெரிப்பழம் **(Pears)**, தோடம்பழம், உலர்ந்தபழங்களான பேரீச்சம்பழம், புருன்ஸ் **(Purnes)**, உலர்ந்த திராட்சை.

**காய்கறிகள்**

- அவித்தகரட், வெண்டிக்காய், பாவற்காய், பலாக்காய், கோகிலை புடலங்காய், பீர்க்கங்காய், முட்டைக்கோவா (Broccoli), பசளி இலை.

**பருப்புக்கள்**

- காய்ந்தபட்டாணி, கடலை, கௌபி, பயறு, அவரைவிதைகள்.

**கொட்டைகளும் விதைகளும்**

- பட்டாணி கொட்டைகள், துருவிய தேங்காய், பூசணிக்காய் விதைகள்.








மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமானஉங்கள் அபிப்பிராயங்களையும் 0768363858 என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.